Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 109 • 10.09.2017

இலங்கையின்
முதல் தர தமிழ்
வார இதழில் உங்கள்
வணிக விளம்பரங்கள்
நியாயமான விலைகளில்
இடம்பெற வேண்டுமா

உடனே அழையுங்கள்
076 82 555 67 / 60

தீபம் எப்பொழுதும் உங்களுக்கான
தன்னிகரில்லா சேவையை வழங்க முன்னிற்கும்



## சமுர்த்தி ஆட்சேர்ப்பில் மோசடி
ஆதாரம் உள்ளே

## விஜய மகாதேவி
புதிய சரித்திர தொடர்

## பஞ்சாப்பில் மாளிகை கட்டிய புலி உறுப்பினர்!

## மட்டக்களப்பு கர்ப்பிணி மரணம் நடந்தது என்ன?

Exclusive Report

இரகசிய முயற்சிகள் பற்றிய அதிர்ச்சி ஆவணங்கள்

# யாழ் குடிநீர் திட்டம் தனியாரிடம்!

வடமராட்சியில் இரசாயன தொழிற்சாலை

தலைமைக் காரியாலயம்
இல. 57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
077 722 6247

கிளைக் காரியாலயங்கள்
வேலணை, வங்களாவடிச் சந்தி
021 221 5472
மல்லாகம். கே.கே.எஸ் வீதி
021 224 3393
சங்கானை, ஓடக்கரை வீதி
021 225 1664

சசிகா
லேணர்ஸ்



இல. 281C
மணிக்கூட்டுக் கோபுர வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி
021 222 8004



NO 1 TOPAZ

TOPAZ

No. 01 Shop in Jaffna




திருமண பட்டுச்சேலை காஞ்சி புரம் பட்டுச் சேலை
சுடிதார் மற்றீயல்கள் மற்றும் ரெடிமேட் ஆடைகள்




ஆண்களிற்கான சூட் மற்றும் ரெடிமேட் ஆடைகள்




மிஸ் சுட்டி மிஸ் பியூட்டியாக வலம் வரும் சுட்டிச்
சிறுமியர்களிற்கான பஷன் ஆடைகள்

We are specialist in in
Wedding suits, Wedding Sarees , Party Sarees,
Wedding Frocks, Party Frocks and all kinds of Items

**TOPAZ**
No 72, Grand Bazaar
Jaffna
Tel 021 222 4743
Fax 021 222 7645

**TOPAZ TAILORING**
No 80/24, Kasthuriyar Road
Jaffna
Tel 021 222 4643
Email : topazagn@gmail.com

**TOPAZ MALL**
No 195, Power House Road
Jaffna
Tel 021 222 4933
021 221 9933




## தீபம் குடும்பத்துடன் இணைந்து பணியாற்ற விருப்பமா?

தமிழின் முதல் தர வார இதழ் தீபத்துடன் இணைந்து பணியாற்ற
துடிப்பான இளைஞர்கள், யுவதிகளை வரவேற்கின்றோம்

பின்வரும் பதவிகளில் கடமையாற்ற விரும்புவர்கள் இன்றே விண்ணபியுங்கள்

| பதவிகள் | எண்ணிகை |
|---|---|
| நிர்வாக உத்தியோகத்தர். | (1) |
| மாவட்ட இணைப்பாளர்கள். | (6) |
| சந்தைப்படுத்தல் முகாமையளார் | (1) |
| சந்தைப்படுத்தல்உத்தியோகத்தர்கள் | (6) |


(மாவட்டத்திற்கு ஒருவர் என்ற வகையில் தேர்வு முக தேர்வு இடம் பெறும்)


அலுவலக உதவியாளர் (1)

கிழக்கு மாகணத்தில் கடமையாற்ற விரும்புவர்களுக்கு
மட்டகளப்பில் இடம்பெறும்.

13/09/2017 திகதிக்கு முன்
விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி
நிர்வாகப் பணிப்பபாளர் (தீபம் வார மலர்)
நோர்சி மீடியா(பிறைவேற்) லிமிற்றட், 989/1 பருத்தித்துறை வீதி கல்வியங்காடு,
நல்லூர். யாழ்ப்பாணம் 0768255560,0214927561


யாழ் புகையிரத
நிலையத்துக்கு அருகாமையில்
சகல வசதிகளுடனும்
அதி உயர்தர
வலம்புரி ஹோட்டல்.






Green Grass
**The Valampuri**
148/10 Railway Station Rd, Jaffna 40000 Phone: 021 2 220111




TILKO hotels

# TILKO
## JAFFNA CITY HOTEL

Address: 70/6, K.K.S. Road, Jaffna, Sri Lanka
Tel: 021 222 5969, Fax: 021 222 7291
e-mail: tilko.tilak@gmail.com Web: www.cityhoteljaffna.com
**Mob : 077 780 393, 0777 696 443**






ரகுபா நிறுவனத்திற்கு தாளையடியில் வழங்க அடையாளமிடப்பட்ட காணி

### இரண்டாவது கடல்நீர் சுத்திகரிப்பு நிலையம்

# குடாநாட்டு நீர் விநியோக திட்டம் தனியாரிடம்!

## இரசாயன தொழிற்சாலை, பன்னாட்டு குளிர்பான நிலையத்திற்கும் நீர்?

**Exclusive Report**

யாழ்ப்பாணத்தில் குடிநீரே மருந்தாக மாறிவரும் சூழலில், யாழில் இரகசியமாக நீர் வியாபாரம் ஒன்று அரங்கேற்றப்பட்டு வருகிறது. குடிநீரை வழங்கும் போர்வையில் பன்னாட்டு குளிர்பான நிறுவனமொன்றிற்கு குடிநீரை வழங்கும் இரகசிய முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. பன்னாட்டு குளிர்பான நிறுவனத்திற்கு நீரை வழங்குவதுடன், குடாநாட்டு நீர் விநியோக திட்டமே தனியார் மயப்படும் பேராபத்தை ஏற்படுத்தியுள்ள இந்த இரகசிய முயற்சிகள் பற்றிய தகவல்களை தீபம் திரட்டியுள்ளது.

அவுஸ்திரேலியாவை சேர்ந்த ஒருவருக்கு சொந்தமான தனியார் நிறுவனமொன்று தாளையடியில் கடல்நீரை சுத்திகரிக்கும் நிலையத்தை நிறுவி, சுத்திகரிக்கப்பட்ட நீரை மக்களிற்கும், பன்னாட்டு குளிர்பான நிறுவனமொன்றிற்கும் விற்பனை செய்வதே இந்த திட்டம். அத்துடன் அந்த பகுதியில் இரசாயன தொழிற்சாலையொன்றை நிறுவவும் திட்டமிட்டுள்ளார்கள். அரச உயர்மட்டத்தினால் காதும் காதும் வைத்ததைபோல மிக இரகசியமாக முன்னெடுக்கப்படும் இந்த திட்டத்தை எதுவும் செய்ய முடியாமல் அதிகாரிகள் கையை பிசைந்து கொண்டிருக்கிறார்கள், வடமாகாணசபைக்கு எதுவுமே தெரியாதென்பதே மிகப்பெரிய அதிர்ச்சியான விடயம்! தனியாரின் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது மிகப்பெரிய ஆபத்தை ஏற்படுத்துமென்பதே யதார்த்தம்.

ஏற்கனவே தாளையடியில் நடைமுறைப்படுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள கடல்நீரை சுத்திகரிக்கும் நிலையத்தை முன்னிலைப்படுத்தி, அதன் மறைவில் இந்த தனியார் திட்டத்தை நடைமுறைப்படுத்தி, பன்னாட்டு குளிர்பான நிலைய நீர்த்தேவையை பூர்த்தி செய்வதே இந்த இரகசிய திட்டம். இதன் மூலம் குடாநாட்டின் நீர் விநியோகம் தனியார் மயப்படுவதுடன், இயற்கை சீரழிவுகள் ஏற்படும் அபாயமும் எழுந்துள்ளது.

யாழ்குடாநாட்டின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய, உடனடி சாத்தியமான வழியாக அடையாளப்படுத்தப்பட்டது தாளைடியில் கடல்நீரை நன்னீராக்குவது. குடாநாட்டின் பல்வேறு கடல்பகுதிகளில் நடத்தப்பட்ட ஆய்வின் முடிவில் தாளையடி உள்ளிட்ட சில இடங்கள், உப்பு செறிவு குறைந்ததாக அடையாளப்படுத்தப்பட்டன. இறுதியில் தாளையடி பகுதி நீர் சுத்திகரிப்பிற்கு பொருத்தமாக இனம்காணப்பட்டு, கடந்த ஒரு வருடமாக ஆய்வு பணிகள் நடந்து வருகின்றன. தாளையடியில் கடல்நீரை சுத்திகரிப்பதால் ஏதாவது பாதிப்பு ஏற்படுமா, மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல் எப்படி திட்டத்தை முன்னெடுப்பது என பல கட்ட ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. ஒரு வருடகாலம் முழுமையாக இந்த ஆய்விற்காக ஒதுக்கப்பட்டு, வருடத்தின் ஒவ்வொரு காலநிலையிலும் திட்டம் தொடர்பான ஆய்வுகள் நடந்து வருகின்றன.

கடல்நீரை சுத்திகரிப்பதால் அந்த பகுதி கடல்வாழ் உயிரினங்கள், இயற்கைவள அழிவு ஏற்படலாமென்ற அச்சம் மக்களால் எழுப்பப்பட்டு வந்தாலும், இதுவரையான ஆய்வுகள் இந்த அச்சம் தேவையற்றதென நிரூபித்துள்ளது. சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து வெளியேற்றப்படும் நீர், கரையிலிருந்து 500 மீற்றர் தொலைவில் வெளியேற்றப்படவுள்ளது. 1 லீற்றர் நீரில் இருந்து 500 மி.லீற்றர் சுத்திகரிக்கப்பட்ட நீர்தான் எடுக்கப்படும். எஞ்சிய நீர், உப்புச்செறிவாக, 500 மீற்றர் தொலைவில், 10 மீற்றர் ஆழத்திலிருந்து மேல் நோக்கி பீய்ச்சியடிக்கப்படவுள்ளது. சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து வெளியேற்றப்படும் உப்புச்செறிவுடைய நீர் கரையில் வெளியேற்றப்பட்டால் அங்கு உப்பு படிவுகள் ஏற்பட வாய்ப்புண்டு. அலை வேகம் அதிகமுள்ள இடத்தில் வெளியேற்றப்படுவதன் மூலம் கடலின் இயற்கை சமனிலையை குலைக்காமல் பாதுகாக்கலாமென கண்டறியப்பட்டுள்ளது.

கரையிலிருந்து 500 மீற்றர் தொலைவில் சடுதியாக கடல் ஆழமாவது, இரண்டு நீரோட்டமுள்ள கடல் போன்ற காரணங்களால் கழிவு வெளியேற்றப்படும் இடத்தில் உப்பு செறிவு அதிகமிருக்காது. ஆக, கழிவு வெளியேற்றப்படும் இடத்தை சூழவுள்ள 20 மீற்றர் பகுதியில்தான் உப்பு செறிவு அதிகமிருக்கும். இதுவும் வருடத்தில் குறிப்பிட்ட ஒரு காலநிலையில்தான். வருடத்தை நான்கு காலநிலைகளாக வகுத்து இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

இதுதவிர, திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பகுதியில் கரையிலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரம், 500 மீற்றர் அகல பகுதியை ஆய்வுசெய்ததில் அது கடல்பாலைவனம் என கண்டறியப்பட்டுள்ளது. இங்கு மீன் உற்பத்தி நடப்பதில்லை. நகர்ந்து கொண்டிருக்கும் மீன்கள்தான் இந்த பகுதியில் வசிப்பவை.

சுமார் ஒரு வருடமாக நடந்த ஆய்வில் தான் இந்த முடிவுகளை நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர். இதன் பின்னர்தான் திட்ட பணிகள் முன்னகர்த்தப்பட்டு வருகின்றன. இதற்கான கட்டுமானங்களை முடித்து, அடுத்த ஐந்தாண்டுகள் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆசிய அபிவிருத்தி வங்கி கிட்டத்தட்ட 70 மில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளது. குடாநாட்டு நீர்த்தேவையை பூர்த்திசெய்ய கடல்நீரை நன்னீராக்குவதை தவிர வேறுவழியில்லையா என்பதே முக்கியமான கேள்வி. ஏதோ காரணங்களால், மற்றைய திட்டங்கள் முன்மொழியப்படாமல் கடல்நீர் சுத்திகரிப்பு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. தாளையடி திட்டம் இதில் ஆபத்தில்லாததென அடையாளம் காணப்பட்டுள்ளது.


இந்த பரபரப்பிற்குள் யாருக்கும் தெரியாமல் இன்னொரு திட்டமும் நகர்த்தப்பட்டு விட்டது. வெளிநாடொன்றில் உள்ள ராஜன் சுந்தரம்பிள்ளை என்பவருக்கு சொந்தமான ரகுபா நிறுவனம் (tacuba (pvt) limited) கடல்நீரை நன்னீராக்கும் நிலையத்தை நிறுவ, அரச உயர்மட்டத்தில் அனுமதி பெற்றுள்ளது. இந்த நிறுவனத்திற்கு 10.486 ஹெக்ரெயர் நிலம் அங்கு அடையாளப்படுத்தப்பட்டு விட்டது. பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் இது பற்றிய யாரும் பேசவில்லை, வடமாகாணசபைக்கு விடயம் தெரியப்படுத்தப்படவில்லை, நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை அதிகாரிகளும் சம்பந்தப்படாமல் அரச உயர்மட்டத்தின் நேரடி தலையீட்டில் இந்த பணிகள் முன்னகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.


இப்படியான திட்டமொன்றை மக்களிற்கு பாதுகாப்பில்லாமல் நடைமுறைப்படுத்துவதென்றால், தற்போது தாளையடியில் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை (ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன்) மேற்கொள்வதை போன்ற நீண்ட ஆய்வு அவசியம். இப்படியான ஆய்வை செய்து காலத்தையும், பணத்தையும் விரயமாக்காமல் ஏற்கனவே ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் அரச நிறுவனங்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு,. ஆபத்தில்லையென அடையாளப்படுத்தப்பட்ட தாளையடி கடற்பகுதியில் தனியார் நிறுவனமொன்றிற்கு சத்தமின்றி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே அடையாளப்படுத்தப்பட்ட கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்தை மேற்கொள்ள நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு தாளையடியில் 10 ஏக்கர் அரச காணி வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மிக அண்மையான ரகுபா நிறுவனத்திற்கும் 10.48 ஹெக்ரெயர் நிலம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இந்த

தொடர்ச்சி 9-ம் பக்கம்...

# மட்டம் போட்ட உறுப்பினர்கள்: முதலாமிடம் ஆறுமுகன் தொண்டமான்!




பாராளுமன்றில் கடந்த மூன்று மாதங்களில் இருபத்தியொரு சபை அமர்வுகள் நடைபெற்ற போதும், பல உறுப்பினர்கள் சபைக்கு வருவது மிககுறைவு என்பதை புள்ளி விபரங்கள் வெளிப்படுத்தியுள்ளன. பதினெட்டு உறுப்பினர்கள் ஐந்திற்கும் குறைவான அமர்வுகளிலேயே கலந்து கொண்டுள்ளனர். இந்த வருடம் மே மாதம் முதல் ஜூலை வரையான கால பெறுபேறுகளை குறிப்பிடும் பாராளுமன்ற புள்ளிவிபரங்களே இதை வெளிப்படுத்தியுள்ளது. இந்த பதினெட்டு பேரில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகனும் உள்ளடங்குகிறார்.

சபாநாயகர் கரு ஜயசூரிய மற்றும் பதின்மூன்று உறுப்பினர்கள் மாத்திரமே மூன்று மாத காலப்பகுதியில் நடைபெற்ற இருபத்தியொரு அமர்விலும் கலந்து கொண்டுள்ளனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான்,குறித்த இருபத்தியொரு அமர்வுகளில் ஒரேயொரு அமர்வில் மட்டுமே கலந்து கொண்டார். ராஜாங்க அமைச்சர் மொஹான் லால் கிரேரு மற்றும் ஐ.ம.சு.கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர ஆகிய இருவரும் இரண்டு அமர்வுகளிற்கு மட்டும் சமூகமளித்திருந்தனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சுதந்திரக் கட்சியின் செயலாளர் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க மற்றும் அமைச்சர் பழனி திகாம்பரம் உள்ளிட்ட ஏழு பேர் நான்கு அமர்வுகளில் கலந்து கொண்டுள்ளனர்.

பாலித தேவபெரும, ஜோன்ஸ்டன் பெனாண்டோ, கீதா குமாரசிங்க உள்ளிட்ட எட்டு உறுப்பினர்கள் ஐந்து அமர்வுகளில் மட்டும் கலந்து கொண்டுள்ளனர்.

நாற்பது உறுப்பினர்கள் மொத்த அமர்வுகளில் ஐம்பது வீதமே கலந்து கொண்டுள்ளனர். எழுபத்தி நான்கு உறுப்பினர்கள் ஐம்பத்தியொன்று தொடக்கம் எழுபத்தைந்து வீதமே கலந்து கொண்டுள்ளனர். தொன்னூறுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் எழுபத்தியாறு தொடக்கம் தொன்னூறு வீதம் வரையான வரவை பதிவு செய்துள்ளனர். அமர்வுகளில் கலந்து கொள்பவர்களில் கணிசமானவர்கள் பாராளுமன்ற அமர்வில் முதல் ஒரு மணி நேரம் வரையே உட்கார்ந்திருப்பதாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபை அமர்வுகளுக்குச் சமூகமளிப்பதை ஊக்குவிக்கும் வகையில் அமர்வொன்றில் கலந்து கொள்ளும் நாடாளுமன்ற உறுப்பினருக்குவழக்கும்கொடுப்பனவினை 500 ரூபாவிலிருந்து 2500 ரூபா வரை இவ்வருடம் ஆரம்பம் முதல் அரசாங்கம் அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




# அனுராதபுர சிங்கள மக்களிற்கு திருகோணமலையில் காணி!

திருகோணமலையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சிங்கள குடியேற்றத்திற்கு எதிர்ப்பு வலுத்து வருகிறது. பாரம்பரிய தமிழ் பிரதேசத்தில் காடழித்து உருவாக்கப்பட்டுள்ள இந்த குடியேற்ற திட்டம், இனப்பரம்பலை சீர்குலைக்கும் நோக்கமுடையதென்று பிரதேச மக்கள் குற்றம்சுமத்துகிறார்கள். அனுராதபுரத்தை சேர்ந்த 160 சிங்கள குடும்பங்கள் இங்கு குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

தற்போது அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் யான் ஓயா திட்டத்தால் அனுராதபுரத்தில் பல சிங்கள மக்கள் இருப்பிடங்களை இழந்துள்ளனர். அவர்களிற்கு மாற்று காணிகள் வழங்கப்படுமென உறுதி கூறப்பட்டே திட்டம் முன்னெடுக்கப்பட்டது.


இந்த நிலையில, திருகோணமலையின் குச்சவெளி பிரதேசத்தில் அனுராதபுரத்தை சேர்ந்த 160 சிங்கள குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன. இதற்கான 160 ஹெக்ரெயர் காடு அழிக்கப்பட்டு குடியேற்றத்திட்ட பணிகள் துரிதமாக நடந்து வருகின்றன. அரச வீடமைப்பு திட்டத்தின் கீழ் துரிதகதியில் வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

வடக்கு கிழக்கில் பெருமளவு மக்கள் காணிகள் இல்லாமல் வாழ்ந்துவரும் நிலையில், அவர்களிற்கு காணிகள் வழங்காமல் வேறு பிரதேசங்களை சேர்ந்த சிங்கள மக்களிற்கு காணிகள் வழங்கலாமா என அந்த பகுதியில் கடுமையான கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. திருகோணமலையில் தமிழர் பிரதிநிதித்துவம் திட்டமிட்டு குறைக்கப்பட்டு வரும் நிலையில், புதிய சிங்கள குடியேற்றம் அமைக்கப்படுவதை தமிழ் அரசியல்வாதிகள் மௌனமாக பார்த்து கொண்டிருப்பதற்கும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. குறிப்பாக சமூகவலைத்தளங்களில் தமிழ் அரசியல்வாதிகள் கடுமையாக விமர்சிக்கப்பட்டு கொண்டிருக்கிறார்கள்.






▶ நடப்பு பாராளுமன்றத்தில் உறுப்பினர்களின் செயற்பாடுகளின் அடிப்படையிலான தரப்படுத்தலில் முதல் பத்து இடங்களில் உள்ள உறுப்பினர்கள். (பாராளுமன்றத்தில் ஆற்றும் உரைகள், பங்களிப்பின் அடிப்படையிலானது)




ஜூலை மாத பாராளுமன்ற செயற்பாடுகளின் அடிப்படையிலான தரப்படுத்தலில் முன்னணியில் உள்ள உறுப்பினர்கள். (பாராளுமன்றத்தில் ஆற்றும் உரைகள்) ▲



# உலகின் கண்ணீர் ரோஹிங்கியாக்கள்!

மியான்மரின் இராணுவ அரசாங்கம் ரோஹிங்யா முஸ்லீம்கள் மீது நடத்திக் கொண்டிருப்பது ஒரு இனஅழிப்பு என்பதில் சந்தேகமில்லை. மியான்மர் என்ற தேசத்தில் இருந்து முஸ்லிம் சிறுபான்மையினரான ரோஹிங்கியாக்களை அழித்து, அகற்றிவிடுவதென்பது ஆட்சி யாளர்களின் நோக்கமாக இருக்கிறது. ஒவ்வொரு வருடமும் வரும் பருவநிலைகளை போல ரோஹிங்யாக்கள் மீது மியான்மர் இராணுவம் நடத்தும் தாக்குதல்கள் அமைந்து விட்டது.

திடீரென மியான்மரை விட்டு அண்டை நாடுகளை நோக்கி ரோஹிங்யா அகதிகள் ஓடுவது, உலகளாவிய அனுதாபம் எழுவது, பின்னர் தாக்குதல்களை நிறுத்திக் கொள்வது, உலகம் அனைத்தையும் மறந்துவிடுவது, பின்னர் தாக்குதல் என ஒரு காலநிலை சுற்றுவட்டத்தை போல ரோஹிங்யாக்களின் துயர வாழ்க்கை அமைந்துவிட்டது.

மிகப்பெரிய நாடற்ற இனங்களில் ஒன்றாக ரோஹிங்கியா இனம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மியான்மரின் பௌத்த ஆட்சியாளர்கள் மத சிறுபான்மையினரை அங்கீகரிக்க தயாராக இல்லை. கிட்டத்தட்ட இலங்கையின் கதைதான். ஆனால், ரோஹிங்யாக்கள் தமிழரை விடவும் மோசமான நிலையில் இருக்கிறார்கள். கல்வி, பொருளாதாரத்தின் செழுமையடையாதது, மியான்மர் அரசின் வரைமுறையற்ற காட்டுமிராண்டித்தனம் என எல்லாம் சேர, சமகாலத்தில் உலகின் கண்ணீர்த்துளியாக மாறியுள்ளது ரோஹிங்யா விவகாரம்.

கடந்த ஓகஸ்ட் மாதம் தொடக்கம் சுமார் 87,000 ரோஹிங்யாக்கள் அண்டை நாடான பங்களாதேஷிற்குள் தஞ்சமடைந்துள்ளதாக ஐ.நா புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. கடந்த சில வாரங்களில் சுமார் 3,000 பேர் கொல்லப்பட்டிருக்கலாமென கருதப்படுகிறது. ஆனால் இதை உறுதிசெய்யும் மூலங்கள் கிடையாது. அப்படியொரு போர்க்கள வாழ்க்கைதான் ரோஹிங்யாக்களிற்கு.

கிராமங்களை கொளுத்துவது, மக்களை உயிரோடு எரிப்பது என மனது பதைக்கும் அத்தனை கொடூரங்களும் அவர்கள் மீது அரங்கேற்றப்படுகிறது. இதுபோதாதென, கொலைவலயத்திலிருந்து அண்டைநாடுகளிற்கு தப்பிச்செல்லும் போது நீர்ப்பரப்புக்களில் சிக்கி இறப்பவர்கள் தனிக்கணக்கு. அண்மையில் இப்படி உயிரிழந்த சிறுமியொருவரின் புகைப்படம் வெளியாகியிருந்தது. சில வருடங்களின் முன்னர் சிரியாவிலிருந்த தப்பிச்சென்ற அய்லான் என்ற குழந்தை இறந்து கரையொதுங்கியது. இந்த புகைப்படம் வெளியாகி, உலகத்தின் மனச்சாட்சியை உலுக்கியது. அய்லானிற்காக இந்த உலகமே கண்ணீர் சிந்தியது. ஆனால், அதே விதமாக இறந்த, கிட்டத்தட்ட அதே வயதான ரோஹிங்யாவின் அந்த பெண் குழந்தையின் மரணம் உலகத்தின் மனச்சாட்சியை உலுக்கவில்லை.

உலகத்தின் மனச்சாட்சி விழித்துக்கொள்வதும் நலன்களை பொறுத்தது என்பதை பல தசாப்தங்களாக அனுபவபூர்வமாக கண்டுணர்ந்த இனம் நமது. சிரியாவிற்கு எதிரான மனநிலையை எல்லாவழிகளிலும் தூண்டிக்கொண்டிருந்த மேற்கு ஊடகங்கள் அய்லானின் இறந்த உடலை, அரசியல் நோக்கங்களுடன் காண்பித்து, பெரும் உணர்வலையை கிளப்பிவிட்டன. அதேவிதமாக நீரில் மிதந்தாள் ஒரு ரோஹிங்யா பிஞ்சு. மியான்மரின் ஜனநாயக ஆட்சியை சங்கடத்திற்குள்ளாக்க மேற்கு நாடுகள் தயாராக இல்லை. இதனால் ரோஹிங்யாக்களையும் யாரும் கணக்கெடுக்கவில்லை. சடலமாக நீரில் மிதந்த அந்த பிஞ்சின் மரணமும் யாரையும் உலுக்கவில்லை.

இதில் துயரம் என்னவெனில், ஜனநாயக தேவதையாக மேற்கு ஊடகங்களால் நிறுவப்பட்ட ஆங் சான் சூகியின் அரசுதான் இன்று ஆட்சியில் உள்ளது. அரசும், இராணுவமும் மியான்மரில் வேறுவேறு அலகுகளாக இருந்தாலும், ரோஹிங்யாக்களிற்கு என்றுமே குரல்கொடுத்தவர் அல்ல சூகி. அவரது இலக்கெல்லாம் ஆட்சிமாற்றம். மியான்மர் பௌத்த தேசத்தை இராணுவ ஆட்சியிலிருந்து விடுவிக்கும் ஒரு கருவியாக இயங்கினார். மியான்மரை இராணுவ அரசிடமிருந்து மீட்கும் மேற்குலக நலன்களும் சூகியும் இணைந்த புள்ளியில், அவர் அனைத்துலக அமைதிப்புறாவாக சித்தரிக்கப்பட்டார்.

இந்த பிம்பத்துடன் சூகியை இன்று அணுக முடியாது. அவர் மியான்மரை அப்படியே பேண விரும்பும் பௌத்த மத ஆட்சியாளர்களின் இன்னொரு பிரதிநிதி. அவ்வளவுதான். ரோஹிங்யாக்களின் கண்ணீரம் சூகியின் மனிதாபிமானமும் ஒன்றுடன் ஒன்று தொடர்பானவை அல்ல. ரோஹிங்யாக்கள் குறித்த பேச்சுக்களிற்கே தயாரில்லையென சூகி கறாராக கூறிவிட்டதையும் குறிப்பிட வேண்டும். அமைதிக்காக நோபல் பரிசை வென்ற சூகியின் மனிதாபிமானம், சுய இன அடக்குமுறையை கடந்து செல்ல தயாராக இல்லை. சூகியின் இந்த அணுகுமுறை நோபல் பரிசு குறித்த நம்பிக்கையீனங்களையே ஏற்படுத்தி விடும்.

ஆனாலும், ஈழத்தமிழர்கள் ரோஹிங்யாக்களின் கண்ணீரையும், வலியையும் உணர்ந்துள்ளார்கள். ஏனெனில், இது ஈழத்தமிழர்களின் கண்ணீரும் வலியும்தான். உலகம் உங்களை கைவிட்டாலும் எமது தோழமை உண்டென்பதை இந்த சமயத்தில் ஈழத்தமிழர்கள் ரோஹிங்யாக்களிற்கு சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ரோஹிங்யாக்களிற்கு நீதி வேண்டி தன்னெழுச்சியாக தமிழர் பகுதிகளில் நடக்கும் போராட்டங்கள் இதற்கு சான்று. தமிழர்கள் ரோஹிங்யாக்களுடன் நிற்கும் தருணம் இது.

தீபம்
989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்
(கல்வியங்காடு இலங்கை வங்கி கட்டிட தொகுதி)
ஆசிரியர்பீடம்: 0214927562
அலுவலகம்: 0214927561
விநியோகம்: 0214927542
விளம்பரம்: 0768255560
செய்திகளிற்கு: deepamdesk@gmail.com

# மௌனமாக கடந்த வந்தாறுமூலை படுகொலை!



செப்டம்பர் 5 தமிழ் மக்கள் வாழ்வில் மறக்க முடியாத மற்றுமொரு படுகொலை நினைவு நாள்.

கிழக்குப் பல்கலைக்கழகப் படுகொலை (வந்தாறுமூலை வளாகப் படுகொலை) நினைவுநாள் கடந்த 5ம் திகதி கடந்து சென்றது. தமிழ் சமூகத்தில் அவ்வளவாக கவனத்தையும் ஈர்க்கவில்லை. ஒரு பெரும் துயரத்தை மௌனமாக கடந்து சென்றுள்ளோம்.

1990 ஆம் ஆண்டு செப்டம்பர் 5 ஆம் நாள் மட்டக்களப்பு மாவட்டத்தில் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தஞ் சமடைந்திருந்த தமிழ் அகதிகள் 158 பேர் இலங்கை இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டுப் பின்னர் படுகொலை செய்யப்பட்ட கொடூரத்தின் நினைவுநாள் அது.

அதே மாதம் 23 ஆம் நாள் மேலும் 16 பேர் கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டனர். இலங்கை இராணுவத்தினரே இவர்களைக் கைது செய்ததாக நேரில் கண்ட சாட்சியங்கள் தெரிவிக்கின்றன.

இப்படுகொலைகள் குறித்து விசாரணை செய்ய இலங்கை அரசு சனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமித்திருந்தது. விசாரணை முடிவுகள் சட்டவிரோதக் கைது மற்றும் படுகொலைகள் இடம் பெற்றுள்ளதை உறுதிப்படுத்தியது.

அத்துடன் இதில் சம்பந்தப்பட்டோரையும் அது இனக்கண்டிருந்தது. ஆனாலும் இது குறித்து மேலதிக விசாரணைகள் எதுவும் இடம்பெறவில்லை.

1990 ஆம் ஆண்டில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே அமைதிப் பேச்சுக்கள் முறிவடைந்ததை அடுத்து, கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பல இராணுவ நடவடிக்கைகளை இலங்கை அரசுப் படைகள் மேற்கொண்டிருந்தன.

வாழைச்சேனையில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் வந்தாறுமூலை, சுங்கன்கேணி, கறுவாக்கேணி போன்ற கிராமங்களில் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்ட போது இப்பகுதிகளில் இருந்த மக்கள் பாதுகாப்புக் கருதி இடம் பெயர்ந்து வந்தாறுமூலையில் உள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தஞ்சமடைந்திருந்தனர்.

வளாகத்தில் கடமையில் இருந்த பல்கலைக்கழக ஆசிரியர்கள், ஊழியர்கள் இவர்களைப் பராமரித்து வந்தனர். பல்கலைக்கழக முன்றலில் வெள்ளைக் கொடியும் கட்டப்பட்டிருந்தது. பல்கலைக்கழக ஆசிரியர்களின் மனித உரிமைகள் அமைப்பு (UTHR) நேரில் கண்ட சாட்சியத்தைப் பதிவு செய்திருந்தது.

"ஏழு நாட்களில் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் 55,000 அகதிகள் நிறைந்திருந்தனர். எட்டாம் நாள் வெள்ளைக் கொடியையும் பொருட்படுத்தாது இராணுவத்தினர் வளாகத்தினுள் நுழைந்தனர். அவர்களுள் தமிழ் துணை இராணுவக் குழுவினரும், ஊர்காவல்படையினரும் வந்திருந்தனர்.

யார் யார் இங்கு இருப்பதாக எம்மிடம் அவர்கள் கேட்டனர்.

"வாழைச்சேனை, ஆறுமுகத்தான் குடியிருப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் நாம்" எனப் பதிலளித்தோம்.

நாங்கள் உரையாடிக் கொண்டிருந்த போது இரண்டு பேருந்துகள் வளாகத்துக்குள் வந்தன. எம்மை அவர்கள் வரிசையில் நிற்க வைத்து எம்மில் 138 இளைஞரை (இவ்வெண்ணிக்கை 158 ஆகப் பின்னர் திருத்தப்பட்டது) தேர்ந்தெடுத்து பேருந்துகளினுள் ஏறச் சொன்னார்கள்.

உறவினர்களும் பெற்றோர்களும் "அவர்களைக் கொண்டுசெல்லவேண்டாம்" எனக் கேட்டுக் கதறினர். ஆனாலும் அவர்களைக் கைது செய்து அழைத்துச் சென்றார்கள். கொண்டு செல்லப்பட்டவர்களின் பெயர் விபரங்களை நாம் சேகரித்துள்ளோம். பின்னர் அனைத்து இராணுவ முகாம்களுக்கும் சென்று அவர்களைப் பற்றி விசாரித்தோம். ஆனாலும் அவர்கள் எவரையும் தாம் கைது செய்யவில்லை என இராணுவத்தினர் கூறினர்."

முதல் நாள் கைதின் பின்னர் மீண்டும் அதே மாதம் 23 ஆம் நாள் மேலும் 16 பேர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர். இதனை அடுத்து இந்த அகதிகள் முகாமை மூடி விடுமாறும் எஞ்சியுள்ளோரைக் காட்டுப் பகுதிக்குள் செல்லுமாறும் விடுதலைப் புலிகள் கூறியதை அடுத்து முகாம் மூடப்பட்டது. பெரும்பாலான அகதிகள் காட்டுப் பகுதிகளுக்குள் தஞ்சமடைந்தனர்.

இவர்களில் பலர் இலங்கை இராணுவத்தினரின் வான் தாக்குதல்களுக்கு இலக்காயினர். ஏனையோர் பின்னர் தமது இருப்பிடம் திரும்பினர்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமற்போனோர் குறித்து விசாரணை மேற்கொள்ளுவதற்காக நீதிபதி கி. பாலகிட்ணர் தலைமையில் மூன்று பேரடங்கிய சனாதிபதி ஆணைக்குழு ஒன்றை அன்றைய அரசுத் தலைவர் சந்திரிக்கா குமாரதுங்க 1994, நவம்பர் 30 ஆம் நாள் அமைத்திருந்தார். எல்.டபிள்யூ. ஆர்.ஆர்.வித்தியாரத்தின, கலாநிதி டபிள்யூ.என்.வில்சன் ஆகியோர் ஏனைய உறுப்பினர்கள் ஆவர். இக்குழுவின் இறுதி அறிக்கை 1997 செப்டம்பரில் வெளியிடப்பட்டது. இவ்வறிக்கையின் படி, வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகக் கைதுகள் இம்மாவட்டத்தில் இடம்பெற்ற மிகப் பெரும் குழு முறையிலான கைதுகள் எனத் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் 158 பேரின் பெயர் விபரங்களும் ஆணைக்குழுவின் முன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 83 பேர் சாட்சியமளித்தனர். இவர்கள் 92 பேரின் கைதுகள் குறித்துச் சாட்சியமளித்திருந்தனர். இரண்டாவது தடவை கைது செய்யப்பட்டவர்களில் 10 பேர் குறித்தும் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

வலி சுமந்த இந்த இனப்படுகொலையின் கோர நினைவுகளின் வரிசையில் 158 பேரும் கைது செய்யப்பட்ட நாள், கிழக்கு மாகாணத்தில் பரவலாக நினைவு கூரப்படுகிறது. எனினும், இம்முறை அதை கணிசமானவர்கள் மௌனமாகவே கடந்து சென்றதே பெருந் துயரம்.





புதிய ஜனநாயக கட்சி
தலைவர் சி.க.செந்தில்வேல்

## புத்தூர் மயான சர்ச்சை

# குடும்ப பகையா எரியும் பிரச்சனையானது?

### சாதிய பிளவை தூண்டும் சக்திகளும் ஊடுருவ முயற்சி

சரவணபவ
ஆனந்தன் செந்தூரன்

புத்தூரில் மயானத்தை அகற்ற கோரி மக்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகிறார்கள். மயானங்களிற்கு நடுவில் மக்கள் வாழ முடியாது, மக்களின் கோரிக்கை தார்மீக நியாயமுடையது என்றபோதும் இந்த போராட்டம் அதிகம் பொதுவெளியில் கவனத்தை ஈர்க்கவில்லை. நியாயமான கோரிக்கையிருந்தும், ஏன் கவனம் ஈர்க்கவில்லை?

இது மிக சிக்கலான கேள்வி. ஆரம்பத்தில் இந்த போராட்டத்தை ஒரு சாதிய ஒடுக்குமுறை போராட்டமாக சித்தரிக்க பலரும் முயன்றனர். குறிப்பாக போராட்டத்தை ஒழுங்குசெய்திருந்த, புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிச கட்சி இப்படியொரு அபிப்பிராயத்தை ஏற்படுத்த முயன்றது. போராட்டகளத்திற்கு தார்மீக ஆதரவுக்காக அழைக்கப்பட்டவர்கள் பலரிடம், இதே சாரப்பட பிரச்சனையின் காரணத்தை கூறியுள்ளனர்.

இதேசமயத்தில் வெளிநாடுகளில் இருந்து இங்கு வந்த பலர், அதீத உணர்ச்சிவசப்பட்டு நிலவரத்தை புரியாமல், சாதிய சர்ச்சையாக இதை சித்தரிக்க முயன்றனர். குறிப்பாக ஐரோப்பாவில் இயங்கிய தலித் முன்னணியின் பிரமுகர்கள் இப்படியான பிரசாரத்தை முன்னெடுத்தனர். தமிழர்கள் மத்தியில் சாதிய பிளவை தூண்டிவிடும் முயற்சிகளில் ஈடுபடுவதாக இவர்கள் மீது ஏற்கனவே கடுமையான குற்றச்சாட்டுகள் இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் யதார்த்தம் அப்படியிருக்க வில்லை. மயான பிரச்சனையின் எந்த சந்தர்ப்பத்திலும் சாதிய பிளவில்லாமல் இருந்தபோது, அதற்கு சாதிய சாயம் பூச முயன்றது, போராட்டத்தின் நம்பகத் தன்மையை பரவலாக ஏற்படுத்தியது. ஒரே சமூகத்தை சேர்ந்த இரண்டு கிராமத்தவர்களிற்கிடையிலான முரண் பாடு இது. இதன் பின்னணியில் வேறும் பல காரணங்கள் துணை காரணங்களாக உள்ளன என்ற தகவல்களும் உள்ளூரில் பரவலாக உள்ளது.

புத்தூர் மேற்கு கலைமதி கிராமமும், சிறுப்பிட்டி கிராமமுமே சர்ச்சைக்குரிய கிராமங்கள். கிந்துசிட்டி மயானம் தமது பாரம்பரிய மயானம் என்கிறார்கள் சிறுப்பிட்டி மக்கள். தமது குடியிருப்புக் களிற்கு அருகில் சடலங்களை எரிக்க வேண்டாம் என்கிறார்கள் கலைமதி கிராம மக்கள். இதுதான் வெளியில் தெரியும் சர்ச்சை.

மயானங்களிற்கு அருகில் மக்கள் குடியிருப்புக்கள் இருக்க முடியாது என்பது நியாயம்தான். ஆனால் கிந்து சிட்டியில் நடந்தது வேறு. மக்கள் குடியிருப்புக்களிற்குள் மயானம் செல்ல வில்லை. மயானத்திற்குள் மக்கள் குடியிருப்புக்கள் சென்றன என்பதே உண்மை. மயானத்திற்குள் ஏன் மக்கள் குடியிருப்புக்கள் சென்றன? ஒரே சமூகத்தை சேர்ந்த இரண்டு கிராமங்கள் ஏன் பகை வளர்த்து நிற்கிறார்கள்? இதற்கு பதில்தேடி சென்றால், எல்லாமே ஒரே புள்ளியில் சந்திக்கின்றன. எல்லோரையும் தலை சுற்றவைக்கும் புள்ளியது.

சர்ச்சைக்குரியதாக மாறியுள்ள சிறுப்பிட்டி மேற்கு கிந்துசிட்டி மயானம் 54 பரப்புடையது. கிட்டத்தட்ட 200 வருடங்கள் பழமையானது. சிறுப்பிட்டி கிழக்கு, மேற்கு, வடக்கு, புத்தூர் மேற்கு, கிழக்கு என ஐந்து கிராமங்களின், நான்கு சமூகங்களின் சுமார் மூவாயிரத்திற்கு அதிக குடும்பங்கள் பாரம்பரிய மயானம். எல்லா சமூகத்தினரும் ஒரே தகன மேடையை பயன்படுத்தி வருகிறார்கள் என்பது ஒரு முக்கியமான சமூக மாற்றம்.

மயானத்தின் கிழக்கு பகுதியிலுள்ள காணியில் க.துரைராசா என்பவரின் 72 பரப்பு காணியை கார்த்திகேசு கதிர்காமநாதன் என்பவர் விலைகொடுத்து வாங்கியுள்ளார். தனது காணியை முறையற்ற விதத்தில் கையகப்படுத்த முயன்று முடியாமல் போன நிலையிலேயே விலைகொடுத்து வாங்கியதாக துரைராசா எம்மிடம் தெரிவித்தார். இதில் 40 பரப்பை 3 இலட்சம் ரூபாவிற்கும், மிகுதி 32 பரப்பு காணியையும் ஒரு பரப்பு 5000 ரூபா வீதம் விற்பனையாகியுள்ளது. பின்னர், இந்த காணிகள் காணியற்ற கலைமதி கிராம மக்களிற்கு கதிர்காமநாதனால் அதிக விலையில் விற்கப்பட்டுள்ளது. மயானத்திற்கு அருகில் காணியை குறைந்த விலையில் காணியை கொள்வனவு செய்து, அதிக விலையில் மக்களிற்கு விற்பனை செய்து சில வருடங்களின் முன் குடியமர்த்தப்பட்ட மக்கள்தான் இன்று மயானத்திற்கு அருகில் குடியிருக்கும் மக்களாகியுள்ளனர். மயானத்திற்கு அருகில் மக்களை குடியமர்த்திய கார்த்திகேசு கதிர்காமநாதன் என்பது யார்?

இன்று மயானத்திற்கு எதிராக தீவிர மாக போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கும் புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிச கட்சியின் யாழ்ப்பாண அமைப்பாளர் செல்வமே ஆவார். மாயானத்திற்கு எதிரான போராட்டத்தில் அவரும் முன்னிலையில் நிற்கிறார்!

இதேகாலப்பகுதியில் மயானத்தின் மேற்குப்பகுதியில் உள்ள 200 பரப்பு கார்ணி க.பத்மநாதன் என்பவருக்கு சொந்த மானதென கூறி, மக்களிற்கு விற்கப்பட்டுள் ளது. எனினும், இது வேறொருவருடைய காணி, போலி உறுதிப்பத்திரம் மூலம் விற்பனையாகியுள்ளதென்ற சர்ச்சை தற்போது எழுந்துள்ளது. யாழில் முன்னர் பிரபலமாக இருந்த தியேட்டர் ஒன்றின் உரிமையாளர், அது தன்னுடைய காணி யென உரிமைகோரி வழக்கு தொடுத்துள் ளார். காணியை வாங்கிய மக்களின் அதிருப்தியை சமாளிக்க, மயானம் எரியும் பிரச்சனையாக புதிய ஜனநாயக கட்சி கட்டமைக்க முயல்கிறதா என்ற கேள்வியும் எழுகிறது.

2008 இல் மயானத்திற்கு சுற்றுவேலி யமைத்த போது செல்வமும் முக்கிய பங்காற்றினார், கலைமதி கிராமமக்கள்தான் அதை செய்தார்கள் என்கிறார்கள் மயான ஆதரவாளர்கள். அதுதவிர, மயானத்துடன் செல்வம் எப்படி இணைந்திருந்தார் என்பதையும் பட்டியலிடுகிறார்கள்.

2015இல் தனக்கு சொந்தமான பெக்கோ இயந்திரத்தின் மூலம் சீர்படுத்தி, 50,000 ரூபாவை பெற்றுக்கொண்டார். 2016 நவம்பரில் எரிகொட்டகை அமைக்கும் 3,3000 ரூபா பணியை பொறுப்பேற்று, கிராம மக்களை கொண்டு செய்வித்தார். கடந்த வருட இறுதிவரை மயானத்துடன் இணைந்திருந்த ஒருவர், திடீரென இப்பொழுது மயான எதிர்ப்பாளராக மாறி, போராட்டத்தை பின்னின்று இயக்குவதன் சூட்சுமம் என்னவென்பது அவர்களின் கேள்வி.

கடந்த ஐந்து வருடங்களில் மந்த மயானத்தில் உடல்கள் தகனம் செய்யப்படவில்லையென இப்பொழுது போராட்டக்காரர்களால் கூறப்பட்டாலும், அது தவறான தகவல் என தெரிகிறது. 2016 ஜூலை 30ம் திகதிவரை மயானத்தில் தகனம் நடைபெற்றுள்ளது.


2017 மார்ச் 8ம் திகதி தகனம் நடைபெறவிருந்த சமயத்தில்தான் சர்ச்சை தோன்றியது. மயானத்தில் தகனம் நடைபெறகூடாதென தடுத்ததல் முன்னிலையில் நின்றவர் செல்வம். இவரது குடும்பத்துடன் நீண்டகால பகையான குடும்பத்தை சேர்ந்தவரின் உடலே தகனத்திற்கு தடுக்கப்பட்டது, பரம்பரை பகையை 'மக்கள் குடியிருப்பில் மயானம்' என்ற திடீர் கோசத்தின் பின்னணியில் தீர்த்து கொண்டுள்ளனர் என்கிறார்கள் மறுதரப்பினர்.

நிலைமை விபரீதமான பின்னர் சம்பவ இடத்திற்கு சென்ற நீதிவான், நிலைமையை ஆராய்ந்து உடலை வேறு மயானத்தில் தகனம் செய்யுமாறு உத்தரவிட்டிருந்தார். நீதிவான் அங்கிருந்து சென்றதும், மயான அபிவிருத்திசபை தலைவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது, செல்வமே தாக்கினார் என்பது மறுதரப்பின் குற்றச்சாட்டு.

நீதிபதியின் உத்தரவிற்கமைய உடல் வேறு மயானத்தில் தகனம் செய்யப்பட்ட அன்று, மரணவீட்டின் முன் ஒன்றுகூடிய குழுவொன்று வெடிகொளுத்தி மயானத்தில் எரிக்கவிடாமல் செய்ததை வெற்றிவிழாவாக கொண்டாடியுள்ளனர். அத்துடன் ஒலிபெருக்கி மூலம் இறந்தவரின் குடும்பத்திற்கு எதிரான கருத்துக்களை பரப்பியுள்ளனர்.

இப்படித்தான் இந்த சர்ச்சை வளர்ந்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...



# சம்பந்தரின் ஆடு புலி ஆட்டம்!

அருண் பாலசுப்ரமணியம்

2015 பொதுதேர்தல் சமயத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு இனப்பிரச்சனை தீர்வு வாக்குறுதியளித்தது. இனப்பிரச்சனையை தீர்க்க முயற்சிப்போம் என்ற வாக்குறுதியல்ல அந்த வருட இறுதிக்குள் பிரச்சனையை தீர்ப்போம் என்றார்கள். ஆனால் அது கூட்டமைப்பின் ஒருமித்த குரலாக வெளிவரவில்லை. சம்பந்தன் தலைமையில் சில உறுப்பினர்கள் மட்டுமே இந்த வாக்குறுதியை அளித்தனர். பொதுமேடைகளில் ஒரு தரப்பு வாக்களிக்க, இன்னொரு தரப்பு சுருதியை குறைத்து பேசிக்கொண்டிருந்தது.

பொதுவேட்பாளராக மைத்திரி களமிறக்கப்படுவதற்கு முன்னைய கால உடன்படிக்கைகளின் விளைவுதான் சம்பந்தரின் அந்த நம்பிக்கையென்பது பின்னாளில் வெளிப்பட்டது. அதனால், கூட்டமைப்பின் ஒரு பகுதியினர் நம்பிக்கையீனமாக பார்த்துக் கொண்டிருக்க, அதீத நம்பிக்கையுடன் தனது கண்ணிற்கு தெரிந்த இலக்கை நோக்கி சம்பந்தர் ஓடிக்கொண்டிருந்தார்.

2015இல் தொடங்கிய சம்பந்தரின் ஓட்டம் 2017இலும் தொடர்கிறது. பல தசாப்த இடியப்ப சிக்கலான இனப்பிரச்சனையை சிறிய அவகாசத்தில் தீர்க்க முடியாது என்பது உண்மைதான். ஆனால் இந்த உண்மை, பொதுமக்களிற்கு தெரிந்த அளவிற்கு சம்பந்தரிற்கு தெரிந்திருக்கவில்லையா என்பதே கேள்வி. ஏனெனில் இனப்பிரச்சனை தீர்விற்கு குறுகிய கால அவகாசங்களையே அவர் வழங்கி வருகிறார். 2015 வருட இறுதி, அடுத்த தீபாவளியென அவரது எதிர்பார்ப்புக்கள் நீண்டு வருகிறது.

வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை இந்த மாத இறுதிக்குள் அரசியல் நிர்ணயசபைக்கு (பாராளுமன்றம்) சமர்ப்பிக்கப்படும் என்பது பிந்திய நிலவரம். அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கிய வழிநடத்தல் குழுவில் அனைத்து விடயங்களிலும் இணக்கப்பாடு எட்டப்படவில்லை. அதிகார பரவலாக்கல், தேர்தல் சீர்திருத்தம், நிறைவேற்று ஜனாதிபதிமுறை ஒழிப்பு என்பவற்றை நோக்கமாக கொண்டு ஆரம்பிக்கப்பட்ட பணிகள் இன்று நெருக்கடியான கட்டத்தை எட்டியுள்ளன.

புதிய இலங்கையை கட்டியெழுப்பவதென்றால் இந்த மூன்று விடயங்களிலும் மாற்றங்களை காண வேண்டும். அத்துடன் மூன்றும் ஒன்றுடன் ஒன்று பிணைப்பை கொண்டவையும் கூட. நோயை முற்றாக அகற்ற வேண்டுமெனில் பிரச்சனைகளை முழுமையகா அகற்ற வேண்டும். பாதிப்பிரச்சனையை தீர்த்து, பாதி சுகமடைந்த நோயாளியை நடக்க வைக்க முடியாது.

நிறைவேற்று ஜனாதிபதிமுறை ஒழிப்பில் கட்சிகளிற்குள் முழுமையான இணக்கப்பாடு கிடையாது. நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பேன், ஒருமுறை மாத்திரமே ஜனாதிபதி பதவி வகிப்பேன் என்ற வாக்குறுதிகளிகளுடன் அரங்கிற்கு வந்த மைத்திரி, இன்றும் அவற்றை நினைவில் வைத்திருக்கிறாரா தெரியவில்லை. முக்கியமாக, நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிப்பில் இருந்து மைத்திரி கணிசமாக பின்வாங்கிவிட்டார். அவர் அதை வெளிப்படையாக சொல்லவில்லை. ஆனால் வழிநடத்தல் குழுவில் அங்கம் வகிக்கும் நிமல் சிறிபால டி சில்வா அதை தெளிவாக கூறிவிட்டார். இதனால் வழிநடத்தல் குழுவின் இறுதி அறிக்கையில் பின்னிணைப்பாக சுதந்திரக்கட்சியின் யோசனைகள் இணைக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதென்பது மைத்திரியின் அரசியல் தற்கொலையென்பதேயதார்த்தம். தனிப்பட்ட ரீதியில் நிறைவேற்று அதிகாரத்தை மைத்திரி விரும்பவில்லை, அரசியல் முன்னிலை பெற அதை தொடர விரும்புகிறார். நிறைவேற்று அதிகாரத்தை மைத்திரி கைவிட்டால், அவரது பட்டியை உடைத்துக்கொண்டு ஆடுகள் மகிந்தவின் பட்டிக்கு சென்றுவிடும். சுதந்திரக்கட்சி அரசியலில் மைத்திரியா, மகிந்தவா ராஜா என்ற போட்டி நீடிக்கும் வரை மைத்திரி நிறைவேற்று அதிகாரத்தை கைவிடப் போவதில்லை. இதே வாக்குறுதியுடன் மகிந்த அரங்கிற்கு வந்தாலும், அவரும் கைவிடப் போவதில்லை. நிறைவேற்று ஜனாதிபதி முறை நீக்கப்படாமல் இனப்பிரச்சனைக்கு முழுமையான தீர்வை பெறலாமா என்பது சந்தேகம்தான்.

அதிகார பரவலாக்கலிலும் கிட்டத்தட்ட இதே நிலைமைதான். இனப்பிரச்சனை தீர்வில் மைத்திரி எவ்வளவு தாராளமாக (ஐ.தே.கவும் தான்) நடந்து கொள்வார்கள் என்பது மகிந்தவின் எழுச்சி நிலவரத்தை கொண்டே தீர்மானிக்க வேண்டி வரும். வழிநடத்தல் குழுவின் இறுதி அறிக்கை பாராளுமன்றத்திற்கு தாக்கல் செய்யப்படுவது தாமதமடைந்ததற்கு பிரதான காரணம் மகிந்தவின் எழுச்சி தான். கட்சிகளின் பரிந்துரைக்கு காலதாமதமாகியது என்ற வெளிப்பட்ட காரணத்திற்குள் மறைந்திருந்தது மகிந்தவின் மீள் எழுச்சி.

சம்பந்தரின் அரசியல் அனுபவம் நீண்டது. அவர் இனப்பிரச்சனை தீர்விற்கு முன்வைத்த கால அவகாசங்களை இந்த பின்னணியில் இருந்தே மக்கள் பார்த்தார்கள். ஏதோ ஒரு "பிடி"யின் அடிப்படையில் சம்பந்தன் அப்படியொரு வாக்குறுதியை வைத்தார். தனது ஆயுள்காலத்தில் இனப்பிரச்சனையை தீர்த்து விட வேண்டுமென்ற விருப்பமும் அவரிடம் வெளிப்பட்டது. அதற்காக சம்பந்தன் அதிக விட்டுக்கொடுப்புக்களை செய்தார்.

முக்கியமாக அன்றாட பிரச்சனைகளை தீர்ப்பதில் திட்டமிடல் இருக்கவில்லை. இனப்பிரச்சனை தீர்ந்தால் அன்றாட பிரச்சனை தானாக தீர்ந்துவிடும் என்ற கணக்குத்தான் இருந்தது. அன்றாட பிரச்சனைகளில் அழுத்தம் கொடுப்பது, இனப்பிரச்சனை தீர்வை தாமதப்படுத்தும் என்றும் யோசித்திருக்கலாம்.

ஆனால் நடந்தது என்ன?

இந்த அரசின் ஆட்சியில் இனப்பிரச்சனையை தீர்க்காமல் விட்டால், எதிர்காலம் பற்றிய உத்தரவாதங்களை உடனடியாக வழங்க முடியாது என்பது யதார்த்தம். மீண்டுமொருமுறை ஆட்சியை கைப்பற்றும் தரப்பாக யார் இருப்பார்கள் என்பது சந்தேகம். அடுத்த தடவையும் தெளிவாக ஆட்சியை தக்கவைக்கும் வெகுஜன அபிப்பிராயத்தை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளதா என்பது சந்தேகம்தான்.

நடப்பாட்சியின் பாதி ஜீவன் முடிகிறது. இப்பொழுதுதான் வழிநடத்தல் குழுவின் அறிக்கை பாராளுமன்றத்திற்கு செல்லும் என்ற நிலையை எட்டியுள்ளது. உண்மையாக சவால் அரசாங்கத்திற்கு இனித்தான் உள்ளது. இன்றைய ஆட்சியாளர்களிடம் கடுமையான சவாலை எதிர்கொள்ளும் திராணியிருப்பதாக தெரியவில்லை. எல்லா சவாலையும் சுதந்திரக்கட்சியின் தலையில் சுமத்தி, கட்சியை கவிழ்ப்பதிலேயே ஐக்கிய தேசியக்கட்சியின் சிந்தனைகள் கழிகிறது. பிரச்சனையை சமாளிப்பதா, கட்சி பிரச்சனையை சமாளிப்பதா என்று தெரியாமல் சுதந்திரக்கட்சி திண்டாடுகிறது.

இதுதான் சம்பந்தரும் நெருக்கடிக்குள்ளாகும் தருணம். கடந்த மூன்று மாதங்களில் சம்பந்தரின் நடவடிக்கையில் கணிசமான மாற்றம் உருவாக ஆரம்பித்துள்ளது. இராஜதந்திர சந்திப்புக்களில் பேசப்படும் விடயங்களை அவ்வளவாக வெளிப்படுத்தாமல், சுமுக சந்திப்பென கூட்டமைப்பு கூறி வந்தது. கடந்த மூன்று மாதங்களாக இதில் மாற்றம் ஏற்பட்டு, அரசின் அசமந்தம் பற்றிய புகார்களாக மாற்றமடைந்துள்ளது.

புதிய அரசின் ஆரம்பத்தில் அதீத உறுதியுடன் தீர்வு பற்றி பேசிக்கொண்டிருந்த சம்பந்தன் இப்பொழுதும் அப்படியிருப்பாரா என்பது தெரியவில்லை. இப்பொழுது நம்பிக்கை மனநிலையிலிருந்து முயற்சி மனநிலைக்கு அவர் மாறிவிட்டார். எப்படியாவது தீர்வை ஏற்படுத்திவிட வேண்டுமென அவர் தள்ளாத வயதிலும் கடுமையாக முயற்சிக்கிறார். அண்மைக்காலமாக வெளிநாட்டு பிரதிநிதிகளை தொடர்ச்சியாக சந்திக்கிறார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவையும் சந்தித்து ஒத்துழைப்பு கோரியுள்ளார்.

இந்த அரசு மீதான நம்பிக்கைதான் சம்பந்தரின் தீர்வு பற்றிய உறுதியாக வெளிப்பட்டது. இப்பொழுது மைத்திரி, ரணில் என்பதை கடந்து இந்த ஆட்டத்தில் மகிந்தவும் நுழைந்து கொண்டு விட்டார். இனி நம்பிக்கையுடன் ஆட முடியாது. வென்றுவிட துடிக்கும் முயற்சி மனநிலைக்கு சம்பந்தன் வந்துவிட்டார்.

இந்த முயற்சியில் தோல்வியடைந்தால் என்ன நடக்குமென்பது அவருக்கு தெரியும். நந்திக்கடலில் மூழ்கியெழுந்த தமிழர்களை மீண்டும் மூழ்கடித்தார் என்ற அவரது எதிர்ப்பாளர்களின் குற்றச்சாட்டு வரலாற்றில் பதிவாகும். ●

---

துள்ளது. மயான பிரச்சனையின் பல கட்டத்தில் வன்முறை சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இவற்றின் பின்னணியில் புதிய ஜனநாயக கட்சியின் அமைப்பாளர் தொடர்புபட்டார் என்ற குற்றச்சாட்டு உள்ளது. நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் மயானத்திற்கு சுற்றுமதில் கட்டிக்கொண்டிருந்த சமயத்தில் தொழிலாளர்கள் மீது கொலைவெறி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் சிலர் கடுமையான காயமடைந்துள்ளனர். பின்னர், மயான சுற்றுமதில் இடிக்கப்பட்டது, வாழைத்தோட்டம் அழிக்கப்பட்டதென அமைப்பு வன்முறை நோக்கி நகரத்தொடங்கியது.


இதன் பின்னர்தான் பொலிசார் பலப்பிரயோகம் செய்து, கலைமதி கிராமத்திற்குள் புகுந்து பலரை கைதுசெய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஒரே சமூகம், அயல் கிராமங்கள் என்றபோதும் இந்த சர்ச்சை இவ்வளவு தூரம் வளர்ந்தது துரதிஸ்டவசமானது. கண்ணுக்கு கண் பாணி வன்முறை இதற்கு தீர்வாகாது. நீண்டகாலமாக சமூக ஒடுக்குமுறைக்கு எதிராக போராடும் புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிச கட்சி இதில் கூடுதல் பொறுப்புணர்வுடன் நடந்திருக்க வேண்டியது அவசியம். ஆனால் கட்சியிடம் அந்த முதிர்ச்சி வெளிப்பட்டிருக்கவில்லை. இரண்டு தரப்பிற்கிடையிலும் மத்தியஸ்தராக செயற்பட்டிருக்க வேண்டிய கட்சி, தனது அமைப்பாளர் மீது சுமத்தப்படும் வன்முறை தூண்டல் குற்றச்சாட்டை கண்மூடி ஏற்றுக்கொண்டு, பிரச்சனையை சாதிய மோதலாக கட்டமைக்க முயல்வது நியாயமா?

இந்த பிரச்சனையின் மூல காரணங்களில் ஒன்று தனியார் காணியை குறைந்த விலைக்கு கொள்வனவு செய்து, அதிக விலைக்கு மயானத்திற்கு அருகில் குடியமர்த்தியதில் தமது கட்சி அமைப்பாளருக்கு பங்கில்லையென கட்சி கருதுகிறதா? மக்கள் குடியிருப்புக்களிற்கு அருகில் மயானம் இருக்க முடியாதென்பது தார்மீக அடிப்படையில் நியாயமான கோரிக்கைதான். ஆனால், இந்த போராட்டம் கிளப்பப்பட்டது அந்த தார்மீக அடிப்படையிலா என்ற சந்தேகம் கிளப்பப்படும் விதமான பின்னணி சம்பவங்களே அமைந்துள்ளன. கட்சியின் . முக்கிய பொறுப்பில் உள்ளவ்ர் தொடர்பான விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில், எதுவுமே பேசாமல் 'வடமாகாணசபையே மயானங்களை அகற்று' என புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிச கட்சி தொடர்ந்து கூறிக் கொண்டிக்க முடியுமா? நீதிமன்றத்திற்கு விடயம் சென்ற பின்னரும், அதை பொருட்படுத்தாமல் போராட்டம் நடத்துவது முறையல்ல.

இந்த விவகாரம் தற்போது நீதிமன்றத்தின் கவனத்திற்கு சென்றுள்ளதால், அனைத்து தரப்பிற்கும் பொறுத்தமான தீர்வொன்றை நீதிமன்றம் ஏற்படுத்திக் கொடுக்கும். அதற்கு அவகாசம் கொடுத்து பொறுமை காப்பதே அனைவரின் கடமையும். ●

# அரசியலமைப்பு உருவாக்கம் வெற்றியடையா விட்டால்...?

**வி.தர்மலிங்கத்தின் 32வது நினைவுதினம் அண்மையில் தாவடியில் உள்ள அவரது நினைவிடத்தில் அனுட்டிக்கப்பட்டபோது, யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆற்றிய உரை.**



நேற்று (01092017) இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்காவின் மத்திய தெற்காசிய விவகாரங்களிற்கான இராஜாங்க உதவி செயலாளர் அலிஸ் வெல்ஸ் அம்மையாரோடு நாங்கள் பேச்சு நடத்தினோம். திரு. சம்பந்தன் அம்மையாருக்கு சில விடயங்களை சொல்லிக் கொண்டிருந்தபோது திரு.தர்ம லிங்கம் முதலாவது குடியரசு யாப்பு உருவாக்கப்படுகிற போது இலங்கை தமிழ ரசுக்கட்சியின் சார்பில் முன்வைத்த யோச னைகளை பற்றி எடுத்து சொல்லி, நாளைக்கு அவரது நினைவுதினம் யாழ்ப்பாணத்தில் நடக்கவிருக்கிறது என்றார்.

எல்லோராலும் மிகவும் விரும்பப்பட்ட தலைவர் தர்மலிங்கம். வரலாற்றில் நாங்கள் பல இழப்புக்களை சந்தித்திருக் கிறோம். அதிலே அவரது இழப்பும் முக்கியமானதொன்று என சொன்ன போதுதான், கட்டாயம் இந்த நிகழ்விற்கு வர வேண்டுமென தீர்மானித்தேன்.

திரு. தர்மலிங்கத்தை பல தடவைகள் நான் நேரில் கண்டிருக்கிறேன். பாராளு மன்றத்திற்கு சென்று பேச்சுக்களை கேட்கும் பழக்கம் எனக்கு ஏழு வயதில் இருந்து இருந்தது. எனக்கு பன்னிரண்டு வயதாக இருந்தபோது ஒரு தடவை அணிசேரா நாடுகளின் உச்சிமாநாடு நடப்பதற்கு சில நாட்களிற்கு முன்னதாக தற்போது தமிழரசுக்கட்சியின் தலைவராக உள்ள மாவை.சேனாதிராசா உட்பட அப்பொழுது சிறையில் இருந்த நாற்பத்தியிரண்டு தமிழ் இளைஞர்கள் சாகும்வரை உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்திருந்தார்கள். அப்போது பாராளுமன்ற அமர்வை பார்க்க சென்றிருந்தேன். அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கமும் நான் அமர்ந்திருந்த வரிசையில் கலரியில் அமர்ந்திருந்துதான் பாராளுமன்ற அமர்வை அவதானித்தார். ட்ரயல் அட்பார் நடந்துகொண்டிருந்த நாட்கள் என நினைக்கிறேன்.

அன்று தர்மலிங்கம் இளைஞர்கள் சார்பில் பேசினார். அவர் பேச்சை முடிக்கும்போது சொன்ன வார்த்தைகளை இப்பொழுதும் என்னால் அப்படியே சொல்ல கூடும். பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாரை பார்த்து இறுதியாக சொன்னார் "உங்களை இந்த நாட்டின் பிரதமராக நான் கேட்கவில்லை. ஒரு தாயாக இந்த இளைஞர்களை நோக்கி பாருங்கள்" என சொல்லிவிட்டு அமர்ந்தார். அவரது முகம் எப்பொழுதும் சிரித்த முகம் என்றார்கள். அது உண்மை. ஆனால் அன்றைய தினம் பாராளுமன்றத்தில் பேசியபோது அவரது முகத்தில் கோபமும் கலந்திருந்ததை சிறுவயதிலும் என்னாலும் உணர முடிந்தது.

அரசியலமைப்பு விவகாரத்தில் அவர் முன்வைத்த யோசனைகளை பற்றி பலரும் எழுதியிருக்கிறார்கள். கலாநிதி ஜயம்பதி விக்ரமரட்ண அண்மையில் வெளியிட்ட புத்தகமொன்றில் அவரது பேச்சின் சில பகுதிகளை மேற்கோள் காட்டியுள்ளார். இறுதியாக முன்வைத்த தீர்மானம் சரி, சமஷ்டி தேவையில்லை. நீங்கள் உங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சொல்லியிருக்கின்ற படியே கச்சேரிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற அமைப்புக்களாக இருக்கட்டும் என்ற பிரேரணையை முன்வைத்தார். அதுவும் தோற்கடிக்கப்பட்டது.

எங்களது தலைவர்கள் தீர்வை நோக்கி நகர்ந்த சந்தர்ப்பங்களில் எல்லாம், சமஷ்டி எங்கள் கொள்கையாக இருந்தாலும் கூட, சமஷ்டிக்கு சற்று குறைவாக தீர்மானங்களை முன்வைத்திருக்கிறார்கள். தந்தை செல்வா, பண்டாரநாயக்காவோடு கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தில் சமஷ்டிக்கு நிகரான ஒரு முறைமையை குறிப்பிட்டிருந்தது. ஆனால் சமஷ்டி என்ற வார்த்தை அந்த ஒப்பந்தத்தில் இருந்திருக்கவில்லை. 1965இல் டட்லி சேனாநாயக்கவோடு செய்த ஒப்பந்தத்தில் சமஷ்டி என்ற வார்த்தை இருக்கவில்லை. ஆனால் இன்றைக்கு சட்டஆய்வாளர்கள் அது சமஷ்டிக்கு நிகரானதாக இருந்திருக்ககூடும் என சொல்லக்கூடும்.

ஒரு மாதத்திற்கு முன்னதாக ஓகஸ்ட் 4ம் திகதி உயர்நீதிமன்றத்தால் முக்கியமான ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. தமிழரசுக்கட்சி தனது யாப்பில் கோருவது பிரிவினையை, ஆகவே அது ஆறாவது திருத்த சட்டத்திற்கு முரணானது என ஒருவர் தாக்கல் செய்த வழக்கை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. சமஷ்டி கோரிக்கை பிரிவினையல்ல, சமஷ்டிக்கும் ஒற்றையாட்சிக்கும் உள்ள வித்தியாசம் என்ன என்பது பற்றி தெளிவாக தீர்ப்பில் விளங்கப்படுத்தப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றம் இதற்கும் மேலாக ஒருபடி சென்று தமிழ் மக்கள் சர்வதேச சட்டத்தில் ஒரு மக்கள் என்பதன் அடிப்படையில் சுயநிர்ணய உரிமையை கோருவதன் பிரதிபலனாக அதை உள்ளகமாக பயன்படுத்த சமஸ்டியை கோருகிறார்கள் என சொல்லப்பட்டுள்ளது. கனேடிய உயர்நீதிமன்ற தீர்ப்பையும் அதற்கு ஆதாரமாக காட்டியுள்ளனர். முதற்தடவையாக மூன்று சிங்கள நீதியரசர்களை கொண்ட இலங்கையின் உயர்நீதிமன்றம்தமிழ்மக்களுக்குசுயநிர்ணய உரிமை உண்டு, அதனடிப்படையில் அவர்கள் சமஷ்டி கோரிக்கை முன் வைப்பது சட்டபூர்வமானது என்ற தீர்ப்பை சொல்லியுள்ளது. இது இன்றைய அரசியலமைப்பு முயற்சிகளுக்கு உந்து சக்தியாக இருப்பதாக நாம் நினைக்கிறோம்.

சமஷ்டி அடிப்படையிலேதான் எமக்கு தீர்வுவேண்டும்.சமஷ்டி அரசியலமைப்பின் அடிப்படை குணாதிசயங்கள் வரவுள்ள அரசியலமைப்பு சட்டத்தில் இருந்தாக வேண்டும் என்பதில் நாம் கண்ணும் கருத்துமாக உள்ளோம். இந்திய அரசிய லமைப்பு சட்டத்தை சமஷ்டியென அந்த சட்டம் வர்ணிக்கவில்லை. ஆரம்பத்தில் அதை சமஷ்டியை போன்றதென சொன்ன இந்திய உச்சநீதிமன்றம், இப்பொழுது அந்த அரசியலமைப்பு சமஷ்டியென தீர்க்கமாக சொல்லியுள்ளது. அந்த குணாதியசங்கள் மிகவும் முக்கியமானவைகள். அந்த சமஷ்டி குணாதிசயங்களுடன் புதிய அரசிய லமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென்ற நோக்கில் நாங்கள் முயன்று கொண்டி ருக்கிறோம். விரைவில் இடைக்கால அறிக்கை வெளியாகும். அப்போது பல சந்தேகிகளிற்கு விளக்கம் தெரியவரும்.

இறுதியாக வரப்போகும் அரசிய லமைப்பு சட்டம் மக்கள் முன்வைக்கப் பட்டு, அவர்களின் அனுமதியுடன்தான் ஒரு தீர்மானம் எடுக்கப்படும் என்ற தீர்மானத்திலிருந்து எள்ளளவும் நாங்கள் நகரவில்லை. அதை திடமாக அனைவருக்கும் சொல்லிக்கொண்டே இருக்கிறோம். எங்களுடைய மக்கள் இறுதியாக இதை ஏற்க வேண்டுமென்பது தான் எமது நிலைப்பாடு.


அரசியலமைப்பு உருவாக்கத்திற்கு இன்றைக்கு நல்லதொரு சந்தர்ப்பமென எல்லோரும் சொல்கிறார்கள். உள்நாட்டில் நல்ல சந்தர்ப்பம், ஏனெனில் இரண்டு முக்கிய கட்சிகள் ஒன்றாக ஆட்சி செய்கின்றன. எதிர்ப்பு இருந்தாலும். சர்வதேசத்திலும் இன்றைக்கு இருப்பதை போன்ற ஆதரவு எமது மக்களிற்கு என்றுமே இருந்ததில்லை. ஒரு நாட்டைக்கூட குறித்து சொல்ல முடியாது இவர்கள் இலங்கை தமிழ் மக்களிற்கு எதிரானவர்கள் என. இலங்கை தமிழ் மக்களின் நியாய மான அரசியல் அபிலாசைகள் பூர்த்தியாக்கப்பட வேண்டும், அது சரியான அரசியலமைப்பின் ஊடாக நிறைவேற்றப்பட வேண்டுமென்பதில் அனைத்து நாடுகளும் ஒன்றாக இருக்கும் சூழ்நிலை இது. இப்படியான சூழ்நிலை இதற்கு முன் எங்களிற்கு இருந்ததே கிடையாது. இது போருக்கு பின்னர் உருவான சூழ்நிலை. ஆகவே சர்வதேச அனுசரணையும் முற்றுமுழுதாக எம்மோடு இருக்கிற வேளையில், இரண்டு பிரதான கட்சிகளும் சேர்ந்து வந்துள்ள வேளையில், எமது நீண்ட அரசியல் நோக்கை அடை வதற்கான எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டும்.

பல தடைகள் வரும். ஒவ்வொரு தடை வரும்போதும், விட்டு விலகுங்கள், ஓடி வந்து விடுங்கள், இது பயனற்று போய்விட்டது என்று பிதற்றுபவர்களுடைய சொற்களை கேட்டு எமது மக்களுடைய இருப்பை நாங்கள் கைவிட முடியாது. அது கிடைக்காமல் போனால் இறுதியிலே அடையாமல் போனால் அது வேறு கதை. ஆனால் அந்த நிலை வருகிற வரை அனைத்து முயற்சிகளையும் எடுக்கும் பெரிய பொறுப்பு இன்றைய தமிழ் தலைமைகளிடம் சுமத்தப்பட்டுள்ளது. அதை தலைவர் சம்பந்தனும், அவரோடு கூட செயற்படும் தமிழ் தேசிய கூட்ட மைப்பின் உறுப்பினர்கள் அனைவரும் திறமையாகவே செய்து வருகிறார்கள்.

சரியாக நிறைவேறாவிட்டால் என்ன

தொடர்ச்சி அடுத்த பக்கம்...





Page 1 of 1 Page

The Vadamarachchi East Divisional Secretary's Requisition for Survey No. VE/.../2017.01.18
(S.G's Requisition for Survey No. Ya/VDE/2017/12 of 2017.01.27)

Tracing No. Ya/VDE/2017/12

VILLAGE : THALAIYADY
G.N. DIVISION : MARUTHANKERNI J/420
D.S. DIVISION : VADAMARADCHCHI EAST
DISTRICT : JAFFNA
PROVINCE : NORTHERN

| Lot No. | Name of Land | Present Land Use | Claimant's Name | Extent (Hectare) | Remarks |
|---|---|---|---|---|---|
| A | Manalthorai | Low Jungle | State | 9.3078 | For issue of long term lease to construct the water desalination plant to Tacuba (Pvt) Limited |
| B | Manalthorai | Low Jungle | State | 1.1788 | Reserved for Means of Access |
| | | | Total | 10.4866 | |

தீபம்

Boundaries pointed out by: R.Gayathry, Grama Niladhari of Maruthankerni, Division No. J/420
K.Subithiran, Field Instructor, Divisional Secretariat, Vadamaradchchi East and
Boundaries pointed out to: S.Suntharalingam, Managing Director, Tacuba (Pvt) Limited, Jaffna

"True Copy"
Snr. Supdt. of Surveys, Jaffna District.

Surveyed and Drawn by P.K.Sivamalai, Govt. Surveyor, From January to February 2017
Checked by A.Muraleetharan, Supdt. of Surveys, 2017.04.24
Certified by P.Sivananthan, Snr. Supdt. of Surveys, Jaffna District, On behalf of the Surveyor General

3-ம் பக்க தொடர்ச்சி...

திட்டத்தின் பின்னணியில் நீர் வழங்கல் அமைச்சு, அரச உயர்மட்டத்தை சேர்ந்த பலர் உள்ளதாக கூறப்படுகிறது. மருதங்கேணி பிரதேசசெயலாளர் இதற்கான காணியை அடையாளப்படுத்தியுள்ளார். உயர்மட்ட அழுத்தங்களின் பின்னர் அவர் காணியை அடையாளப்

வடமராட்சி கிழக்கில் மணல் அகழ்வில் ஈடுபட்ட மகேஸ்வரி நிதியத்தின் முக்கியஸ்தர் ஒருவர் அண்மையில் மகிந்த ராஜபக்ச தரப்பால் ஆரம்பிக்கப்பட்ட சிறிலங்கா பொதுஜன பெரமுன என்ற அமைப்பில் இணைந்து கொண்டார். வடமராட்சி கிழக்கில் பணியாற்றிய அனுபவமுடைய இவரிடம், இந்த திட்டத்தின் ஆரம்பகட்ட செயற்பாடுகளை கவனிக்கும் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது.

படுத்தி, காணி வழங்களில் சம்பந்தப்பட்ட அனைவரும் சம்மதித்தால் காணியை வழங்குவேன் என அறிவித்துள்ளார்.

ரகுபா நிறுவனத்திற்கு காணி வழங்கி, இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்த வடக்கு ஆளுனர் செயலகம் பெரும் முயற்சியெடுப்பதாக அறிய முடிகிறது. ஆளுனர் செயலகத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவரும் அழைக்கப்பட்டு, கலந்துரையாடல் ஒன்றும் நடைபெற்றுள்ளது.

இதையெல்லாம் விட இன்னொரு அதிர்ச்சி தகவலும் உண்டு.

திட்டத்திற்கான முன்மொழிவை ரகுபா நிறுவனம் சமர்ப்பித்துள்ளது. அவர்கள் சுத்திகரிக்கும் நீரில் 80 வீதத்தை அரசின் நீர் விநியோக திட்டத்திற்கும், 20 வீதத்தை பன்னாட்டு குளிர்பான நிறுவனம் ஒன்றிற்கும் விற்பதென கூறப்பட்டுள்ளது. இதுதவிர, நன்னீராக்கும்போது கழிவாகும் செறிவுகூடிய உப்புக்கழிவை கடலில் கலக்காமல் அந்த பகுதியில் எரிசோடா உற்பத்தி தொழிற்சாலையொன்றையும் நிறுவ அந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

கடல்நீரை நன்னீராக்கும்போது எந்த கழிவையும் கடலில் விடவில்லையென்பது மேலோட்டமான பார்வைக்கு நல்ல திட்டமாக படலாம். ஆனால், இது மிக ஆபத்தானது. உப்புக்கழிவுகள் கடலில் கலக்கவிடப்படுவதால் எந்தப்பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. ஆனால், அதை இரசாயன தொழிற்சாலைக்கு பயன்படுத்துவது தரைக்கு மட்டுமல்ல, கடலிற்கும் ஆபத்தை உருவாக்கலாம். இரசாயன தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் முறையாக வெளியேற்றப்படுமா, இதனால் சூழல் பாதிப்புக்கள் இல்லையா என்பது தொடர்பில் எதுவும் பேசப்படவில்லை. மக்கள் குடியிருப்புக்களிற்கு அண்மையில் இரசாயன தொழிற்சாலைகள் அமைக்க கூடாதென்பதற்காகவே முன்னர் பரந்தனில் இரசாயன தொழிற்சாலை அமைக்கப்பட்டது. இப்பொழுது மக்கள் குடியிருப்புக்கு அண்மையில் இரசாயன தொழிற்சாலை அமைக்க முஸ்தீபு நடக்கிறது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நீர் வழங்கல் வடிகாலமைப்புசபை தற்போது முன்னெடுக்கும் தாளையடி கடல்நீர் சுத்திகரிப்பு திட்டத்திலிருந்து குடாநாட்டிற்கு நீரை வழங்குவதற்கு தற்போது பல இடங்களில் தண்ணீர் தாங்கிகள் கட்டப்பட்டு, தரைக்கு கீழ் குழாய்கள் அமைக்கப்பட்டு, நீர் விநியோக மார்க்கம் உருவாக்கப்பட்டு வருகிறது. தாளையடியிலுள்ள இந்த நீர்வழங்கல் வடிகாலமைப்புசபையின் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் நீரை குடாநாட்டிற்கு விநியோகிக்கவே இந்த வலையமைப்பால் முடியும். வேறு திட்டங்களில் இருந்து பெறப்படும் மேலதிக நீரை விநியோகிக்கும் வல்லமை இந்த வலையமைப்பிடம் இல்லை. தாளையடியில் உருவாக்கப்படவுள்ள தனியார் நிறுவனத்தில் சுத்திகரிக்கப்படும் நீரில் 80வீதத்தை நீர் வழங்கல் வடிகாலமைப்புசபை பெற்றுக்கொள்ள வேண்டுமென நிர்ப்பந்திக்க வாய்ப்புண்டு. ஏனெனில், அரச உயர்மட்ட ஆசீர்வாதத்துடன் இந்த திட்டம் நடக்கிறது. தனியார் சுத்திகரிப்பு நிறுவனத்தின் நீரை பெற்றால், அருகில் உள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் சுத்திகரிப்பு அளவு குறைக்கப்பட வேண்டும். ஏனெனில் இரண்டு சுத்திகரிப்பு நிலையங்களிலுமிருந்து வெளியேற்றப்படும் நீரை விநியோகிக்கும் வலையமைப்பு ஏற்படுத்தப்படவில்லை. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் முறையான கள ஆய்வின் பின் ஆரம்பிக்கப்படவுள்ள நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் திட்டம் நாளடைவில் கைவிடப்படும் அபாயமும் உள்ளது. இப்படி நடந்தால், குடாநாட்டின் குடிநீர் விநியோகம் முற்றாக தனியார் மயப்பட்டு விடும். நீருக்கு விலைபேசும் அரசியல் மெதுமெதுவாக முன்னகர்த்தப்படுகிறதா என்ற சந்தேகமும் எழுகிறது.

ரகுபா நிறுவனத்திற்கு கடல்நீரை சுத்திகரிக்க அனுமதிக்கப்பட்டால், இலங்கையில் நீர் வழங்கல் அனுமதி பெற்ற முதலாவது தனியார் நிறுவனமாக அது மாறும். இலங்கையில் எந்த பகுதியிலும் நீரை தனியார் மயப்படுத்தாமல் வடக்கில் மட்டும் அப்படி செய்ய என்ன அவசியம்? தனியாரிடம் நீர் வழங்கலை ஒப்படைப்பதால், இயற்கைச் சொத்தொன்றை விலைகொடுத்து வாங்க வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்படவுள்ளனர். தரைக்கு கீழான எல்ல வளங்களும் அரசிற்கு உரியது. நீரும் அப்படித்தான். ரகுபா நிறுவனத்திற்கான அனுமதியுடன் இயற்கை வளங்களையும் அரசு விலை பேசும் கலாசாரம் ஆரம்பிப்பதாக கொள்ளலாம்.

இவையெல்லாவற்றையும் விட மிகப் பெரிய ஆபத்து, பன்னாட்டு குளிர்பான உற்பத்தி நிறுவனத்திற்கு நீர் வழங்குவது. பன்னாட்டு குளிர்பான நிறுவனங்கள் இந்தியாவில் தளமாக கொண்டிருந்த சமயத்தில் அதிக நீரை உறிஞ்சி இயற்கை வளங்களை சீரழித்ததை தொடர்ந்து அங்கு ஏற்பட்ட விழிப்புணர்வால், தென்னாசிய உற்பத்தி மையத்தை இந்தியாவிற்கு வெளியில் நகர்த்த முயற்சிக்கிறார்கள். முன்னாள் நிதியமைச்சர் ரவி . கருணாநாயக்கவுடன் கொக்கோலா நிறுவனம் ஏற்கனவே பேச்சு நடத்தி, தென்னாசிய உற்பத்தி மத்திய நிலையமாக இலங்கையை மாற்ற முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர் பியகமவில் உள்ள கொக்கோலா உற்பத்தி நிறுவனத்தின் கழிவுகள் களனி ஆற்றில் கலந்து கடந்த ஆண்டு பெரும் சர்ச்சை ஏற்பட்டதும் கவனிக்கத்தக்கது.

தாளையடி தனியார் கடல்நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து நீரை பெறுவதெனில், பன்னாட்டு குளிர்பான நிலையத்தின் தொழிற்சாலையும் அந்தப் பகுதியில் அமைக்கப்படவே பெரும்பாலும் வாய்ப்புண்டு. அபிவிருத்தி, வேலைவாய்ப்பு என்ற போர்வையில் இயற்கை சூழலையும், ஆரோக்கியத்தையும் அழிக்கும் இப்படியான திட்டத்திற்கு நாட்டில் பெரும்பான்மையான இடங்களில் எதிர்ப்பு எழுந்துள்ள நிலையில், தாளையடியில் நிறுவப்பட இரகசிய முயற்சிகள் நடக்கிறதா என்ற சந்தேகமும் எழுகிறது.

முன்னாள் விவசாய அமைச்சர் ஐங்கரநேசனை சந்தித்து தொழிற்சாலைக்கு அனுமதி கோரியுள்ளது இந்த தனியார் நிறுவனம். சுற்றுச்சூழல் காரணங்கள், நீர் விநியோகத்தை தனியார்மயப்படுத்த முடியாது போன்ற காரணங்களை முன்னிலைப்படுத்தி ஐங்கரநேசன் அதை மறுத்துள்ளார். அவர் பதவி துறந்த பின்னர், தற்போது மாகாணசபையில் தீர்மானிக்கும் வல்லமையுடைய யாரும் இதில் அக்கறை காட்டவில்லை.

பன்னாட்டு நிறுவனங்கள் இலங்கையின் ஏனைய பகுதிகளில் கால்பதிக்க கடும் எதிர்ப்பு எழுந்துள்ள நிலையில் சத்தமின்றி யாழ் குடாநாட்டு நீர் விநியோகத்தின் பின்னால் மறைந்து உள்நுழைய எடுக்கும் முயற்சி இது. பன்னாட்டு குளிர்பான உற்பத்தி நிறுவனங்களிற்கு நீர் வழங்க அனுமதிப்பது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும். தற்போது வரை அங்கீகரிக்கப்படாத திட்டமாக இருந்தாலும், அதிகாரிகளிற்கு அழுத்தம் கொடுத்து நடைமுறைப்படுத்த அரச உயர்மட்டம் பெரும் பிரயத்தனம் செய்கிறது. ஆரம்பத்திலேயே இதை அடையாளம் காண தவறினால் பெரும் விளைவுகள் ஏற்படலாம்!

தாளையடியில் கடல்நீரை சுத்திரிக்கும் நிலையத்தை அமைக்கவுள்ள ரகுபா (tacuba (pvt) limited) நிறுவன உரிமையாளர் ஒன்றரை வருடங்களின் முன்னர் தன்னைச்சந்தித்து, இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்த ஒத்துழைக்குமாறு கோரினார். எனினும் நான் மறுத்துவிட்டேன் என கடந்த 04.09.2017 அன்று முன்னாள் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கூறியிருந்தார். மேலும் சில வடமாகாணசபை உறுப்பினர்கள், நீர் வழங்கல் வடிகாலமைப்புசபையின் உயரதிகாரிகளை அணுகி, தனியார் திட்டத்தை நடைமுறைப்படுத்த அவர் ஒத்துழைப்பு கோரியதை தீபம் உறுதி செய்கிறது. இந்த சந்தர்ப்பங்களில் தென்னிலங்கையின் பிரதான கட்சிகளில் ஒன்றை சேர்ந்தவர் என்றுதான் அவர் தன்னை அடையாளப்படுத்தியுள்ளார். எனினும், வடக்கிலுள்ளவர்கள் திட்டத்திற்கு ஒத்துழைக்கவில்லையென்றதும், அரச உயர்மட்டத்தின் ஊடாக காரியத்தை நிறைவேற்றியுள்ளனர். தீபத்திற்கு கிடைத்த தகவல்படி காணி அடையாளப்படுத்தல், திட்ட அங்கீகாரம் உள்ளிட்ட ஆரம்பகட்ட செயற்பாடுகளில் அரச உயர்மட்ட தலையீடு நேரடியாக நிகழ்ந்துள்ளது.

---

செய்வது? இந்த கேள்வி கேட்கப்படுகிறது. அதை அந்த சமயத்தில் தீர்மானிக்கலாம். ஆனால் ஒன்றை மட்டும் சொல்லிவைக்க விரும்புகிறேன்.

தமிழராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டவர்களின் நினைவு நிகழ்வில், எங்களுடைய மக்களை இப்படி கொன்றார்களே... இனவாத சிங்கள அரசு இப்படி செய்ததே என்ற ஆக்ரோச பேச்சுக்களை கேட்போம். ஆனால் இந்த நிகழ்விற்கு வரும்போது அதெல்லாம் தணிந்து வடிந்து மெதுவாக, யார் செய்தார்கள் என்ற கதையையெல்லாம் ஒரு பக்கம் வைத்துவிட்டுத்தான் நாங்கள் பேசுகிறோம். இதனால் யாரையும் நான் குற்றம் சுமத்தவில்லை. ஆயுதமெடுத்து போராடும் சந்தர்ப்பங்களில் இது சகஜம். அதனால் ஆயுதம் எடுத்தது தவறென நான் சொல்லவில்லை. 1964ம் ஆண்டு நெல்சன் மண்டேலாவிற்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டபோது, நீதிமன்றத்தில் நின்று சொன்ன ஒரு கூற்று சென்ற வருடம் நாங்கள் சேர்ந்து ஒரு தீர்மானம் எடுத்தோம். ஆயுதப்போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை எடுத்தோம். அந்த சூழ்நிலையில் வேறொரு மாற்றுவழி இருப்பதாக எங்களிற்கு தெரிந்திருக்கவில்லை. ஆகையால் சிந்தித்து நாங்கள் அந்த தீர்மானத்தை எடுத்தோம். அந்த சூழ்நிலையிலே இருந்தவர்கள் எடுத்த தீர்மானம் அது. நீங்கள் இதை விளங்கிக்கொள்வீர்கள் என நான் எதிர்பார்க்கவில்லை என்றார்.

ஆகவே ஒரு குறித்த சூழ்நிலையில், ஒரு ஒடுக்குமுறையின் சந்தர்ப்பத்தில் எடுத்த தீர்மானத்தை முப்பது நாற்பது வருடங்களின் பின்னர் விமர்சிக்க முடியாது. ஆனால் அந்த தீர்மானத்தால் ஏற்பட்ட விளைவுகளை முப்பது நாற்பது வருடங்களின் பின்னர் பின்னோக்கி பார்த்து, இனி அப்படி செய்வதா இல்லையா என்ற ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு எங்களிடம் இருக்கிறது. இப்படியான நிகழ்வுகளிற்கு வருகிற போதாவது சரி, இந்த முயற்சி கைகூடவிட்டால் அடுத்த முயற்சி என்ன செய்வதென தீர்மானிக்கின்ற போது ஆயுதம் ஏந்தாத ஒரு போராட்ட வடிவத்திற்குள் தொடர்ச்சியாக நாங்கள் நிற்க வேண்டும் என்ற தீர்க்கமான முடிவை இந்த சந்தர்ப்பத்தில் எடுக்க கடமைப்பட்டுள்ளோம்.


# சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பில் மோசடி?

## வடக்கு கிழக்கில் சத்தமின்றி நடந்த முறைகேடு

எஸ்.நிலாந்தன்

வடக்குகிழக்குமாகாணங்களில்சமுர்த்தி திட்டம் வெற்றியடையவில்லை. இதை வெற்றிகரமாக முன்னெடுக்க உரிய ஆளணியை சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். இப்படி கூறியவர் நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. கொழும்பு தாமரைத் தடாக மாநாட்டு மண்டபத்தில் 22.08.2017 அன்று இடம்பெற்ற "சமுர்த்தி சமூக பலம் 2017" தேசிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இதனை தெரிவித்தார்.

நாட்டின் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்திருந்தாலும், நடப்பதென்னவோ தலைசுற்றவைக்கும் சம்பவங்கள்தான். இருக்கும் ஆளணியால் முறையாக சமுர்த்தி திட்டம் நடைமுறைப்படுத்தப்பட


வாழ்வின் எழுச்சி (திவிநெகும/சமுர்த்தி) அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சை - 2016


சமுர்த்தி உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை

வழிகாட்டல் இறுதி கருத்தரங்கு.

அன்பார்ந்த விண்ணப்பதாரர்களே!

இம்மாதம் 29ம் திகதி சமுர்த்தி உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப்பரீட்சை நடைபெற இருப்பதனால தங்களை தயார்ப்படுத்த விசேட இறுதி கருத்தரங்கு நடைபெறவுள்ளது. எனவே அனைவரையும் அன்போடு வருகை தந்து பயன்பெறுமாறு வேண்டி நிற்கின்றோம்.

இடம் : கேம்பிறிஜ் பட்டபடிப்பு கல்லூரி
8ம் ஒழுங்கை, வைரவர்கோவில் வீதி
வைரவப்புளியங்குளம், வவுனியா.

காலம் : 21.08.2016 (ஞாயிறு)

நேரம் : காலை 8.30 - 1.00 (அமர்வு - I)
மாலை 1.30 - 5.00 (அமர்வு - II)

முன்னணி வளவாளர் : Mr.I.Aliyar
(MA. Sociology, BA Econ, PGD, HRM, Dip in Micro Finance)
District Coordinator - Department of Divineguma Development

கட்டணம் - 600/-

"வாழ்க்கை என்பது போராட்டம்......
கஷ்டங்கள் தாண்டி முயற்சிப்பவனே வெற்றி பெறுகிறான்"

குறிப்பு : 1. அமர்வு 1க்கு 600/- ரூபா அறவிடப்படும்.
2. மாதிரி வினாத்தாள்கள் வழங்கப்படும்.
3. அனுமதிகளுக்கு முந்துங்கள்.

தொடர்புகளுக்கு : C.D.C கல்லூரி
8ம் ஒழுங்கை, வைரவர்கோவில் வீதி வைரவப்புளியங்குளம், வவுனியா.
T.P: 077 9476727, 077 0886393

வில்லையென ஜனாதிபதி குறைபட்டு கொள்ள... புதிய ஆட்சேர்ப்பில் நடந்த முறையற்றதன்மையை தீபம் வெளிப்படுத்துகிறது. சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளீர்ப்பில் நடந்த இந்த முறையற்றதன்மையின் பின்னால் ஏதேனும் மோசடிகள் நடந்ததா? ஆட்சி மாறினாலும் மாறாத காட்சியாக தொடரும் மோசடியின் மூல வேர் எங்குவரை பரந்துள்ளது? இதையெல்லாம் கண்டறிய வேண்டியது அதிகாரிகளின் கடமை.

நாட்டிலுள்ள 25 மாவட்டத்திலுமுள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக உரிய தகமையுடைய விண்ணப்பதாரிகளிடத்திலிருந்து விண்ணப்பம் கோரப்பட்டு அதற்கான போட்டிப் பரீட்சை 2016 ஆம் ஆண்டு நடைபெற்றது. இந்தப் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டிக் கருத்தரங்குகளை வடக்கு, கிழக்கு மற்றும் மலையக பகுதியிலுள்ள மாவட்டங்களில் நடைபெற்றது. தற்போது சமுர்த்தி திணைக்கள தலைமை அலுவலகத்தில் சமுர்த்தி முகாமையாளராக பதவிவகிக்கும் ஐ.அலியார் இந்த கருத்தரங்குகளை நடத்தியிருந்தார். துண்டுப்பிரசுரம், குறுந்தகவல்கள் மற்றும் சமுகவலைத்தளங்கள் மூலம் இதற்காக விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

இணைப்பாளர்களின் தொலைபேசி இலக்கம் உள்ளிட்ட விபரங்கள் துண்டுப்பிரசுரத்தில் அச்சிடப்பட்டுள்ளதுடன் அதற்கான கையேடுகள் அந்தந்த மாவட்டத்தின் தலைமை அலுவலகத்தின் அதிகாரிகளின் உதவியுடனே தயரிக்கப்பட்டன. கருத்தரங்குகளை திணைக்களத்தின் அதிகாரிகள் பலரே மாவட்டரீதியாக ஒழுங்கமைத்திருந்தனர். யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்ட விண்ணப்பதாரிகளிற்கான கருத்தரங்குகளை தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் கடமைபுரியும் ரகுநாதனால் ஒழுங்கு செய்யப்பட்டது. இவர் யாழ்ப்பாணத்தில் மகிந்த அரசின் காலத்தில் வழங்கப்பட்ட மாவட்ட இணைப்பாளர் பதவியை பயன்படுத்தி அரசியல் நடவடிக்கை மேற்கொண்டதால் கிளிநொச்சி மாவட்டத்திற்கு இடமாற்றப் பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மன்னார் மாவட்ட கருத்தரங்கு ஜேக்கப் மற்றும் கு.கெளரி ஆகியவர்களால் மேற்கோள்ளப்பட்டது. இவ்வாறே நுவரெலியா, மட்டக்களப்பு, அம்பாறை, திரிகோணமலை ஆகிய மாவட்ட கருத்தரங்கு அங்குள்ளவர்களின் ஒத்துழைப்புடன் ஐ.அலியாரினால் மேற்கொள்ளப் பட்டது. இதில் கலந்து கொள்ளும் விண்ணப்பதாரிகள் பெருந்தொகை பணம் செலுத்தியே கலந்துகொண்டனர். பரீட்சையில் மிகவும் எதிர்பார்க்கப்படும் வினாக்கள் என சில வினாக்கள் கருத்தரங்கில் வழங்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்கும் சந்தர்ப்பத்தில் போட்டி பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சாத்திகளுக்கான நேர்முகத் தேர்வுச் சபையிலும் முக்கிய உறுப்பினராக ஐ.அலியார் உள்ளார். இது முறைகேடான நியமனமாகும். பணம் அறவிட்டு கருத்தரங்கு நடத்திய ஒருவர், அது தொடர்பான ஒரு அரச போட்டித் தேர்வில் நடுநிலையாக செயற்படுவதில் சந்தேகம் எழும். அவர் நியாயமாக நடக்கிறாரா என்ற விவாதங்கள் இரண்டாவது, இப்படியொரு நியமனம் வழங்கப்படுவதே முறையற்றது. அவரது கருத்தரங்கில் கலந்து கொள்ளாத உண்மையான திறமையான விண்ணப்பதாரிகள் பாதிக்கப்படவும் வாய்ப்புண்டு. தமது கருத்தரங்கில் கலந்து கொள்பவர்களை பரீட்சை, நேர்முகத் தேர்வில் வெற்றியடைய வைக்கவும் வாய்ப்புள்ளது.

ஐ.அலியார் இப்படியான கருத்தரங்குகளை நடத்தியிருக்க முடியாது. குறித்த அமைச்சின் செயலாளரால் அனுமதிக்கப் பட்டால் மாத்திரமே கருத்தரங்குகளை நடத்தியிருக்க முடியும். அமைச்சின் செயலாளரின் அனுமதி பெறப்படாமல் இந்த கருத்தரங்குகள் நடத்தப்பட்டிருந்தால், தாபனவிதிக்கோவை XXX.1 இன் உப பிரிவுகள் பலவற்றில் தண்டிக்கத்தக்க குற்றமிழைத்துள்ளார். அமைச்சின் செயலாளரின் அனுமதியை பெற்று இந்த கருத்தரங்குகள் நடத்தப்பட்டிருக்க வாய்ப்பில்லை. ஏனெனில், கருத்தரங்களை நடத்த அனுமதிக்கப்பட்ட ஒருவரை நேர்முக தேர்வுச்சபையில் நியமித்திருக்க முடியாது.

அலியாரின் நேர்முக தேர்வுச்சபை நியமனம் முறையற்றதென திணைக்களத் திற்கு சுட்டிக்காட்டப்பட்ட பின்னர், அவர் தற்போது நேர்முக தேர்வுச்சபையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். எனினும், வடக்கு கிழக்கின் பெரும்பாலான மாவட்டங்களில் நடந்த நேர்முகத் தேர்வில் அலியாரும் அங்கம் வகித்த நேர்முகத் தேர்வுக்குழுவே செயற்பட்டது. முறையற்ற கருத்தரங்கு, முறையற்ற நியமனம் என்பதே நேர்முக தேர்வு குறித்த அதிக சந்தேகத்தை எழுப்புகிறது.

அலியார் நடத்திய கருத்தரங்குகளின் விளம்பரத்தில் திவிநெகும திட்டத்தின் மாவட்ட இணைப்பாளர் என குறிப்பிடப் பட்டுள்ளது. எனினும், இந்தக்காலப் பகுதியில் இப்படியொரு பதவியை அவர் வகித்திருக்கவில்லை. இல்லாத பதவியொன்றை பாவிப்பது மோசடியாகாதா?

வடமாகாணசபை தேர்தல் சமயத்தில் அரசவாகனங்களை பாவித்தமை இவர் மீதான குற்றச்சாட்டுக்களில் ஒன்று. 2015 ஜனாதிபதி தேர்தல் சமயத்தில் மகிந்த ராஜபக்சவின் தேர்தல் பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டது, இதன்போது பஞ்சாங்க கலண்டர் மற்றும் சமுர்த்தி உரிமைச்சான்றிதழ் விநியோகித்தமை போன்ற விடயங்களில் சிக்கி தண்டனை இடமாற்றம் வழங்கப்பட்டு, தலைமை அலுவலகத்தில் இணைக்கப்பட்டவர். இந்த பின்னணிகள் அவரது கருத்தரங்கு, நேர்முகத் தேர்வுசபை உறுப்பினர் விடயங்களில் கேள்வியை எழுப்புவது தவிர்க்க முடியாததல்லவா.



**சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளீர்ப்பில் நடந்த இந்த முறையற்றதன்மையின் பின்னால் ஏதேனும் மோசடிகள் நடந்ததா? ஆட்சி மாறினாலும் மாறாத காட்சியாக தொடரும் மோசடியின் மூல வேர் எங்குவரை ப்ரந்துள்ளது?**

இந்த சந்தேகங்களால் நேர்முகத் தேர்வு தொடர்பான மீளாய்வை நடத்த வேண்டியது அவசியமாகிறது. கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள் நியமனம் பெற்றார்கள் என்ற குற்றச்சாட்டு எழுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளது. இவற்றை தவிர்க்க, இது தொடர்பான முறையான விசாரணை நடத்தி, நேர்முகத் தேர்வு முறையாக நடந்ததா என்பதை உறுதி செய்ய வேண்டியது திணைக்களத்தின் கடமை.



இந்தவாரம்
இ.இந்திராசா
வவுனியா மாவட்டம்

# என்ன செய்தார்கள் நமது பிரதிநிதிகள்?

## வடமாகாணசபை உறுப்பினர்களின் ஸ்கான் ரிப்போர்ட் - 9

தீபம் குழு

வடக்கு மாகாணசபை இன்னும் ஒரு வருடத்தில் தனது முதலாவது காலத்தை நிறைவு செய்கின்றது. இந்த நிலையில் அங்கு உள்ள உறுப்பினர்கள் ஒவ்வொருவர் தொடர்பாகவும் தீபம் அலசி வருகின்றது. இந்த வகையில் இந்தவாரம் நமது பார்வையில் வடமாகாணசபையின் வவுனியா மாவட்ட உறுப்பினர் இராமநாதர் இந்திராசா.

கல்விப் புலத்தில் இருந்து வடமாகாண சபைக்கு தெரிவாகிய க.சர்வேஸ்வரன், த.குருகுலராஜா, ப.அரியரட்ணம் ஆகியோரின் வரிசையில் இவரும் ஒருவர். யாழ் நெடுந்தீவு இவரது சொந்த இடமாக இருந்த போதும் யுத்தகால கட்டத்தில் இடம்பெயர்ந்து பெரியதம்பனைப் பகுதியில் வசித்து, பின்னர் அங்கிருந்து வவுனியாவில் நிரந்தரமாக குடியேறி விட்டார். இலங்கை ஆசிரியர் சேவையில் நீண்டகாலமாக வவுனியா வடக்கு பகுதியில் பணியாற்றிய இவர் அதிபராகவும், கோட்டக்கல்வி அதிகாரியாகவும் பணியாற்றியிருந்தார். யுத்தகாலத்தில் ஓய்வு பெறும்வரை நீண்டகாலமாக இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் பணியாற்றியவர்.

கோட்டக்கல்வி அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்ற நிலையிலேயே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றாகிய ஈபிஆர்எல்எப் சார்பாக கூட்டமைப்பில் ஆசனம் வழங்கப்பட்டு போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார். இவர் அடிப்படையில் ஈபிஆர்எல்எப் உறுப்பினர் அல்ல. இவரது மைத்துனர் ஒருவர் ஈபிஆர்எல்எப் கட்சியின் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் கீழ் அரசசேவையில் இருந்து விடுகைபெற்று உத்தியோகத்தராக பணியாற்றியிருந்தார். அவரது சிபார்சின் அடிப்படையில் இவர் இந்தக் கட்சிக்குள் போட்டியிட்டு வெற்றி பெற்றும் இருந்தார். வடக்கு மாகாணசபை உறுப்பினர் பதவிப் பிரமாணம் சர்ச்சையானபோது, ஈ.பி.ஆர்.எல்.எவ் மாகாணசபை உறுப்பினர்கள் வவுனியாவில் பதவிப்பிரமானம் செய்தார்கள். இந்திரராசா முதலமைச்சர் முன்னிலையில் பாடசாலை நிகழ்வொன்றில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

கல்வி புலத்தை பொறுத்தவரை இவர் பணியாற்றிய பகுதிகளில் இவருக்கு எதிரிகள் இல்லை. அதிபர்கள், ஆசிரியர்கள் என பலரும் அவருக்கு நட்பாகவே இருந்தனர். அந்த அடிப்படையில் ஆசிரிய சமூகத்தினதும், பெரியதம்பனை மற்றும் திருநாவற்குளம் போன்ற பகுதிகளில் உள்ள நெடுந்தீவு மக்களின்தும், உறவுகளினதும் நம்பிக்கையே இவரது வாக்குப் பலம்.

மாகாணசபையில் வடக்கு கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவின் கீழ் வவுனியா மாவட்ட இணைப்பாளராக கல்வித்துறையில் நியமிக்கப்பட்டதாக கூறப்பட்ட போதும் அந்த நிலையில் அவர் பெரியளவில் பணியாற்ற சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. பாடசாலை அபிவிருத்தி, ஆசிரியர் பிரச்சனை உள்ளிட்ட பல்வேறு பிரேரணைகளை இவர் மாகாணசபையில் கொண்டு வந்து நிறைவேற்றியிருந்தார். இவரது பிரரேரணைகளில் சர்ச்சையை ஏற்படுத்தியது வவுனியா விபுலானந்தா கல்லூரியின் முன்னாள் அதிபர் தனபாலசிங்கம் அவர்களுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட பிரேரணை. குறித்த அதிபர் நிதி, நிர்வாக மோசடிகளில் ஈடுபட்டதாகவும், அதிகார துஸ்பிரயோகம் செய்ததாகவும் தெரிவித்து கொண்டு வந்த பிரேரணை விசாரணை வரை சென்றிருந்தது.

அந்த பிரேரணையின் எதிரொலியாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.இந்திரராசா அவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதும், வவுனியா உக்கிளாங்குளம் பகுதியில் பாலியல் துஸ்பிரயோகத்தின் பின் படுகொலை செய்யப்பட்ட ஹரிஸ்ணவிஎன்ற மாணவியின் மரண வீட்டிற்குச் சென்று வந்த சமயம் தாக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இவரது பிரேரணையின அடிப்படையில் குறித்த அதிபருக்கு எதிராக விசாரணைகள் இடம்பெற்று கட்டாய ஓய்வில் குறித்த அதிபர் செல்ல பணிக்கப்பட்டிருந்தார். ஆனாலும் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் ஆளுனர் தனது அதிகாரத்தை பயன்படுத்தி குறித்த அதிபருக்கு மன்னார் மாவட்ட பாடசாலை ஒன்றில் மீள் நியமனமும் வழங்கியுள்ளார்.

தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பான கவனத்திற்குரிய பிரேரணை ஒன்று கொண்டு வந்திருந்தார். கல்விப்புலத்தில் இருந்து அரசியலிற்கு வந்தமையால், கல்விப்புலத்தை குறிவைத்தே செயற்படுகிறார். வாழ்வாதார உதவிகள் அனேகமாக அந்ததுறை நோக்கியே செயற்படுத்துகிறார்.

இது தவிர, குறித்த மாகாணசபை உறுப்பினர் தனக்கு வழங்கப்பட்ட குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் கிராமங்களுக்கு தேவையான வேலைகளை செய்து விட்டு அமைதியாக இருந்து விடுவார். பரபரப்பு இல்லை. ஆடம்பரம் இல்லை. அமைதியான, நேர்மையான ஒருவர் என்பது உள்ளூரில் பரவலான அபிப்பிராயம். அதனால் அரசியலுக்கு பொருத்தமில்லை என்றும் சிலர் கூறுவர். இந்த மாகாணசபையின் பதவிக்காலம் முடிந்ததும் அமைதியாக வீட்டில் ஓய்வெடுத்துக் கொள்வார் என்றே தெரிகிறது.

ஈபிஆர்எல்எவ் அமைப்பின் சார்பில் உறுப்பினராகியிருந்தாலும் கட்சியுடன் அரசியல்ரீதியாக பெரிய நெருக்கமில்லை. பொதுவாகவே மாகாணசபை உறுப்பினர் பதவியென்பது நிர்வாகம் தொடர்பானதென்பதை போன்ற செயற்பாடுதான் இவரது. மற்றைய மாகாணசபை உறுப்பினர்கள் ஒவ்வொரு சீசனுக்கும் ஒவ்வொரு அறிக்கை விட்டு சூடேற்றிக் கொண்டிருக்க, அதற்கு நேர் எதிரான அரசியல் செய்கிறார்.

மாகாணசபைக்குள்ளும் அதிகம் பேசாதவர். மாகாணசபை சர்ச்சை, குடுமிப்பிடி எதிலும் இவரது பெயர் வராது. சிவனேயென போய் வந்து கொண்டிருக்கிறார். மாகாண நிர்வாக பணிகள் தொடர்பாக ஆலோசனைகுழு கூட்டங்களில் பேசுகிறார்.

பொதுவாகவே கல்விப்புலத்தில் இருந்து தமிழ் தேசிய அரசியலுக்கு வருபவர்களிற்கு ஆகாஓகோவென்ற ஆதரவு இருக்கும். மாகாணசபை தேர்தலிற்கு வந்தபோது இவர் பற்றிய சாதகமாக அபிப்பிராயமே பெருமளவில் இருந்தது. ஆனால் நான்கு வருடங்களை நெருங்கும் சமயத்தில் நிலைமையில் மாற்றம் உள்ளது. குறிப்பாக ஆளணி பாடசாலைகள் தரமுயர்த்தப்படுவதில்



தீவிரமாக எதிர்ப்பு காட்டியது பாதகமான அபிப்பிராயத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆளணி குறைந்த பாடசாலைகளை தரமுயர்த்துவது பாதிப்பானதென்ற யதார்த்தம் இருந்தாலும், பிரதேச மக்களை உணர்வுபூர்வாக சீண்டுமென்பதால் இந்த விபத்தை சந்தித்திருக்கிறார்.

ஆதரவு எதிர்ப்பு என்பதை கடந்து வவுனியாவில் மக்களிடம் அதிக அதிர்வை உண்டுபண்ணாத அரசியலையே செய்து வருகிறார்.

### திருத்தம்

கடந்த வார ஸ்கான் ரிப்போர்ட்டில் "வடமாகாண சபை அமைந்ததும், அப்போது கூட்டுறவு அமைச்சராக இருந்த பொ.ஐங்கரநேசனை அணுகி, தனது எரிபொருள் நிரப்பு நிலையத்தை கூட்டுறவு திணைக்களம் வாங்க வேண்டுமென கேட்டார். இந்த விடயத்தை கூட்டுறவு திணைக்களத்திடம் ஐங்கரநேசன் பாரப்படுத்த, கூட்டுறவு திணைக்கள அதிகாரிகள் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு சென்று ஆய்வு நடத்தினர். அது நட்டத்தில் இயங்குவதாகவும், கொள்வனவு செய்வது பலனில்லையென்றும் அதிகாரிகள் அறிக்கையிட, ஐங்கரநேசன் விடயத்தில் இருந்து ஒதுங்கிக்கொண்டார்" என கடந்த இதழில் குறிப்பிட்டிருந்தோம். "இந்த விடயத்தை கூட்டுறவு திணைக்கள அதிகாரிகளிடம் பாரப்படுத்த, இலாபத்தில் இயங்காத நிறுவனத்தை கொள்வனவு செய்வது பொருத்தமற்றது என அதிகாரிகள் குறிப்பிட, ஐங்கரநேசன் விடயத்தில் இருந்து ஒதுங்கிக்கொண்டார் என்றே குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.



# பிரசவத்திற்கு அனுமதிக்கப்பட்ட ரசிகலாவிற்கு நடந்தது என்ன?

## நேரடி றிப்போர்ட்

திலக்ஸ் ரெட்ணம்

மட்டக்களப்பு படுவான்கரை பிரதேசத்தில் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்களுக்கு மருத்துவ சேவையை வழங்கிகொண்டிருக்கும் மகிழடித்தீவு வைத்தியசாலையில் பிரசவத்திற்காக சென்ற இருபது வயதுடைய இளம் யுவதி ரசிகலா மரணமடைந்திருந்தார். ஒரே பிரேதப்பெட்டியில் ரசிகலாவும் குழந்தையும் வைக்கப்பட்ட புகைப்படங்கள் வெளியாகி, பார்ப்பவர்களை கலங்க செய்திருந்தது. இந்த மரணம் தொடர்பாக பலத்த சர்ச்சைஞ் மாறுபட்ட கருத்துக்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

பின்தங்கிய கிராமமான காஞ் சிரங்குடாவை சேர்ந்தவர் ரசிகலா. திருமணம் செய்து முதல் பிரசவத்திற்காக 28.08.2017ம் திகதி அதிகாலை 12.30க்கு சாதாரண பிரசவவலி காரணமாக வைத்தியசாலையில் அவரது தாயார் அனுமதித்துள்ளார். தன் மகளுடன் கூடவே நிற்பதற்கு அங்கு பணிபுரியும் சுகாதார பணியாளர்களிடம் அனுமதி கேட்டுள்ளார். வைத்தியசாலை விதிமுறை அதற்கு அனுமதிக்காதென்பதால், அவர்கள் மறுத்துவிட்டனர். தாயார் தொடர்ந்து கேட்க, திட்டி வெளியில் விட்டு கதவை சாத்தியுள்ளனர்.

“என்ட மகள் பிரசவத்திற்காக மகிழடித்தீவு ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனம். அங்க பிறசர் மற்ற எல்லா செக்கிங்கும் பண்ணிபோட்டு நாலு மணிக்கு பிள்ளை பிறக்க கூடிய சாத்தியக்கூறு இருக்கு என்டு சொன்னாங்க. பிள்ளைய வாட்டுல வச்சாங்க. பிறகு நான் மகளோட நிக்கபோறன் என்டு அங்க வேல செய்யிற ஆக்களிட்ட கேட்டன். என்ட மகளுக்கு காலெல்லாம் வீங்கி இருக்கு நான் நிக்கட்டா என்டு. அதுக்கு ஒரு வேலை செய்யிற ஆள் நீ நிக்கிறன்னடா நாங்க என்னத்துக்கு... இருக்கம் என்டு ஏசினாங்க. பிறகு என்னை வெளியில விட்டு கதவ சாத்தி போட்டாங்க. நான் வரும் போது மகளுக்கு பக்கத்தில் பிரசவத்திற்காக இருந்த இன்னுமொரு பிள்ளையிர போன் நம்பர வாங்கி கொண்டு வீட்ட போய்த்தன்” என்றார் தாயார்.

ரசிகலாவிற்கு மகபேற்றுக்கான திகதி 22.09.2017 ஆகும். ஆனால் இவர் செல்லும் கிளினிக்கில் 29.08.2017ம் திகதி வைத்தியசாலைக்கு பிரசவத்திற்காக செல்ல வேண்டும் என்ற அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டுள்ளது. கூறிய திகதிக்கு முன்னரே அடிவயிற்றில் சாதாரண வலி ஏற்பட வைத்தியசாலைக்கு சென்றுள்ளனர்.

வைத்தியசாலையில் ரசிகலாவை அனுமதித்து விட்டு வீட்டுக்கு சென்ற தாயார், அதிகாலை 3 மணியளவில் தொலைபேசி இலக்கம் வாங்கிய பெண்ணை தொலைபேசியில் அழைத்து நிலவரத்தை கேட்டுள்ளார். ரசிகலாவிற்கு வலி சற்று அதிகமாக இருப்பதாக அவர் கூறியுள்ளார். வைத்தியசாலையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டிருந்த பண்டாரியவெளியை சேர்ந்த பெண்ணொருவர் அதிகாலை 5 மணியளவில் தன்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, ரசிகலாவிற்கு வலிப்பு வந்து கட்டிலில் இருந்து விழுந்து இரத்தம் வந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்படுகிறார் என்ற தகவலை வழங்கியதாக ரசிகலாவின் தாயார் கூறுகிறார். எனினும் தகவலை கூறியதாக கூறப்படும் பெண், தற்போது அதனை மறுத்து வருகிறார்.

‘மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு சென்று ஒவ்வொரு மகப்பேற்று வாட்டாக தேடினேன். எங்கேயும் கிடைக்கவில்லை. பின்னர் தீவிர கிகிச்சைபிரிவில் சென்று கேட்டேன். இருக்கிறார் என்றார்கள். மகிழடித்றிவு வைத்தியசாலையில் இருந்து என்ட மகள கட்டையாத்தான் கொண்டு போயிருக்காங்க' எனவும் தாயார் தெரிவித்தார்.

கட்டில் இருந்த கர்ப்பிணி தாயான ரசிகலா விழுந்தாரா இல்லையா என்பதுதான் தற்போதுள்ள பிரச்சினை. வலிப்பு ஏற்பட்டதால் கட்டிலில் இருந்து விழுந்து ரசிகலா இறந்தார் என்ற தாயாரின் குற்றச்சாட்டை வைத்தியசாலை நிர்வாகம் மறுத்து வருகிறது. அப்படியொரு சம்பவம் நடக்கவில்லையென்கிறார்கள்.

இந்தவிடயம் தொடர்பாக வைத்திய சாலை பொறுப்பதிகாரி வைத்தியர் தி.தவநேசனிடம் தொலைபேசியூடாக வினவியபோது ‘அந்தப்பெண் 28ம் திகதி அதிகாலை ஒரு மணியளவில்; வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். மறுநாள் நிகழ்வொன்றிருந்ததால் நானும் வைத்தியசாலையில் தங்கியிருந்தேன். ரசிகலாவை நேரில் சென்று பார்த்தேன். மீண்டும் 4.30 மணியளவில் ரசிகலாவிற்கு வலிப்பு வந்துவிட்டது என்று தொலைபேசி அழைப்பு வந்தது. உடனடியாக அவரை மட்டக்களப்பிற்கு இடமாற்றம் செய்தேன். பின்னர் நடந்ததென்று எனக்கு தெரியாது. உங்களுடைய வைத்தியசாலையில் கர்ப்பிணிதாய் இறந்தாக முகப்புத்தகங்களில் காரசாரமாக செய்திகள் வெளியாகி கொண்டிருக்கின்றன என்று 03ம் திகதி (செப்ரெம்பர்) தொலைபேசி அழைப்புக்கள் வந்தன. அந்த கர்ப்பிணி தாய் 28ம் திகதி (ஒக்ரோபர்) அதிகாலை வைத்தியசாலைக்கு பிரசவத்திற்காக வந்தார். வலிப்பு வந்ததால் அதே தினத்தில் அதிகாலை 4.30 மணியளவில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றிவிட்டேன் என்பதை சொன்னேன்’ என்றார்.


தமது மகளிற்கு வலிப்பு வருவதில்லையென்பது ரசிகலாவின் தாயாரின் வாதம். தாயாரின் கருத்தும், வைத்தியசாலை கருத்தும் வேறுவேறாக இருப்பதால் கடும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அந்த விடயம் தொடர்பாக சமூக வலைத்தளங்களில் பரப்பப்படும் கருத்துக்கள் தொடர்பாக வைத்தியர் தி.தவநேசன் கவலை தெரிவித்தார். ‘கர்ப்பிணி தாய் கட்டிலில் இருந்து கீழே விழுந்ததென முகப்புத்தகத்தில் பதிவிட்டு வருகிறார்கள். அது தவறானது. இந்த வைத்தியசாலை தற்போதுதான் விரைவாக அபிவிருத்தியடைந்து வருகிறது. இப்படியான செய்திகள் வைத்திய சாலையின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவது. இந்த பிரச்சனையை விசாரிக்க குழு ஒன்று அமைக்கப்படும். அந்த விசாரணை முடிந்ததும் நான் இடமாற்றம் பெற்று சென்று விடுவேன். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வன்னியில் இருந்துதான் நானும் சேவை செய்ய இங்கு வந்தேன். அதை கலைத்து விட்டார்கள்’ என்றார்.

ரசிகலாவின் தாயாரின் கருத்தும், வைத்தியசாலையில் கருத்தும் வேறுவேறாக இருப்பதால், முறையான விசாரணை ஒன்றின் மூலமே உண்மையை கண்டறியலாம். ரசிகலா என்ன நேரம் வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டார்? அப்போது வைத்தியர்கள் கடமையில் இருந்தனரா? ரசிகலாவிற்கு வலிப்பு வந்ததா? கட்டிலில் இருந்து கீழே விழுந்தாரா? வலிப்பு வந்ததாக அங்குள்ள பெண்மணி தொலைபேசியில் தெரிவித்தாரா? அப்பபடி தெரிவித்திருந்தால், பின்னர் என் மறுத்தார்? தெரிவிக்கவில்லையாயின், ‘ரசிகலாவின் தாயார் ஏன் அப்படி சொன்னார்? மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது என்ன நிலையில் கொண்டு செல்லப்பட்டார்? என்ற வினாக்களிற்கு முறையான விடைகள் கண்டறியப்பட வேண்டும். தனியே மருத்துவதுறை சார்ந்த விசாரணைக்கு அப்பால், புலன் விசாரணையும் அவசியம். அப்படியென்றால்தான் மக்களின் சந்தேகங்கள் நியாயமாக தீர்க்கப்படும்.





**இலக்கிய நயம்**

# கண்ணா வா! காதல் வரம் தா!!

பரமனைப் பற்ற எத்தனையோ பக்தி மார்க்கங்கள் இருந்தாலும், பக்தியுடன் காதலை கலந்து கொடுத்தவர்கள் ஆழ்வார்கள். அவர்களுள் காதலோடு தன்னையே அவனுக்கு அர்ப்பணித்தவள் ஆண்டாள்.

நம்மாழ்வாரும், திருமங்கையாழ்வாரும் தங்களை நாயகி பாவத்தில் வைத்து நாயகனாகிய பெருமாளை நோக்கி பல பாசுரங்களை இயற்றியுள்ளார்கள். ஆனால் அவர்களுக்கு கிடைத்ததோ இரண்டாம் இடமே. முதலிடத்தை தட்டிச்சென்றவள் 'ஆண்டவனையே ஆண்டதால்' ஆண்டாளாகிய கோதைநாச்சியார் தான்.

நம்மாழ்வார் 'பராங்குச நாயகி'யாகவும், திருமங்கையாழ்வார் 'பரகால நாயகி'யாகவும் கண்ணனை காதலிக்கிறார்கள். ஆனால் ஆண்டாளோ தானாகவே இருந்து அவனை அடைய முற்படுகிறாள்.

நாயகன் நாயகி பாவம் நமது தமிழ் இலக்கியங்களில் மிகுதியாகவே காணப்படுகிறது. இதை ஆங்கிலத்தில் Bridal Mysticism என்பர்.

மற்ற ஆழ்வார்களால் தங்களை பெண்ணாக பாவனை செய்தே பாடமுடியும். ஆண்டாளோ இயற்கையிலேயே பெண்ணாக பிறந்ததால், அந்த பாவனை அவளுக்கு தேவைப்படவில்லை. அவளின் பாசுரங்கள் முற்றும் துறந்த முனிவரையும் சற்றும் அசைத்துப் பார்த்துவிடும்.

அவ்வளவு காதல்! கூடவே மெல்லியதாய் இழையோடும் காமம்.

கடவுளை தொழும்பொழுது காமம் எதற்கு என்று வியாக்கியானம் பேசுகிறவர்களுக்கு புராணங்கள் சொல்லும் பதில் 'கசப்பான மருந்தை உண்ண இனிப்பின் உதவி தேவையில்லையா!' என்பதே.

ஆண்டாளைப் போல் கடவுள்மேல் காதல் கொண்டவர்கள் இருந்தார்களா என்பது சந்தேகமே. ஒருவேளை அவ்வாறே இருந்திருந்தாலும், அவள் அளவிற்கு அவனிடத்தில் காதல் ரசம் சொட்டச் சொட்ட பாக்கள் இயற்றி இருக்க வாய்ப்பேயில்லை.

"கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ
மருப்பொசிந்த மாதவன்றன் வாய்ச்சு வையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே"

என கண்ணனின் கையிலிருக்கும் 'பாஞ்ச சன்யம்'என்கிற வெண்சங்கை பார்த்து கேட்கிறாள் ஆண்டாள்.

'பெருமாளின் திருவாய் அமுதம் (எச்சில்) பச்சைக்கற்பூரம் போன்ற வாசனையுடன் இருக்குமா? அல்லது தாமரை மலர் போன்ற மென்மையான மணத்துடன் இருக்குமா?' என்கிற சந்தேகம் அவளுக்கு எழுந்ததாலே, அவள் வெண்சங்கிடம் இக்கேள்வியை கேட்கிறாள். மேலும் 'கண்ணனின் வாய்சுவை எப்படி இருக்கும்?' என்கிற கேள்வியும் அவளிடம் பிறக்கிறது.

'ஒரே கடலில் உன்னோடு பிறந்தவர்களை யாரும் மதிப்பதில்லை. ஆனால் கண்ணனுடைய திருவாய் அமுதத்தை பருகுவது உனக்கு வந்த வாழ்வு. எல்லா பாவங்களையும் போக்க பலரும் பல புண்ணிய நதிகளை தேடிப்போய் நீராடுவர். ஆனால்கண்ணனின்திருவாய்அமுதமாகிய புண்ணிய தீர்த்தத்தில் தினமும் நீராடுவது உனது அதிர்ஷ்டம். நீ உண்பது உலகங்களை அளந்த பெருமானுடைய திருவாயிலுள்ள அமுதத்தை. நீ படுத்துக்கொள்வது கடல் போன்ற நிறத்தை உடைய அவனுடைய திருக்கையில். இதனால் பல பெண்களின் வருத்தத்தையும் சம்பாதிக்கிறாய். கண்ணனுடைய வாயமுதம் உனக்கு மட்டும் சொந்தமல்ல. அவன் மணம் முடித்த 16000 பெண்களுக்கும் சொந்தம். அப்படி இருக்க அவர்கள் கோபிக்க மாட்டார்களா?'

இப்படி வெண்சங்கையும் கண்ணனின் திருவாய் அமுதையும் பொருத்தி பத்து பாசுரங்களை நாச்சியார் திருமொழியில் பாடியிருக்கிறாள் ஆண்டாள்.

பாஞ்ச சன்யத்தை பார்த்து ஆண்டாள் இவ்வாறு சொல்வதற்கு காரணம், அச்சங்கு ஒரு நொடிப்பொழுதும் பெருமாளை விட்டுப் பிரிவதில்லை. அவன் திருக்கையில் இருக்கும் சக்கரமாவது எதிரிகளை கொல்வதற்கு பெருமாளைவிட்டு பிரியநேரிடும். ஆனால் வெண்சங்கோ, பிராட்டியை போல் அவனுடனே வாழ்ந்திருக்கும்.

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆண்டாள், அப்பொழுதே சிறந்த முற்போக்குவாதியாக திகழ்ந்திருக்கிறாள் என்பதற்கு அவளது பாசுரங்களே சாட்சியாக நிற்கின்றன.

ஒரு பருவப்பெண் தன் காதலனை நினைத்து உருகுவதாகவே அவளது திருப்பாவையும், நாச்சியார் திருமொழியும் அமைந்துள்ளது.

திருப்பாவையில் மார்கழி மாதம் நோன்பிருந்து காத்யாயனி தேவியை வழிபடுவதும், கண்ணனை துயில் எழுப்புவதுமே அவள் பணியாக இருந்தது. அப்படி துயில் எழுந்த கண்ணன் தன்னிடம் வருவான் என எதிர்பார்த்தவளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. அதனால் நாச்சியார் திருமொழியில் தைமாதம் முழுவதும் கண்ணனுக்காக காத்திருந்து களைத்துப்போனவள், மாசி மாதத்தில் மன்மதனை அழைக்கிறாள். கண்ணனை நோக்கி காமபாணம் விடச்சொல்லி கேட்கிறாள். பங்குனியில் உனை நோக்கி நோன்பு இருக்கிறேன் என்கிறாள். அப்படியும் நீ என்னை கண்ணனுடன் சேர்த்துவைக்கவில்லை என்றால், அந்த பாவம் உன்னையே சேரும் என சாபமிடும் தொனியில் கூறுகிறாள்.

ஆண்டாள் முன்ஜென்மத்தில் பூமி பிராட்டியாக பெருமாளை மணம் புரிந்த காட்சி அவள் கண்முன்னே விரிகிறது. கூடவே கனவொன்றும் வருகிறது.

**"வாரணம் ஆயிரம் சூழ வலம் செய்து**
**நாரண நம்பி நடக்கின்றான் என்றெதிர்**
**பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்**
**தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீ நான்" இப்படி ஆரம்பிக்கிறது அவள் கனவுப்பா.**

அக்கனவில் அடுத்த நாள் நடக்க இருக்கும் திருமணத்திற்கு ஆயிரம் யானைகள் புடைசூழ கண்ணன் வருகிறான். ஊர்மக்கள் அவனை பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்கின்றனர். கல்யாணப்பந்தல் போட்டு, பாக்கும் மரம் கட்டி, அவ்விடமே கோலாகலாமாக இருக்கிறது.இந்திரனும்தேவாதிதேவர்களும் வந்து ஆண்டாளுக்கும் கண்ணனுக்கும் மணம் பேசி முடிக்கிறார்கள். அந்தரி என்கிற துர்க்கைப் பெண் புதிய திருமணப்புடவையை ஆண்டாளுக்கு தர, புனித நீர் தலையில் தெளிக்கப்பட்டு கண்ணனோடு காப்புக்கட்டுவதையும் காண்கின்றாள்.

பின் அவளே,'கம்பீரமாய்பூமி அதிரும்படி நடந்து வந்த என் மணாளன். மத்தளம் கொட்டவும், வரி சங்குகள் ஒலிக்கவும் என் கைகளை பற்றுகின்றான்'என்கிறாள்.

பின்நாட்களில் அவள் கண்ட இக்கனவு நனவாகியது. ஆண்டாள் தமிழுக்கு கொடுத்த நன்கொடையாகவே நாச்சியார் திருமொழி கருதப்படுகிறது. ஆண்கள் மட்டுமே கோலோச்சிக் கொண்டிருந்த அக்காலத்தில் பெண்ணாய் இருந்து தமிழில் சிறந்த பாக்களை இயற்றியது இன்றளவும் வியப்பான விஷயமே.

ஆண்டாள் திருமகளின் அம்சம் என்பது அனைவரும் அறிந்ததே. ஒருமுறை திருப்பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் பரமனிடம், 'எப்படிப்பட்ட தொண்டு செய்பவர்களை உங்களுக்கு பிடிக்கும்? எனக் கேட்கிறாள் பூமிபிராட்டி.

ஒரு பருவப்பெண் தன் காதலனை நினைத்து உருகுவதாகவே அவளது திருப்பாவையும், நாச்சியார் திருமொழியும் அமைந்துள்ளது. திருப்பாவையில் மார்கழி மாதம் நோன்பிருந்து காத்யாயனி தேவியை வழிபடுவதும், கண்ணனை துயில் எழுப்புவதுமே அவள் பணியாக இருந்தது.

அதற்கு பெருமாள், 'எனக்காக பூமாலை தொடுப்பவர்களையும், என் மீது பாமாலை பாடுபவர்களையும் பிடிக்கும்' என்கிறார். அதற்கு அவள், 'பூலோகத்தில் பிறந்து உங்கள் மீது பூமாலையும், பாமாலையும் தொடுக்கவேண்டும்.' என வரம் கேட்க, பெருமாளும் தந்தருள்கிறார். அப்படி வந்துதித்து தன் உண்மை காதலை உலகிற்கு உணர்த்தியவள் ஆண்டாள்.

தன் உடம்பிலுள்ள சகல அவயங்களும் கண்ணனுக்கே சொந்தம் என்பதை விரகதாபத்தோடு சொல்லி பல பாசுரங்களை இயற்றியுள்ள ஆண்டாள், தன்னுடைய உடல் மட்டுமல்லாமல் உயிரும் அவனுக்கே சொந்தம் என்கிறாள்.

இப்படி ஒரு உண்மையான உயிர் காதலி கிடைக்க கொடுத்து வைத்தவன் அந்த கண்ணனே!



அனு இம்மானுவேல்

## பெயர் பஞ்சம்!

விஜய் டிவியில் விரைவில் ஒளிபரப்பாகவுள்ள தொடர் நெஞ்சம் மறப்பதில்லை. செல்வராகவன் இயக்கத்தில் எஸ்.ஜே.சூர்யா, ரெஜினா, நந்திதா உள்ளிட்ட பலரது நடிப்பில் இதே பெயரில் படமொன்றும் வெளிவரவுள்ளது. திரைப்படங்களில் பெயர் வைப்பதில் கவனமாக இருப்பார்கள். ஒரே பெயரில் படம் வைக்க முடியாது. ஆனால் சின்னத்திரையில் இதுவரை இப்படியொரு பிரச்சனை எழுந்திருக்கவில்லை. நெஞ்சம் மறப்பதில்லை தொடருக்கு பல தரப்பிலிருந்தும் கண்டனங்கள் வந்தபடியிருக்கிறது.

## கம்மல் கலக்சன்!

விஜய் டிவியின் ராஜா ராணி சீரியலில் பாசமான காதலியாக பிரமிக்க வைத்த பவித்ரா இப்பொழுது கொடூரமான வில்லியாக மிரட்டி வருகிறார். நிஜத்தில் மிக அமைதியான, யாருடனும் பேசாத தன்னால் எப்படி நெகடிவ் ரோல் செய்யலாமென தயங்கியதாகவும், இயக்குனரின் ஆலோசனையால் நடிப்பில் இப்போது பிய்த்து உதற ஆரம்பித்து விட்டதாகவும் கூறுகிறார். இந்த சீரியலில் ஒரு காட்சியில், அவரது காதலருக்கும் வேலைக்கார பெண்ணுக்கும் திருமணம் நடக்கும். கல்யாண மண்டபத்தில் பவித்ரா கத்தி அழுது சண்டைபோடுவதை போன்ற காட்சியிருக்கும். இந்த காட்சியை நடிக்கும்போது நிறைய உணர்ச்சிவசப்பட்டதாக கூறுகிறார். ஸ்கிரிப்டை பார்த்தபோதே அழுதுவிட்டாராம். ராஜா ராணியில் அவர் அணியும் கம்மல்கள் அனைத்தும், அவரது கலெக்சனாம்!

## பொலிஸ் என்றால் பிரியா!

விஜய் டிவியின் மாப்பிள்ளை சீரியில் காமெடி வில்லியாக கலக்கி வருபவர் தேவி பிரியா. பல வருடங்களாக சீரியலில் எந்த வேடமென்றாலும் கலக்கி வருபவர். 2006இல் ஆசைகள் சீரியலில் பொலிசாக நடித்த பின், அனேக சீரியலில் பொலிசாக நடித்து விட்டாராம். சொர்க்கம் சீரியலில் நடித்தபோதுதான் பொலிஸ் பாத்திரத்தின் சூட்சுமம் பிடிபட்டதென்கிறார். பாரதிராஜாவின் தெக்கத்தி பொண்ணு தெலுங்கு தொடரிலும் பொலிஸ் வேடம்தான். இதற்காக கலைமாமணி விருது பெற்றுள்ளார். இதனால் இப்பொழுது தமிழ் சீரியலில் பொலிஸ் என்றாலே தேவி பிரியாதான் என்றாகி விட்டது.

## நிஜமாகவே அடிக்கும் அவந்திகா!

சன் டிவியின் பிரியமானவள் சீரியலில் அவந்திகாவாக கலக்குபவர் சிவரஞ்சனி. செய்தி வாசிப்பாளர், நிகழ்ச்சி தொகுப்பாளர் என பல முகம் காட்டியவர் இப்போது சீரியல் நடிகை. சன் டிவியின் தேன்நிலவு மூலம் சீரியலுக்கு வந்தவர். அப்போது சரியாக நடிக்க முடியாமல் திட்டு வாங்கி படப்பிடிப்பு தளத்திலேயே அழுவாராம். அதன்பின் பாசமலர், அரங்கேற்றம் சீரியல்களில் இயல்பாக நடிக்க ஆரம்பித்து விட்டாராம். இதுவரை கிடைத்த புகழ் அனைத்தையும் பிட பிரியமானவள் சீரியலின் அவந்திகா பெற்றுத்தந்துவிட்டதென்கிறார். வெளியில் சென்றால் பலர் இவரை திட்டுகிறார்களாம். இதனால் இயக்குனரிடம் சென்று, அதிகமான நெகடிவ் வேடம் வேண்டாம் என கேட்டிருக்கிறார். ரசிகர்களின் திட்டு எல்லாம் பாராட்டுத்தான் என இயக்குனர் புரியவைத்தாராம். சீரியலில் அடிப்பது மாதிரியான காட்சிகளில் நிஜமாகவே அடித்து விடுவாராம். பின்னர்தான் மன்னிப்பு கேட்பாராம்.

## விஜயின் நண்பனிற்கு சினிமா ஆசை!

நிறைய சீரியல்களில் நடித்தவர் சஞ்சீவ். சினிமாவில் நடிப்பதற்காக சின்னத்திரையை விட்டு ஒதுங்கினார். எதிர்பார்த்த படங்கள் உடனடியாக தொடங்காததால் ஜீ தமிழில் யாரடி நீ மோகினி சீரியல் மூலம் மீண்டும் பிரவேசித்துள்ளார். ஜீ சூப்பர் ரலன்ற்ஸ் நிகழ்ச்சியையும் தொகுத்து வழங்கி வருகிறார். சின்னத்திரையில் நல்ல பெயரும், புகழும் கிடைத்தாலும் சினிமாதான் தனது இலட்சியம் என கூறியுள்ளார். சிவகார்த்திகேயன், சந்தானம் வழியில் தானும் சின்னத்திரையில் இருந்து சினிமாவிற்கு சென்று வெற்றிபெறுவேன் என்றுள்ளார். சந்திரலேகா, நிலாவே வா, பத்ரி, புதியகீதை படங்களில் விஜயின் நண்பனாக இவர் நடித்திருந்தவர். விஜய் சினிமாவில் நுழைந்த காலத்தில் இவரும் சினிமாவில் நுழைய முயற்சி செய்து, முடியாமல் சின்னத்திரைக்கு சென்றவர்.

# சின்னத்திரை




பட்டேல்

## ஸ்ரேயாவின் ஓவர் கவர்ச்சி!

சிம்புவுடன் அன்பானவன் அசராதவன் அடங்காதவன் படத்தில் நடித்த ஸ்ரேயா, தெலுங்கில் பாலகிருஸ்ணாவுடன் பைசா வசூல் படத்தில் நடிக்கிறார். இந்தியில் டாட்கா என்ற படத்திலும் நடித்து வருகிறார். மேலும் சில படங்களிற்கு கதை கேட்டு வருகிறார். என்றாலும் பாலகிருஸ்ணா போன்ற வயதான ஹீரோக்களின் படம்தான் அவருக்கு கிடைக்கிறது. வயதான நடிகர்களின் படங்கள் என்பதால் அவரை யாரும் கவர்ச்சியாக நடிக்க வைப்பதில்லை. படத்தில் தான் கவர்ச்சி இல்லை, நிஜத்திலாவது கவர்ச்சியை காட்டுவோம் என முடிவெடுத்தாரோ என்னவோ, பொது நிகழ்ச்சிகளிற்கு செல்லும் போது ஓவர் கவர்ச்சி காட்டுகிறார். பொது இடங்களில் ஸ்ரேயாவின் கவர்ச்சி சில சமயங்களில் வரம்பு மீறுவதாக இருப்பதாகவும் விமர்சனங்கள் வரத் தொடங்கியுள்ளது.

## அர்ஜுனுக்கு பதிலாக பசுபதி!

முத்தையா இயக்கத்தில் சசிக்குமார் நடிக்கும் படம் கொடிவீரன். மகிமா நம்பியார், பூர்ணா, விதார்த் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். காதல், செண்டிமென்ட், வன்மம் கலந்து மதுரை கிராமத்து பின்னணியில் உருவாகிவருகிறது. இந்த படத்திற்கு ஒரு வலுவான வில்லன் தேவையென இயக்குனர் நினைத்து, அர்ஜுனை அணுகினார். அர்ஜுனுக்கும் கதை பிடித்திருந்தது. ஆனால் சம்பளம் பொருத்தமாக இருக்கவில்லை. இதனால் இழுபறி நீடித்தது. கடைசி நேரத்தில் படத்திலிருந்தும் விலகி விட்டார். இதனையடுத்து அர்ஜுனின் இடத்திற்கு பசுபதி ஒப்பந்தமாகியுள்ளார். ஏற்கனவே பல படங்களில் வில்லனாக மிரட்டியிருக்கும் பசுபதியின் நடிப்பு இதிலும் பேசப்படும் என படக்குழு எதிர்பார்க்கிறது.

## தீபாவளி பந்தயத்தில் கார்த்திக்கும்!

பெரியதொரு நட்சத்திரப்பட்டாளமே நடித்த விஜயின் மெர்சல் படம் வரும் தீபாவளிக்கு ரிலீசாகிறது. விஜயுடன் போட்டிபோட கார்த்தியும் தீர்மானித்துள்ளார். வினோத் இயக்கத்தில் கார்த்தி நடிக்கும் தீரன் அதிகாரம் ஒன்றும் தீபாவளிக்கு வெளியாகவுள்ளது. ரகுல் ப்ரீத் சிங், அபிமன்யு சிங், போஸ் வெங்கட் உள்ளிட்ட பலர் இதில் நடித்துள்ளனர். கார்த்தி பொலிஸ் அதிகாரியாக இதில் கலக்கியுள்ளாராம். இதன் முக்கிய படப்பிடிப்புக்கள் அனைத்தும் முடிந்து, இறுதிக்கட்ட பணிகள் துரிதமாக நடந்து வருகின்றது.

## ஓவியாவை விட்டா யாரு?

நாய் முதல் யானை வரை நாயகன், நாயகிக்கு தோழனாக நடித்த படங்கள் வெளியாகிவிட்டன. இந்த பாணியில் நாயகிக்கு யானை தோழனாக நடிக்கும் படமொன்று விரைவில் வரவுள்ளது. இதில் நாயகி ஓவியா. படித்த இளைஞன் ஒருவர் உழைப்பை நம்பாமல் அதிர்ஸ்டத்தை நம்பியதால் ஏற்படும் ஏமாற்றத்தை கருவாக கொண்டு இதன் கதை அமைக்கப்பட்டுள்ளது. சீதா என்ற யானையுடன் ஓவியா தோழியாக நடிக்கிறார். படத்திற்கு சீனி என பெயரிடப்பட்டுள்ளது. தற்போது துணைப்பெயராக ஓவியாவை விட்டா யாரு என்பதும் சேர்க்கப்பட்டுள்ளது. புதுமுகம் சஞ்சீவி நாயகனாக நடிக்கிறார்.

## பாடுவதை நிறுத்தப்போகும் கானா பாலா!

காசு பணம் துட்டு மணி மணி என்ற பாடலை உச்சரிக்காதவர்கள் குறைவாகத்தான் இருப்பார்கள். சூது கவ்வும் படத்தில் அந்த பாடலை பாடி, ஆடி அசத்தியவர் கானா பாலா. சாமான்யர்களின் அடித்தள வாழ்க்கையிலிருந்து உருவான கானா பாடல்கள்தான் இவரது முகவரி. பாலமுருகன் என்ற பெயரை சினிமாவிற்காக கானா பாலாவாக மாற்றினார். கடந்த நான்கு ஆண்டுகளில் 500 இற்கும் அதிக பாடல்களை பாடி அசத்தி விட்டார். இந்த நிலையில் அதிர்ச்சி அறிவிப்பொன்றை விடுத்துள்ளார். அடுத்த வருடம் தனது பிறந்தநாளின் பின் பாடப்போவதில்லை என அறிவித்துள்ளார். புதியவர்களிற்கு வாய்ப்பளிக்கும் விதமாக சினிமாவில் பாடுவதை நிறுத்திவிட்டு, கிராமங்களில் சமூக விழிப்புணர்ச்சி பாடல்களை பாடப்போவதாக அறிவித்துள்ளார். ஜுன் 20 இவரது பிறந்தநாள் என்பது குறிப்பிடத்தக்கது.

## முன்னணி நாயகர்களை குறிவைக்கும் சாந்தினி!

கே.பாக்கியராஜின் சித்து பிளஸ் 2 படத்தில் அறிமுகமானவர் சாந்தினி. பல படங்களில் நடித்து விட்டபோதும், இன்னும் முன்னணி நடிகையாக முடியாமல் திண்டாடுகிறார். ஆரம்பத்தில் கவர்ச்சியாக நடிக்க மறுத்து வந்தவர், தற்போது கவர்ச்சி யன்னல்களை அகல திறந்துவைத்துவிட்டார். பலனாக, தற்போது கைவசம் ஆறு வரையான படங்கள் வைத்திருக்கிறார். இவற்றில் பிரபலமான கதாநாயகர்கள் இல்லாத போதும், கிடைத்தவரை திருப்தியென கூறியிருக்கிறார் சாந்தினி. விரைவில் முன்னணி நாயகர் களுடன் ஜோடி போடுவேன் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# இலங்கையின் சட்டமுறையில் தாபரிப்பு

எம்.ரமணன் LLB




இலங்கையின் சட்ட முறைமையில் குடும்ப விவகாரங்கள் தொடர்பில் ஒன்றாக தாபரிப்புக் கடப்பாடுகள் என்பது காணப்படுகின்றது. தாபரிப்பு என்பது "போதுமான வருவாயுள்ள எந்தவொரு நபரும் தன்னைத்தானே பராமரித்துக்கொள்ள இயலாத தனது மனைவியை அல்லது நெறிமுறையான அல்லது நெறிமுறையற்ற பிள்ளை ஒன்றை பராமரிக்கத் தவறுமிடத்து அத்தகைய செயலை மனைவி அல்லது பிள்ளை நீதிமன்றில் நிரூபிக்குமிடத்து மனைவி அல்லது பிள்ளையை பராமரிப்பதற்க்கான மாதாந்த தொகையை செலுத்துமாறு நீதவான் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்படும் கட்டளை" ஆகும் என ஆரம்பத்தில் பராமரிப்பு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 2 குறிப்பிடுகின்றது.

இருப்பினும் பின்னர் ஏற்பட்ட மாற்றங்களின் அடிப்படையில் 1972ம் ஆண்டு இச் சட்டத்தின் பிரிவு 2 திருத்தப்பட்டது. இவ் ஏற்பாட்டின் கீழ் விண்ணப்பதாரியுடைய வருமானம் மற்றும் எதிர்வாதியினுடைய வருமானம் ஆகிய விடயங்களைக் கருத்தில் கொண்டு நீதவான் தனக்கு உகந்தது என கருதும் ஒரு தொகையைத் தீர்மானிப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டது. மேலும் மனைவி என்ற பதம் சட்டரீதியான மனைவி என நீதிமன்றால் பொருள் கோடல் செய்யப்பட்டது. சுப்பிரமணியம் எதிர் பாக்கியலட்சுமி (N.L.R.87 1952) என்ற வழக்கில் முதலாவது திருமணத்திற்குரிய விவாகரத்து கட்டளையை நீதிமன்றம் வழங்க முன்னரே இரண்டாவது திருமணத்தை ஒரு பெண் மேற்கொண்டபோது இரண்டாவது திருமணத்தின் வாயிலாக அவர் சட்டரீதியான மனைவியாக கொள்ளப்பட முடியாது என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

போதியளவு வருமானம் என்பது தாபரிப்பு தொடர்பான வழக்குகளில் நீதிமன்றங்களினால் விரிவான பொருள் கோடல்களுக்கு உட்பட்டு வந்தது. போதியளவு வருமானம் என்பது உண்மையான வருமானத்தையும் அதேநேரம் சாத்தியமான வழிவகைகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானத்தையும் உள்ளடக்குகின்றது. தொழிலின்மை என்ற காரணத்தை காட்டி பராமரிப்பு செலுத்தும் கடமையிலிருந்து கணவன் விலகியிருக்க முடியாது என சிவபாக்கியம் எதிர் சிவபாக்கியம் (36.N.L.R 295 1934) என்ற வழக்கில் தீர்மானிக்கப்பட்டது.

காலமாற்றத்தினை அடிப்படையாகக் கொண்டு 1999ம் ஆண்டு பராமரிப்பு கட்டளைச்சட்டம் பல்வேறு புதிய அம்சங்களை உள்ளடக்கி மாற்றியமைக்கப் பட்டது. இச் சட்டத்தின் புதிய அம்சங்களில் முக்கியமான விடயமாக வாழ்க்கைத் துணைகளுடைய பராமரிப்பு கடப்பாடு கணவன் மனைவி ஆகிய இருவருக்கும் சமஅடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. முன்னைய சட்ட ஏற்பாட்டில் பராமரிப்பு கடப்பாடு முற்றாக கணவன் மீது சுமத்தப்பட்டிருந்ததுடன் மனைவிக்கு பராமரிப்பு கட்டளை வழங்கப் படும்போது மனைவியுடைய வருமானமும் கருத்தில் கொள்ளப்பட்டது. இருப்பினும் கணவனை பராமரிக்க வேண்டிய கடப்பாடு மனைவிக்கு காணப்படவில்லை. திருமணம் முடித்த பெண்களுடைய சொத்து தொடர்பான கட்டளைச் சட்டம், இயலாத கணவனை தன்னுடைய சொத்துக்களில் இருந்து மனைவி பராமரிக்க வேண்டும் என்ற ஏற்பாட்டினைக் கொண்டிருந்த போதும் இக் கட்டளைச் சட்டம் தேச வழமை, கண்டியச் சட்டம், முஸ்லீம் சட்டம் ஆகியவற்றினால் ஆளப்பட்ட நபர்கள் மீது பிரயோகிக்கப்பட வில்லை. இதனால் இச் சட்டங்களின் கீழ் ஆளப்படுகின்ற கணவன்மார்கள் தமது மனைவியிடமிருந்து பராமரிப்பு கோர முடியாத நிலை ஏற்பட்டது. ஆகவே புதிய சட்டத்தின் ஏற்பாடு, கணவன் தன்னைத்தானே பராமரித்துக் கொள்ள இயலாது என்பதை நீருபிக்கின்ற விடத்து தன்னுடைய வாழ்க்கைத் துணையிடமிருந்து பராமரிப்பினைப் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்கின்றது. இங்கு இது தொடர்பில் நல்ல உடல்நலத்துடன் இருக்கின்ற கணவன் தொழில் இல்லை என்ற அடிப்படையில் தொழிலற்ற மனைவியிடம் பராமரிப்பினைப் பெறமுடியுமா என்ற வினா எழுகின்றது. இச் சந்தர்ப்பத்தில் நீதிமன்றம் தொழில் ஒன்றைத் தேடிக் கொள்ளுமாறு மனைவியை வற்புறுத்தாது. ஆயினும் கணவனை தொழில் ஒன்றைப் பெற்று மனைவியை பராமரிக்குமாறு கட்டளை வழங்கும்.




மேலும் இச்சட்டத்தின் கீழ் வாழ்க்கைத் துணை என்ற சொற்தொடர் சட்டரீதியாக திருமண உறவில் ஈடுபட்டிருக்கின்ற ஒருநபர் என்ற அடிப்படையிலேயே பொருள்கோடல் செய்யப்படுகின்றது. அதே போன்று பொதுச்சட்டத்தின் கீழ் திருமணம் செய்யத் தகுதியிருந்தும், தமது திருமணத்தின் போது வழக்காற்று சம்பிரதாயங்களைப் பின்பற்றி வழக்காறு திருமணம் ஒன்றை மேற்கொண்டிருப்பின் அவர்களும் இப் பிரிவில் உள்ளடக்கப் படுவர். மேலும் இச்சட்டத்தின் கீழ் கணவன் மனைவி இருவரும் பரஸ்பர உடன்பாட்டின் பேரில் பிரிந்துவாழும் போது அல்லது விண்ணப்பதார் வேறொரு ஆண் அல்லது பெண்ணுடன் உடல்ரீதியான தொடர்பினை பேணி வந்தாலோ தாபரிப்பு ஏற்பாடு அவர்களுக்கு ஏற்புடைத்தாகாது.





பிள்ளைகளுடைய பராமரிப்பு தொடர்பிலான விடயங்களை இச் சட்டத்தின் பிரிவு 2(2) கையாள்கின்றது. இதன்படி தன்னைத்தானே பராமரித்துக்கொள்ள இயலாத பிள்ளையை பெற்றோர் பராமரிக்கப் பொறுப்புடையவராவர். இப் பிரிவின் காப்புவாசகம், திருமணத்தின் விளைவாகப் பிறக்காத பிள்ளை ஒன்றினுடைய தந்தையார் என்பதை நம்பத்தகுந்த சான்றுகள் ஊடாக நீதவான் நீதிமன்றில் நிரூபித்தால் மட்டுமே தாபரிப்பு கட்டளையை அப் பிள்ளைக்கு வழங்க முடியும். பிள்ளை என்பது ஆரம்பத்தில் 18 வயதிற்கு குறைந்த திருமணத்தின் விளைவாகவோ அல்லது திருமணத்திற்கு புறம்பாகவோ பிறந்தவர்களைக் கருதுமென பொருள்கோடல் செய்யப் பட்டது. பின்னர் புதிய திருத்தத்தின்படி பிரிவு2 (3) பிள்ளையானது தனது 25வது வயதுவரை பெற்றோரிடமிருந்து பராமரிப்பு கோருவதற்கு உரித்துடையவர்கள் எனக் குறிப்பிடுகின்றது.

இருப்பினும் 25 வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் தொழில் புரிந்து அல்லது தம்மைத்தாமே பராமரித்துக் கொள்வதற்கான போதுமான வருவாயுள்ள சந்தர்ப்பங்களில் பெற்றோரிடமிருந்து பராமரிப்பு கட்டளையைப் பெறமுடியாது. மேலும் இச் சட்டத்தின் கீழ் தாய் தந்தை ஆகிய இருவருக்கும் பராமரிப்பு கடப்பாடு காணப்படுகின்றது.

இச்சட்டத்தின் பிரிவு 4ன் படி பிள்ளை அல்லது விசேட தேவையுடைய பிள்ளை சார்பாக பிள்ளையோ அல்லது பிள்ளைக்கு இயலாத சந்தர்ப்பத்தில் வேறொரு நபரோ பராமரிப்பு வழக்கை தாக்கல் செய்ய முடியும். மேலும் பராமரிப்பு கட்டளை பெற்ற நபரொருவர் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள முழுத்தொகையை அல்லது ஏதேனும் பகுதியொன்றை மாதாந்தம் செலுத்துவதற்கு தவறுகின்ற விடத்து ஒரு மாதத்திற்கு மேல் நீடிக்கப்பட முடியாத சிறைத்தண்டனையை வழங்கவும் பராமரிப்புக்கான தொகையை தண்டப்பணமாக மீளப் பெற்றுக்கொள்ளவும் நீதவானுக்கு அதிகாரமுண்டு என இச் சட்டத்தின் பிரிவு 5 குறிப்பிடுகின்றது.

மேலும் இச் சட்டத்தின் பிரிவு 6 எதிர்வாதியுடைய சம்பளம் பற்றிய விபரங்கள் மன்றில் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் எதிர்வாதி வேண்டுமென்றே அல்லது கவலையீனமாக பராமரிப்பு செலுத்தத் தவறுகின்றார் என நீதிமன்றம் கண்டறியும் பட்சத்தில் குறித்த எதிர்வாதியினுடைய தொழில் தருநருக்கு அழைப்பாணை அனுப்ப முடியும் என்பதுடன் குறித்ததொழில்தருனரைகுறிப்பிட்ட எதிர்வாதியினுடையசம்பளத்திலிருந்துபராமரிப்புத் தொகையை கழித்துக் கொள்ளுமாறும் உத்தரவிட முடியும்.

நீதவான் ஒருவரால் வழங்கப்பட்ட பராமரிப்புக் கட்டளையினால் திருப்தி படாத எதிராளி அரசியலமைப்பின் உறுப்புரை 154(றி)ன் கீழ் தாபிக்கப் பட்டுள்ள இயைபான மேல்நீதிமன்றத் திற்கு மேன்முறையீட்டினைச் செய்யலாம். இருப்பினும் குறித்த மேன் முறையீடு தொடர்பில் மேல் நீதிமன்றம் வேறேதேனும் கட்டளையை வழங்கும் வரை குறித்த நீதவானால் வழங்கப் பட்ட கட்டளையைத் தள்ளுபடி செய்ய முடியாது.



ஜெமினி கணேசன் - எம்.ஜி.ஆர் - ஜெய்சங்கர்


# உதவும் மனம்!

ஸ்ரீதர் சுவாமிநாதன்

**எம்.ஜி.ஆர்.** திரையுலகில் இருந்த காலத்தில் பிரபலமான நடிகர்களாக இருந்தும், சந்தர்ப்பங்கள் சரியாக அமையாததால் அவருடன் நடிக்க முடியாமல் போன நடிகர்கள் சிலர் உண்டு. அவர்களில் குறிப்பிடத்தக்கவர் நடிகர் ஜெய்சங்கர்.

1965ம் ஆண்டு வெளியான 'இரவும் பகலும்' படத்தின் மூலம் அறிமுகமாகி, தனக்கென தனி பாணியில் நடித்து மக்கள் கலைஞர் என்று புகழ்பெற்றவர் ஜெய்சங்கர். இவருக்கும் எம்.ஜி.ஆருக்கும் ஓர் ஒற்றுமை உண்டு. எம்.ஜி.ஆரைப் போலவே பிறருக்கு உதவும் குணம் கொண்டவர். ராஜேந்திர குமார், தர்மேந்திரா நடித்து இந்தியில் வெளியான 'ஆயி மிலன் கி பேலா' என்ற படம்தான் தமிழில் 'ஒரு தாய் மக்கள்' ஆனது.

இந்தப் படத்தில் எம்.ஜி.ஆருடன் ஜெய்சங்கர் நடிப்பதாக இருந்தது. 1966ம் ஆண்டில் 'பேசும் படம்' பத்திரிகையில் விளம்பரமும் வெளியானது. ஜெய்சங்கர் ஏராளமான படங்களில் நடித்து வந்தார். அவருக்கு 'வெள்ளிக்கிழமை ஹீரோ' என்றே பெயர். அந்த அளவுக்கு பெரும்பாலும்



வெள்ளிக் கிழமைதோறும் அவரது படங்கள் வெளியாகும். ஒரே ஆண்டில் 16 படங்களில் கதாநாயகனாக நடித்தவர்.

திரைத்துறையில் மட்டுமின்றி; அரசியல் துறையிலும் எம்.ஜி.ஆர் பிஸியாக இருந்ததால் படப்பிடிப்புகளில் அவர் கலந்துகொள்வதில் தாமதம் ஏற்படும். இடையில், 1967ம் ஆண்டு துப்பாக்கிச்சூடு சம்பவம் வேறு. பல மாதங்கள் அவருக்கு படங்களில் நடிக்க முடியாத நிலை. 'ஒரு தாய் மக்கள்' படத்தயாரிப்பும் தாமதமாகி 1971ம் ஆண்டுதான் சட்டப்பேரவைத் தேர்தல் முடிந்து படம் வெளியானது.

பல படங்களில் நடித்து வந்த ஜெய்சங்கருக்கு எம்.ஜி.ஆருக்கு ஏற்றார் போல, கால்ஷீட் ஒதுக்க முடியவில்லை. அவர் நடித்த மற்ற படங்களின் படப்பிடிப்பு பாதிக்கப்படும் என்ற சூழ்நிலையில், 'ஒரு தாய் மக்கள்' படத்தில் இருந்து விலகிக் கொண்டார். பின்னர், அந்தப் படத்தில் ஜெய்சங்கருக்குப் பதிலாக முத்துராமன் நடித்தார்.

ஜெய்சங்கர் எந்தக் கட்சியையும் சாராதவர். பிற்காலங்களில் திமுக தலைவர் கருணாநிதி வசனம் எழுதிய சில படங்களில் நடித்தார் என்ற வகையில் அவர் மீது திமுக முத்திரை குத்தப்பட்டது. ஆனால், கட்சி நிர்வாகிகளின் சொத்துக் கணக்கு கேட்டதற்காக திமுகவில் இருந்து எம்.ஜி.ஆர் வெளியேற்றப்பட்ட பின், 1974ம் ஆண்டில் ஜெய்சங்கர் நடிப்பில், 'உன்னைத்தான் தம்பி' என்ற படம் வெளியானது. அதில் ஜெய்சங்கர் பேசும் வசனங்கள் எம்.ஜி.ஆருக்கு ஆதரவாக அவர் பேசுவது போல இருக்கும்.

1976ம் ஆண்டு ஜனவரி 31ம் தேதி திமுக ஆட்சி டிஸ்மிஸ் செய்யப்பட்ட பின், தேர்தலை தமிழகம் எதிர் நோக்கியிருந்த நேரம். அப்போது வெளியான 'பணக்காரப் பெண்' படத்தில், 'ஜானகியின் நாயகனே ராமச்சந்திரா, ராமச்சந்திரா, தர்மம் ஜெயிக்கும் என்று சொன்னவனே ராமச்சந்திரா, ராமச்சந்திரா, நீ நாடாள வரவேண்டும் இந்த நாளிலே...' என்ற டி.எம்.சவுந்தரராஜன் பாடிய பாடல் இடம்பெறும். இந்தப் பாடலை படத்தில் ஜெய்சங்கர் பாடி நடித்தார். எம்.ஜி.ஆருக்கு ஆதரவாக கருதப்பட்ட இந்தப் பாடல் அப்போது பரபரப்பை ஏற்படுத்தியது. அதனால், ஜெய்சங்கர் அதிமுகவைச் சேர்ந்தவர் என்று அர்த்தமல்ல. ஒரு நடிகர் என்ற முறையில் தனக்கு கொடுக்கப்பட்ட வேலையை ஜெய்சங்கர் செய்தார். மற்றபடி, எல்லோரையும் நண்பர்களாகக் கருதி பழகியவர் அவர்.

சத்யா ஃபிலிம்ஸ் பேனரில் ஆர்.எம். வீரப்பன் தயாரித்த 'கன்னிப் பெண்' படத்தில் ஜெய்சங்கர் நடித்தார். படப்பிடிப்பை கிளாப் அடித்து தொடங்கி வைத்தது எம்.ஜி.ஆர்தான்! அப்போது, எம்.ஜி.ஆருடன் ஜெய்சங்கர் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார். உடலைக் கட்டுக் கோப்பாக வைத்துக் கொள்வதற்கான உடற்பயிற்சிகள் பற்றி அவருக்கு எம்.ஜி.ஆர் ஆலோசனைகள் கூறினார்.

அந்தப் படத்தில் எம்.ஜி.ஆரின் மெய்க்காப்பாளர்களில் ஒருவரும் ஸ்டண்ட் நடிகருமான கே.பி.ராமகிருஷ்ணனும் சிறிய வேடத்தில் நடித்திருந்தார். எம்.ஜி.ஆர் சென்ற பிறகு, அவரைப் பற்றி தனது கருத்தை ராமகிருஷ்ணனிடம் ஜெய்சங்கர் பகிர்ந்துகொண்டார். "எம்.ஜி.ஆரிடம் எனக்குப் பிடித்தது மற்றவர்களுக்கு உதவும் அவரது தாராள குணம். திரையுலகிலும் அரசியலிலும் அவரவர்கள், தாங்கள் சார்ந்த கட்சியினரை திருப்திப்படுத்துவதற்காக வேண்டுமானால் எம்.ஜி.ஆர் பிறருக்கு கொடுப்பதை விளம்பரத்துக்காகக் கொடுக்கிறார் என்று குறை கூறலாம். ஆனால், பிறருக்கு உதவும் அவரது உயர்ந்த குணத்தை என்னைப் போன்ற நடுநிலையாளர்கள் ரசிக்காமலும் பாராட்டாமலும் இருக்க முடியாது" என்று ஜெய்சங்கர் தன்னிடம் கூறியதை நினைவுகூர்கிறார் கே.பி.ராமகிருஷ்ணன்.

> எம்.ஜி.ஆரோடு ஜெமினிகணேசன் நடித்த ஒரே படம் தேவர் பிலிம்ஸ் தயாரிப்பில் வெளியான 'முகராசி'. எம்.ஜி.ஆரின் அண்ணனாக ஜெமினி கணேசன் இந்தப் படத்தில் நடித்திருப்பார்.

'ரிக் ஷாக்காரன்' படத்தில் நடித்ததற்காக எம்.ஜி.ஆருக்கு இந்தியாவிலேயே சிறந்த நடிகருக்கான 'பாரத்' விருது வழங்கப்பட்டது. அது தொடர்பாக சர்ச்சை ஏற்பட்டது. "எம்.ஜி.ஆருக்கு 'பாரத்' விருது கொடுத்திருப்பது நியாயம்தானா?" என்று ஜெய்சங்கரிடம் நிருபர்கள் கேட்டனர்.

அதற்கு அவர், "இது ஜனநாயக நாடு. மக்கள் விரும்பினால் தவிர படம் ஓடாது. எம்.ஜி.ஆர் படங்கள் சில 25 வாரங்கள் தாண்டி ஓடுகின்றன. 35 வருடங்களாக சினிமாவில் நடித்துக் கொண்டிருக்கிறார். பல வருடங்களாக கதாநாயகனாக நடித்து வருகிறார். இன்னும் பல படங்களுக்கு கதாநாயகனாக ஒப்பந்தமாகிக் கொண்டு இருக்கிறார். ஆக, மக்கள் ஏற்றுக் கொண்டார்கள் எனும்போது தேர்வுக் குழுவினர் ஏற்றுக் கொண்டதை நாம் ஏன் மறுக்க வேண்டும்? 'பாரத்' விருது அவருக்கு வழங்கப்பட்டதை நான் வரவேற்கிறேன். மகிழ்ச்சி அடைகிறேன்" என்று ஜெய்சங்கர் மனமார எம்.ஜி.ஆரை வாழ்த்தினார்.


'பாரத்' விருது பெற்றதற்காக பத்திரிகை யாளர்கள் சங்கம் சார்பில் சென்னையில் உள்ள பிரபல ஓட்டல் ஒன்றில் எம்.ஜி.ஆருக்கு பாராட்டு விழா நடத்தப்பட்டது. கூட்டத்தில் எம்.ஜி.ஆர் பேசும் போது, ஜெய்சங்கரின் இந்தப் பேட்டியைப் பற்றிக் குறிப்பிட்டார். "உண்மை எப்படி இருக்கிறது என்பதல்ல; அந்த உண்மையை வெளியில் சொல்ல துணிவு வேண்டும். அதற்காக ஜெய்சங்கருக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டார்.

எம்.ஜி.ஆருக்கு தன்னைப் போலவே பிறருக்கு உதவும் ஜெய்சங்கரைப் பிடிக்கும். உண்மையையும் பிடிக்கும்!





தொடரும்...



# ஓங்கியடித்தால் ஒன்றரை டன் வெயிட்

தி கிரேட் காளி, முதன் முறையாக WWE ரிங்கில் நுழைந்த போது எல்லா போட்டியாளர்களுமே மிரண்டனர். அண்டர்ரேக்கரை அல்றவிட்டார்.. பற்றிட்ஷாவை பதறவைத்தார் என கருணாநிதி பாணியில் எதுகைமோனையாக எழுதத்தக்க நாட்கள் அவை.

அதுவரை அண்டர்டேக்கர், பிக் ஷோ, கேன் போன்றவர்கள் தான் WWEயின் ஜைஜாண்டிக் பிம்பங்களாக இருந்தனர். அவர்களே, தி கிரேட் காளி முன்னர் ஏதோ பாடசாலை பிள்ளைகள் போல தோற்றமளித்தனர். ஓங்கி அடிச்சால் ஒன்டரை டண் வெயிட் என எதிராளியின் உச்சந்தலையில் ஒரே போடாக போடுவது, தலையை பிடித்து நசுக்குவது என கற்றவித்தைகளை எல்லாம் மொத்தமாக இறக்கி மிரட்டினார். கிரேட் காளி பற்றி இப்படி சொல்வதற்கு நிறைய இருந்தாலும், அதைவிட பெரியகதை உள்ளது. அது சொந்தக்கதை சோகக்கதை. பெரும் சிரமங்களை, உபாதைகளை கடந்துதான் அவர் எல்லோர் கண்ணுக்கும் முன்னபாக வந்தார்.

அங்கப்பாரிப்பு (Acromegaly) எனும் கூடுதலான அல்லது அதிகப்படியான ஹோர்மோன் வளர்ச்சி பாதிப்பு உடையவர் தி கிரேட் காளி. இது ஒரு இலட்சத்தில் ஆறு பேருக்கு மாத்திரமே ஏற்படும். இதன் காரணத்தால் தான் தி கிரேட் காளி 7'1 அடி உயரமும், 346 பவுண்ஸ் உடல் எடையும் கொண்டுள்ளார். இந்த அங்கப்பாரிப்பு பாதிப்பு உண்டானால் முகத்தில் தாடை, நெற்றி மற்றும் கை, கால்கள் மிகவும் பெரிதாக இருக்கும். இதை நாம் தி கிரேட் காளியிடமும் காண முடிகிறது.

இந்தியின் பிக்பாஸ் சீசன் 4ல் தி கிரேட் காளி ரன்னர் அப்பாக வெளியேறினார். இவர் அந்த சீசனில் இரண்டு முறை வீட்டின் தலைவர் பொறுப்பு ஏற்றிருந்தார். அங்கே இவரது உடலமைப்புக்கு படுக்கை கிடைக்காததால், நிகழ்ச்சி தயாரிப்பாளர்கள் இவருக்கென பிரத்தியேக படுக்கை தயாரித்துக் கொடுத்தனர்.

தி கிரேட் காளிக்கு 2002ல் திருமணம் ஆனது. இவரது மனைவியின் பெயர் ஹர்மிந்தர் கவுர். WWEல் காளியை பஞ்சாபி ப்ளேபாய் என டேக் செய்தனர். லொக்கர் ரூமில் பல பெண்களுடன் முத்தங்கள் இட்டுக் கொள்வது போன்ற நிகழ்வுகள் நடந்ததால், இவரது மனைவி உடனே வீட்டுக்கு வாங்க, WWE எல்லாம் போதுமென கூறினாராம். இதை எக்கனோமிக் டைம்ஸ்க்கு அளித்த பேட்டியில் தி கிரேட் காளி நகைச்சுவையாக கூறியுள்ளார்.

தி கிரேட் காளிக்கு 2012ல் கட்டி ஒன்று நீக்கப்பட்டது. அங்கப்பாரிப்பு பிரச்சனை இருந்தால் கட்டி உண்டாகுமாம். இதற்கு காரணம் கூடுதலாக வளரும் ஹோர்மோன் உற்பத்திதான். இதனால் அவரது பிட்யூட்டரி சுரப்பியில் கட்டி உருவானது. இதை 2012ல் நீக்கினர். இந்த அறுவை சிகிச்சை முடிந்த மூன்று மாதம் கழித்து மீண்டும் WWEல் பங்குபெற்றார்.


இவரை பார்க்க ஜைஜாண்டிக் உருவம் கொண்டிருந்தாலும், பல நோய்களால் அவதிப்பட்டு வருகிறார். அங்கப்பாரிப்பு, கட்டி நீக்கம் மட்டுமின்றி, நீரழிவு, இதயநோய் மற்றும் உயர் இரத்த அழுத்தமும் இருக்கிறது. அன்ட்ரூ தி ஜியன்ட் கூட கிரேட் காளி போல அங்கப்பாரிப்பு பாதிப்பு கொண்டிருந்தார். அன்ட்ரூ தனது 46 வயதில் இதயநோய் காரணமாக மரணமடைந்தார். அடுத்ததாக இந்த பிரச்சனையால் பாதிக்கப்பட்ட நபர் பிக் ஷோ. இவர் 1990 இலேயே பிட்யூட்டரி சுரப்பி அறுவை சிகிச்சை மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

மல்யுத்தம் என்றாலே காயங்கள் இல்லாமல் இருக்காது. தி கிரேட் காளியும் பல காயங்களுக்கு ஆளாகியுள்ளார். அவை அனைத்தையும் கடந்து நன்றாக இருக்கிறேன் என கூறுகிறார் காளி. ஒரு முறை காயம் உண்டாகி வெளியேறினால், மீண்டும் WWE-ல் பங்கேற்க ஃபிட்னஸ் டெஸ்டில் பாஸ் ஆக வேண்டும் என்ற நிபந்தனை இருக்கிறது. அடிக்கடி காயமடைந்தாலும் ஃபிட்னெஸ் டெஸ்டை வெற்றிகரமாக கடந்து விடுவார்.

இப்பொழுது WWE யில் இருந்து கொஞ்சம் விலகியிருக்கிறார். கடந்த ஏழு மாதங்களாக போட்டிகளில் கலந்துகொள்ளாமல் நீண்ட இடைவேளை எடுத்திருக்கிறார். பெப்ரவரி, 2017ல் ஜெப் லூயிஸ் நீள் மற்றும் ஜேக் மேன்னிங் உடன் போட்டியிட்டார். இந்த போட்டிகளில் இவர் விரைவில் வெற்றி கண்டுவிட்டார். எனினும் உபாதைக்குள்ளானார். மீண்டும் இவர் எப்போது WWEல் பங்குபெறுவார் என்பது கேள்விக் குறியாக இருக்கிறது.

## கட்டுக்கடங்காத காளை

கடந்த வாரம் wwe raw பிரிவில் நடந்த இரும்புக்கூண்டு போட்டியில் பிக் ஷோவை சின்னா பின்னப்படுத்திவிட்டார் ஸ்ரோமான். கடந்த சில மாதங்களாக வீழ்த்த முடியாத மாமிசமலையாக raw பிரிவில் ஆட்சிசெலுத்தும் ஸ்ரோமானிற்கு பிக் ஷோ ஓரளவு சவால் அளித்த போதும், அவரால் ஸ்ரோமானிற்கு எதிராக ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. போட்டியில் வெற்றிபெற்ற பின்னர், பிக் ஷோவை இரும்புக்கூண்டை உடைத்தபடி வெளியே வீசியது ஸ்ரோமான் பற்றிய அச்சவுணர்வை அதிகரிக்க செய்துள்ளது. விரைவில் யுனிவேர்சல் சம்பியன் புரொக் லெஸனருடன் மோதவுள்ளார் ஸ்ரோமான். கட்டுங்கடங்காத காளையாக திமிறி திரியும் ஸ்ரோமானை எப்படி சமாளிக்கப் போகிறார் லெஸனர் என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.



## கடின உழைப்பிற்கு கனேபி!

கடின உழைப்பும், மன உறுதியும் இருந்தால் வயதும் நோயும் ஒரு பொருட்டல்ல என்பதை நிரூபித்த வீராங்கனை ஈஸ்டோனியா நாட்டு டென்னிஸ் வீராங்கனை கயா கனேபி ஆவார். இவர் உலக டென்னிஸ் தரவரிசை 418ம் இடத்தில் இருந்து யு.எஸ். ஓபன் காலிறுதிக்கு முன்னேறி சாதனை படைத்தார்.

32 வயதான கனேபி உலகத் தரவரிசை 15ம் இடத்தில் இருந்தவர். ஏதோ இனம்புரியாத வைரஸ் நோய் காரணமாக இரண்டு கால்களும் முடமாகும் அளவுக்கு அவர் பாதிக்கப்பட்டார். இதனால் அவரது டென்னிஸ் வாழ்க்கையே கேள்விக் குறியானது. ஆனால் அதிலிருந்து மீண்டு வந்து தனது தரவரிசை நிலை 418 என்பதையும் மறந்து ரஷ்யாவின் டாரியா கஸாட்கினாவை 64, 64 என்று வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார் கனேபி. தனது வெற்றிகுறித்து மகிழ்ச்சி தெரிவித்த கனேபி, "நாம் நேசிப்பதைச் செய்ய வேண்டும், அப்படிச் செய்தால் நாம் நினைப்பது நம்மைத் தேடி வரும்" என்கிறார் இந்த உறுதிபடைத்த வீராங்கனை கனேபி.

# துடுப்பாட்டத்தில் தோனி செய்த இரண்டு முக்கிய மாற்றங்கள்




தோனிக்கு அழுத்தம் அதிகரித்துள்ளதால் அவர் தன் துடுப்பாட்டம் குறித்த ஒரு தன்னுணர்வுக்கு வந்தடைந்துள்ளார். பொதுவாக தோனி துடுப்பாட்டத்தில் சிறந்த உத்திக்கு பெயர் பெற்றவர் இல்லை. அவரே இதனை ஒப்புக் கொண்டுள்ளார்.

அதிகமாக ஸ்விங் ஆனால் நடந்து வந்து ஆடுவார், அவ்வளவுதான் அவருக்குத் தெரிந்த உத்தி. சிக்சர்களை தன் இஷ்டத்துக்கு அடிக்கும் தோனி, ஒன்று இரண்டு என்று விரைவாக ஓடி ரன் சேர்ப்பதை தனது பினிஷிங் ரோலுக்காகப் பழகிக் கொண்டார்.

இதனால் பவுண்டரி அடிக்க வேண்டிய பந்துகளைக் கூட தோனி காலை நீட்டி கிண்டி விட்டு ஒன்று, அல்லது இரண்டு ரன்களை எடுப்பது என்று ஆடியதால் அவரிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமக பெரியஸ்ட்ரோக்குகள் காணாமல்போயின. பந்துவீச்சாளர்கள் கடைசி தருணங்களில் தோனிக்கு வீசுவதைக் கனவில் கூட விரும்பாதவர்கள், திடீரென தோனிக்கு வீச நான், நீ என்று போட்டி போடும் அளவுக்கு அவரது துடுப்பாட்டத்தில் சரிவு ஏற்பட்டது. மே.இ.தீவுகளுக்கு எதிரான டி20யில் கடைசியில் பினிஷ் செய்ய முடியாமல் ஷோர்ட் தேர்ட் மானில் கட்ச் கொடுத்தது, சமீபத்தில் மே.இ.தீவுகளில் சிறிய இலக்கைக் கூட பினிஷ் செய்ய முடியாமல் அவுட் ஆகி விரக்தியடைந்தது என்று நாம் பார்த்து வருகிறோம். இது மட்டுமல்ல இதற்கு முன்னரும் கூட சில போட்டிகளில் தோனி திணறியதையும் பார்த்திருக்கிறோம்.

இந்நிலையில் 'பினிஷர்' பினிஷ் ஆகி விட்டார் என்ற ரீதியில் விமர்சனங்கள் எழ தற்போது இலங்கைத் தொடரில் 3 நொட் அவுட்களுடன் உறுதியான ஒரு துடுப்பாட்டத்தை காட்டி வருகிறார்.

இதற்காக அவர் 2 மாற்றங்களைச் செய்து கொண்டார். ஒன்று சச்சின், சேவாக், கங்குலி ஆகியோர் அணியும் இரண்டு ஸ்ட்ராப்கள் மட்டுமே உள்ள கால்காப்பிலிருந்து வழக்கமான, பாரம்பரியமான கால்காப்புக்கு அவர் மாறியுள்ளார், இந்த கால்காப்புகளில் 3 ஸ்ட்ராப்கள் இருக்கும்.

இது என்ன மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கும் என்று கேட்கலாம். சச்சின், சேவாக், இதுவரை தோனி அணிந்த கால்காப்புகள் மற்ற கால்காப்புகளைக் காட்டிலும் எடை குறைவானது, லேசானது. பாரம்பரியமான கால்காப்புகளில் 3 ஸ்ட்ராப்கள் இருக்கும். முழங்காலை இன்னும் கொஞ்சம் சுதந்திரமாகப் பயன்படுத்தி ஆட உதவக்கூடியது பாரம்பரியமான கால்காப்புகளே.

ஆகாஷ் சோப்ரா என்ன கூறுகிறார் என்றால், முன் முழங்காலை எளிதில் மடக்கி நீட்டி ஆடுவதற்கு சச்சின், சேவாக் ரக கால்காப்புகள் கொஞ்சம் சிரமம் கொடுக்கும் காரணம் அதன் முதல் ஸ்ட்ராப் ஏறக்குறைய முழங்காலுக்கு நேர் பின்னால் இருக்கும். ஐபிஎல் போட்டிகளில் தோனி தனது முன் முழங்காலை நன்றாக நீட்டி, மடக்கி ஆடுவதற்கு முயற்சி செய்ததாகவும் ஆகாஷ் சோப்ரா தெரிவித்தார். ஸ்பின்னர்களை ஆடும் போது மரபான கால் காப்புகள் முழங்காலை நன்றாகப் பயன்படுத்த உதவுகின்றன. புதிய வகை கால்காப்புகளினால் அவரால் ஸ்பின்னர்களைவொர்க்செய்து சிங்கிள்கள், இரண்டுகள் எடுக்க முடியாமல் திணறும் நிலை ஏற்பட்டது. தற்போது இந்தக் கால்காப்புகளை அவர் மாற்றியவுடன் கொஞ்சம் அவரது கால்பிரயோகங்களில் மாற்றம் தெரிகிறது.

இன்னொரு மாற்றம் என்னவெனில் தோனி பெரும்பாலும் பந்துவீச்சாளர்கள் ஓடி வரும்போது மாற்றமில்லாத ஒரு நிலையான ஸ்டான்ஸைத்தான் விரும்புவார். கண்களைக் கூட சிமிட்ட மாட்டார். இதனால் தொடக்க நகர்வு இல்லாமல் போனது. தற்போது வலது கால் லெக் ஸ்டம்பிலிருந்து ஓப் ஸ்டம்புக்கு நகர்கிறது, பக் அண்ட் அக்ராஸ் என்று இதனைக் கூறுவதுண்டு. அதன் பிறகு முன்னங்காலை நகர்த்தி ஆடுவது, இதைத்தான் சச்சின் டெண்டுல்கர் தனது ஆக்ரோஷ ஆரம்ப நாட்களில் கடைபிடித்தார், சச்சின். மட்டுமல்ல வேகப்பந்து வீச்சில் களத்திலேயே ஆடிப்பழகிய யாராக இருந்தாலும் பக் அண்ட் அக்ராஸ் உத்தியைக் கடைபிடிப்பர். சச்சின் டெண்டுல்கர் ஆடிய முதல் 34 டெஸ்ட் தொடர்கள் அயல்நாட்டில் குறிப்பாக பாகிஸ்தான், நியூஸிலாந்து, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய வேகப்பந்து வீச்சாளர்கள் அதிகம் இருந்த நாடுகளில் நடந்தது, இதனால் வேகப்பந்து வீச்சை திறம்பட விளையாட சச்சின் இந்த பக் அண்ட் அக்ராஸ் உத்தியை, அதாவது வலது காலை ஓப் ஸ்டம்ப் நோக்கி நகர்த்தி பிறகு தேவைப்பட்டால் முன்னங்காலைக் கொண்டு வரும் உத்தியைக் கடைபிடித்து வெற்றி கண்டார்.

இதைத்தான் தோனி தற்போது செய்து வருகிறார். மீண்டும் ஆகாஷ் சோப்ரா என்ன கூறுகிறார் என்றால், "பந்துவீச்சாளர்கள் வீச வரும்போது உடல் நிலையாக இருப்பதை விட ஒரு நகர்வு இருந்தால் பந்துக்கு சரியாக வினையாற்ற முடிகிறது" என்கிறார். விலா எலும்புக்கு பந்துகளை வீசுபவர்களை எதிர்கொள்ள இந்த பக் அண்ட் அக்ராஸ் உத்தி கைகொடுக்கும் என்கிறார் ஆகாஷ் சோப்ரா. இந்த நகர்வினால்தான் தோனி தற்போது ஷோர்ட் பிட்ச் பந்துகளை மிட் விக்கெட்டில் வெளுக்கிறார். முன்னதாக சற்றே இத்தகைய பந்துகளில் ரன் எடுக்கத் திணறினார். பந்தை முன் கூட்டியே ஆட முயற்சி செய்வதன் ரிஸ்கை தவிர்க்க தோனி தற்போது பந்து வந்தவுடன் தேவையான இடத்தில் பந்தை அனுப்ப தற்போது இந்த உத்தியைக் கடைபிடித்து வருகிறார்.

கடைசியில் கிரிக்கெட் ஆட்டத்திற்கு உத்தி மிகவும் முக்கியம் என்ற தன்னுணர்வுக்கு தோனி வந்துள்ளார். ●





▶ நெடுங்கேணி பொலிஸ் பிரிவின் நடமாடும் சேவை நிறைவு நிகழ்வு கற்குளம் கிராமசேவகர் பிரிவில் இடம்பெற்றது. பாடசாலை மாணவர்கள், விளையாட்டு கழகங்களிற்கிடையில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களிற்கும் பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டது. இலவச தெனன்ங்கன்றுகளும் வழங்கிவைக்கப்பட்டன. நெடுங்கேணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் தலைமையில் நடந்த நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர், உதவி பிரதேசசெயலாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



▶ நாவற்குழி சரஸ்வதி சனசமூக நிலையமும், விளையாட்டுக்கழகமும் இணைந்து நடாத்திய விளையாட்டுவிழாவின் தாச்சிச்சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியும், பரிசளிப்பு விழாவின்போதும் எடுக்கப்பட்ட படங்கள்.



# குரு பகவான கல்யாணத்திற்கு உதவுவாரா?

**காரகம் யோகம் தோஷம்**

குரு என்ற சொல்லிற்கு அறியாமையை அகற்றுகிறவர் என்று பொருள். ஜோதிட சாஸ்திரத்தின்படி வியாழன் என்றும், பிரகஸ்பதி என்றும் அழைப்பர். தேவர்களின் அரசனாக விளங்கிய காரணத்தால் தேவகுரு என்றும், நுண்ணறிவு மிகப்படைத்து கல்வி, கேள்விகளில் சிறந்தவர் என்பதால் பிரகஸ்பதி என்ற திருநாமங்கள் அமைந்தன. நம் உடலிலும், உள்ளத்திலும் இறைவனுடைய சக்தியை பிரதிபலிக்கிறவராகவும், நம்முடைய வழிபாட்டின் மூலமாக இறைசக்தியை நம்மனத்துள் நிரப்புபவராகவும் உள்ளவர் இவர். இதனாலேயே இவரைத் தெய்வீக அறிவுக்கும் வேதாந்த ஞானத்திற்கும் மூலப்பொருளான காரகன் என்பார்கள். மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவைகள் இரண்டு. ஒன்று பொருட்செல்வம், இன்னொன்று புத்திர யோகம். இந்த இரண்டிற்கும் காரகன் அதாவது, ஆதிக்கம் செலுத்தக்கூடிய கிரகம் குருபகவான்.

அத்துடன் நீர்த்தன்மை வாய்ந்த கிரகம், மறைமிகு நூல்கள், மேதா விலாசம், சாஸ்திர ஞானம், நற்பண்புகள், செல்வம், செல்வாக்கு, சொல்வாக்கு, ஐஸ்வர்யம், தங்கம், தனம், புகழ், கீர்த்தி, பக்தி, ஞானம், மந்திர உபதேசம், தானம், தியானம், தர்மம், புத்திரம், நிதி, நீதி, நீதிபதிகள். வக்கீல், மந்திரி மதபோதகர், மதத்தலைவர், மடாதிபதி, ஆன்மிகத்துறவிகள், அறங்காவலர்கள், ஆசான், ஆசிரியர், வழிகாட்டி, விரிவுரையாளர், பேச்சாளர், பள்ளிகள், கல்லூரிகள், தர்மஸ்தாபனங்கள், சமூக சேவை நிறுவனங்கள், வேதம், வேதபாட சாலைகள், அன்ன சத்திரங்கள், சாஸ்திர ஆராய்ச்சி, தான் சார்ந்த மதத்தில் அதிகமான பற்று, பூஜை, யாகம், ஆகம சாஸ்திர விஷயங்கள் என பல்வேறு விஷயங்களில் குருவின் ஆதிக்கம் உள்ளது. ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்தி தத்துவ கோட்பாடுகளை விளக்கி வழிகாட்டுபவர்களை குரு என்று சொல்வார்கள். நமக்குத் தெரியாததைத் தெளிவுபடுத்தி கற்றுத்தருபவர்களை குலகுரு, ஜகத்குரு, ஆசான் என்று அழைக்கின்றோம். குரு இல்லாத வித்தை பாழ் என்று சொல்வார்கள்.

**குரு:** ஞான வழியை போதிப்பவர், தெளிவை ஏற்படுத்துபவர்.

**பரமகுரு:** குரு பரம்பரை, குருவிற்கு குருவாக இருப்பவர், மரபுகளை பேணிக் காப்பவர். ஆதிசங்கரர் போன்றவர்கள்.

**பராபரகுரு:** தத்துவங்கள் தோன்ற காரணகர்த்தாக்கள், மகாகுரு. துவைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் போன்ற வற்றை நாம் அறிந்து உணர்ந்துகொள்ள காரணமானவர்கள். இவர்கள்தான் வேதவியாசர் போன்ற மகாரிஷிகள்.

**பரமேஷ்டிகுரு:** இகபர சுக இன்ப துன்பங்களில் இருந்து நம் கர்ம வினைக் கேற்ப பலாபலன்களை அருளும் மிகமிக உயர்ந்த இறை தூதர்கள், அடியார்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், மகான்கள். இதன் ஒட்டு மொத்த இறைக்கோலம்தான் சிவனின் தட்சிணாமூர்த்தி அம்சமாகும்.

**ஜோதிடத்தில் குருவின் செயல்கள்**

ஜோதிட சாஸ்திரத்தில் ஒவ்வொரு கிரகத்துக்கும் ஒவ்வொரு விதமான அம்சம், ஆளுமை, காரகத்துவம் உள்ளன. நமக்கு நடைபெறும் பலாபலன்கள் பிறந்த ஜாதக கட்டத்தின் அடிப்படையில் அந்தக்காலத்தில் நடைபெறும் தசாபுக்திகள்தான் காரணமாகின்றன. ஒருவருக்கு நன்மை செய்யும் கிரகம் மற்றொருவருக்கு தீமை செய்யும். ஒருவருக்கு நல்ல யோகத்தை தரும் தசாபுக்தி, மற்றவருக்கு பாதகமான பலனை செய்யும். ஒருவருக்கு நல்ல ராஜயோக வசதி வந்தால் சுக்கிர தசை அடிக்கிறது என்பார்கள். ஒருவர் மிகவும் கஷ்ட நிலையில் இருந்தால் அதற்கு சனி காரணம் என்று வீண்வதந்தி பரப்புவார்கள். இந்த வகையில் தேவகுரு என்று சாஸ்திரத்தில் சிறப்பித்து கூறப்பட்டுள்ள முழு சுபகிரகமான குருவிற்கு சுப, அசுப, தோஷ பலன்கள் உண்டு. இவருக்கு மற்ற கிரகங்களைப்போலவே மறைவு ஸ்தானம், நீச்சம், வக்ரம், ஆட்சி, உச்சம் என்று கலவையான அம்சங்கள் உண்டு.

குரு சுபகிரகமாக இருப்பதால் அவருக்கு பார்வை பலம் சுபமாக உள்ளது. குருவின் பார்வை பல தோஷங்களை போக்கும் என்பது சாஸ்திர விதி. குரு பார்வைதான் சிறப்பாக சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. அதுவும் குரு எந்த நிலையில் இருந்து பார்க்கிறார், எந்த வீட்டில் பார்வை படுகிறது குருவின் ஆதிபத்தியம் என்ன என்று பல்வேறு விஷயங்கள் உள்ளன. குரு எந்த வீட்டில் இருந்தாலும் ஏதாவது ஒரு கிரகத்துடன் சேர்க்கை பெற்று இருப்பது நல்லது. அப்படி இல்லாமல் தனித்த குருவாக இருந்தால் அந்த ஸ்தானம் சுகப்படாது என்பது சாஸ்திர விளக்கம் மட்டுமல்ல, அனுபவத்திலும் பொருந்தி வருவது." குரு சில முக்கியமான வீடுகளில் தனியாக இருந்தால் அந்தக் குறிப்பிட்ட ஸ்தானம் பலம் குறைந்துபோகும்.

(தொடரும்)

# இந்தவார ராசி பலன்கள்

## 10.09.2016 – 16.09.2016

**மேஷம்:** சுகஸ்தானத்தில் சுக்கிரன், ராகுவுடன் இருப்பதால் நிறை, குறைகள் உண்டு. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அவசிய, அநாவசிய செலவுகள் வந்து போகும். சொத்து சம்மந்தமாக அவசர முடிவுகள் வேண்டாம். 5ல் செவ்வாய், சூரியன் இருப்பதால் சிந்தனை அதிகரிக்கும், பிள் ளைகள் அனுசரணையாக இருப்பார்கள். அரசாங்க விஷயங்கள் அனுகூலமாய் முடியும். சொந்த பந்தங்களிடம் வீண் விவாதங்களைத் தவிர்க்கவும். நின்று போன கட்டிட வேலைகளை மீண்டும் தொடங்கு வீர்கள். வார பிற்பகுதியில் வெளியூர் பயணங்கள் இருக்கும்.

**ரிஷபம்:** சுக்கிரன் கேது பார்வையுடன் இருப்பதால் மனதில் பல எண்ணங்கள் தோன்றும். கணவன், மனைவி இடையே மனக் கசப்புக்கள் வரலாம். சூரியன் 4ல் பலம் பெறுவதால் அலைச்சல் நீங்கும், தாயார் உடல் நலம் சீராகும், சொத்து சம்மந்தமாக ஒருமித்த கருத்து ஏற்படும். கடல்கடந்து செல்வதற்கான அமைப்பு உள்ளது. செவ்வாய் மூலம் சில நன்மைகள் இருந்தாலும் அலுவலகத்தில் தேவையில்லாத விஷயங்களில் தலையிட வேண்டாம். புதிய வாகனம் வாங்கும் யோகம் உள்ளது. தொழில், வியாபாரம் செழிப்படையும். புதிய முயற்சிகள் வெற்றியடையும்.

**மிதுனம்:** சாதக, பாதக, வரவு செலவுகள் உள்ள நேரம். வாக்குவாதம், வாக்குறுதி இரண்டையும் தவிர்க்கவும். மகன் திருமண விஷயமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சூரியன் 3ல் நிற்பதால் தடைகள் நீங்கும். கொடுக்கல், வாங்கலில் நின்றுபோன தொகை வசூலாகும். இரண்டில் சுக்கிரன் இருப்பதால் பொன், பொருள் சேர்க்கை உண்டு. சொந்த பந்தங்களின் விசேஷம் காரணமாக மொய், பரிசுகள் என்று செலவுகள் வரும். கண் சம்மந்தமான கோளாறுகளை அலட்சியம் செய்ய வேண்டாம். ஆன்மிக சுற்றுலா செல்வதற்கான வாய்ப்பு கிடைக்கும்.

**கடகம்:** சூரியன், செவ்வாய் சுப பலம் காரணமாக உற்சாகமாக காணப்படுவீர்கள். விலகி நின்ற சொந்தங்கள் நெருங்கி வந்து உறவாடுவார்கள். சொத்து சம்மந்தமாக எல்லாம் சாதகமாக கூடிவரும். சுக்கிரன், ராகுவுடன் இருப்பதால் வீண் செலவுகள், அலைச்சல்கள் வந்து நீங்கும். புதிய வேலைக்கு முயற்சித்தவர்களுக்கு நல்ல செய்தி வரும். குரு, சந்திரன் பார்வை காரணமாக கடல் கடந்து செல்ல வேண்டியிருக்கும். மனைவியின் ஆசையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரம் சீராக இருக்கும். கையில் காசு, பணம் புரளும், எதிர்பார்த்த ஒப்பந்தம் கிடைக்கும்.

**சிம்மம்:** சனிபகவானின் சஞ்சாரம் காரணமாக அலைச்சல், பயணங்கள், செலவுகள் இருந்தாலும் சூரியனின் ஆட்சி பலம் காரணமாக எதையும் சமாளித்து விடுவீர்கள். ராசியில் செவ்வாய் இருப்பதால் பேச்சில் கவனம் தேவை. சகோதரர்களால் அனுகூலம் இருக்கும். வழக்கில் ஏற்பட்ட தடை, தாமதங்கள் நீங்கும். நண்பர்களிடையே சில கருத்து வேறுபாடுகள் வரலாம். வயிறு மற்றும் சிறுநீரக உபாதைகள் வர வாய்ப்புள்ளது. உத்யோகத்தில் சாதகமான நிலை இருக்கும். வேலைச் சுமை குறையும். உயர் அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கன்னி:** சுக்கிரனின் பார்வை சாதகமாக இருப்பதால் மனநிறைவு உண்டு. சுபநிகழ்ச்சிகளுக்கு அச்சாரம் போடுவீர்கள். மகனிடம் இருந்து உதவிகள் கிடைக்கும். பழைய கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். சூரியன் 12ல் ஆட்சியாக இருப்பதால் அடிப்படை வசதிகள் பெருகும். குருபகவானின் பார்வை காரணமாக புதுமணத் தம்பதிகள் குழந்தை பாக்கியத்தை எதிர்பார்க்கலாம். 5ல் கேது இருப்பதால் ஆன்மிக தாகம் அதிகரிக்கும். பரிகார பூஜைகள், அபிஷேகம் என்று ஆன்மிக செலவுகள் உண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும்.

**துலாம்:** சுக்கிரன் ராகுவுடன் இருப்பதால் எதிலும் கவனம் பதியாமல் இருக்கும். குடும்பத்தில் கோபதாபங்களைக் காட்ட வேண்டாம். மருத்துவ செலவுகள் ஏற்பட்டாலும் அவை கட்டுக்குள் இருக்கும். புதனின் பார்வை காரணமாக எதிர்பார்த்த சுப செய்தி வரும். மாமன் வகை உறவுகளால் மகிழ்ச்சி உண்டு. பெண்கள் நகைகளை இரவல் கொடுப்பது, வாங்குவது கூடாது. பிள்ளைகளின் வேலை சம்மந்தமாக நல்ல நிறுவனத்தில் இருந்து ஒப்பந்தம் வரும். அலுவலகத்தில் வீண் அரட்டையை தவிர்ப்பது நல்லது. வியாபார சம்மந்தமான பயணங்கள் லாபகரமாக இருக்கும்.

**விருச்சிகம்:** முக்கிய முடிவுகள், திருப்பங்கள் ஏற்படும் நேரம். செவ்வாய் வலுவாக இருப்பதால் தொட்டது துலங்கும். கையில் பணம் புரளும், சூரியன் ஆட்சி பலத்துடன் இருப்பதால் பூர்வீக சொத்து சம்மந்தமாக நல்ல முடிவுகள் வரும். கட்டிட வேலைகளைத் தொடங்குவதற்கான யோகம் உள்ளது. சனி பகவானின் சஞ்சாரம் காரணமாக அலைச்சல், பயணங்கள், சோர்வு இருக்கும். இடமாற்றத்தை எதிர்பார்த்தவர்களுக்கு நல்ல தகவல் கிடைக்கும். எலக்ட்ரிக்கல் சாதனங்கள் செலவு வைக்கும். மாமனார் உடல் நலம் பாதிக்கப்படலாம். வியாபாரம் கை கொடுக்கும். வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். தொழிலை விரிவுபடுத்துவீர்கள்.


**தனுசு:** தன, வாக்கு ஸ்தானத்தில் கேது இருப்பதால் தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருப்பது உத்தமம். நண்பர்களிடையே கொடுக்கல், வாங்கலில் மன வருத்தங்கள் வரும். கண் சம்மந்தமான உபாதைகள் வர வாய்ப்புள்ளது. புதனின் பார்வை காரணமாக போட்டி பந்தயங்களில் கலந்து கொண்டு வெற்றி பெறுவீர்கள். தந்தையிடம் இருந்து உதவிகள் கிடைக்கும். சூரியன் சாதகமாக இருப்பதால் வழக்கு சம்மந்தமாக ஏற்பட்ட தடைகள் விலகும். உத்யோகத்தில் உங்கள் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும். காலியாக இருக்கும் இடத்திற்கு புதிய வாடகைதாரர்கள் வருவார்கள்.

**மகரம்:** ராசியில் கேது, 7ல் சுக்கிரன், ராகு இருப்பதால் நிறை, குறைகள், வரவு, செலவு என கலவையான பலன்கள் இருக்கும். எதையாவது நினைத்து மனதை குழப்பிக் கொள்வீர்கள். பிள்ளைகள், பேரன், பேத்திகள் மூலம் செலவுகள் ஏற்படும். லாபஸ்தான சனிபகவானால் நீண்ட நாள் பிரச்னைகள் முடிவுக்கு வரும். புதிய சொத்து வாங்குவதற்கான நேரம் காலம் வந்துள்ளது. வேலை சம்மந்தமாக தேர்வு எழுதியவர்களுக்கு நல்ல செய்தி உண்டு. வியாபாரம் ஸ்திரமாக இருக்கும். பாக்கிகள் வசூலாகும். புதிய பொருட்களில் முதலீடு செய்வீர்கள்.

**கும்பம்:** சந்திரனின் சஞ்சாரம் காரணமாக அலைச்சல், பயணங்கள், வீண் செலவுகள் இருக்கும். உங்களின் மன அழுத்தத்தை அடுத்தவர்களிடம் காட்ட வேண்டாம். சுக்கிரன் 6ல் ராகுவுடன் இருப்பதால் தாயாரின் சொல்லிற்கு கட்டுப்படுவது நல்லது. தாயார் மூலம் மருத்துவ செலவுகளுக்கு இடமுண்டு. சூரியன், புதன் பார்வை சாதகமாக இருப்பதால் உத்யோகத்தில் சாதகமான காற்று வீசும், நிலுவைத் தொகை, ஊக்கத் தொகை கைக்கு வந்து சேரும். பிரசித்தி பெற்ற கோயில்களுக்கு சென்றுவருவீர்கள். வியாபாரம் போட்டிகள், அலைச்சல் இருந்தாலும் கையில் பணப் புழக்கம் அதிகரிக்கும்.

**மீனம்:** ஆறாம் இடத்தில் முக்கூட்டுக் கிரக சேர்க்கை இருப்பதால் சாதக, பாதகங்கள் உண்டு. சூரியன் ஆட்சி பலத்தில் இருப்பதால் எதிர்ப்புகள் நீங்கும். உங்களுக்கு எதிராக காய் "நகர்த்தியவர்கள் தோல்வி" அடைவார்கள். வராத பணம் வசூலாகும். செவ்வாய் மூலம் அலைச்சல், பயணங்கள், செலவுகள் இருக்கும். சகோதரர்களால் மன வருத்தம் வந்து நீங்கும். வண்டி பழுதடைவதால் வேலைகள் தடைபடும். கர்ப்பமாக இருப்பவர்கள் உரிய கவனத்துடன் இருப்பது அவசியம். பெண்களின் சேமிப்பு பணம் தங்க நகைகளாக மாறும். வியாபாரம் லாபகரமாக நடக்கும். முயற்சிகளின் பேரில் பணத் தேவைகள் பூர்த்தியாகும்.

பீஷ்மர்



தாவூத் இப்ராகிம்

# பஞ்சாப்பில் கடத்தல் ராஜாவாக இருந்த புலிப்போராளி!

புலிகளின் ஆயுதல் கடத்தல் உலகத்தின் இன்னொரு பக்கத்தை இப்பொழுது குறிப்பிட போகிறேன். அது சற்று அதிர்ச்சியளிப்பதாக இருக்கலாம். ஆனால் வரலாற்றில் காய்தல் உவத்தல் இருக்க முடியாதல்லவா?

1980களின் ஆரம்பத்தில் மும்பை தாதா வரதராஜன் முதலி (வர்தா பாய்) உடன் புலிகளிற்கு தொடர்பு ஏற்பட்டது. அவரது பிரதான தொழிலே ஆப்கானிஸ்தானில் இருந்து கடத்தலில் ஈடுபடுவது. ஆப்கானிஸ் தான் போதைப்பொருள்களின் உற்பத்தி மையமாக இருந்தது. இந்தியாவில் மும்பையை மையமாக வைத்து செயற் பட்ட பிரதான தாதாக்கள் எல்லோருமே ஆப்கானிஸ்தானில் இருந்து போதைப் பொருள் கடத்துபவர்கள்தான். வர்தா பாயில் தொடங்கி தாவூத் இப்ராஹிம் வரை எல்லா தாதாக்களும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள்தான்.

இந்தியாவில் தங்கியிருந்த சமயத்தில் ஈழவிடுதலை அமைப்புக்கள் பலவற்றிற்கும் போதைப்பொருள் கடத்தலில் ஆர்வம் ஏற்பட்டது. இயக்கத்தை நடத்த, ஆயுதங்கள் வாங்க பெருந்தொகை பணம் தேவை. உள்ளூரில் வரி அறிவிடுவது, மக்களிடம் நிதி சேகரிப்பதெல்லாம் கால்தூசி பணம். இந்த பணத்தை கொண்டு ஆயுதம் வாங்க செல்ல முடியாது. இதனால் போதைப்பொருள் கடத்தலில் இயக்கங்கங்கள் உத்தியோக பற்றற்றமுறையில் ஈடுபட்டன.

எல்லா அமைப்புக்களும் இதில் ஈடுபட்ட போதும் புலிகளின் சர்வதேச வலையமைப்பு

**புலிகள் கரும்புலி படையணியை கலைக்க வேண்டுமென பகிரங்கமாக சொல்லலாம். ஆனால் போதைப்பொருள் கடத்தலை நிறுத்துமாறு சொல்ல முடியாது. ஏனெனில், அதை இயக்குவது புலிகளாக இருந்தாலும், உள்ளூர் ஆட்களை வைத்துதான் அதை செய்தார்கள். புலிகளின் பின்னணியை இதில் உறுதிப்படுத்துவதென்பது சிவனின் அடிமுடியை காண்பதற்கு சமன்.**

உலகளவில் விரிவடைந்ததால், சர்வதேச அளவில் மிகப்பிரமாண்டமாக அதை செய்ய முடிந்தது. புலிகள் தவிர்ந்த, இன்றும் நாட்டில் உள்ள அமைப்பொன்றின் மீது அண்மைக்காலம் வரை போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டு உள்ளதையும் நினைவூட்டுகிறேன்.

எதையும் கெட்டியாக பிடித்து, கச்சித மாக செய்வது புலிகளின் இயல்பு. போதைப்பொருள் வர்த்தகத்திலும் அப்படியே நடந்தது.


1983களில் முதன்முறையாக ஆப்கானிஸ் தானிற்கு ஈழவிடுதலை அமைப்புக்களின் உறுப்பினர்கள் போதைப்பொருள் வாங்க செல்ல ஆரம்பித்தனர். புலிகளின் சார்பிலும் இந்தக்காலத்தில் சிலர் அங்கு சென்றனர். ஆப்கானிஸ்தானில் இருந்து இந்தியா வழியாக போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் மிகப்பெரிய வலையமைப்புக்கள் இயங்கின. இதன் ஒரு பகுதியாகவே ஆரம்பத்தில் புலிகளின் ஆட்கள் வர்த்தகம் செய்தனர். சிறிதுகாலத்தில் வர்த்தகம் பிடிபட தொடங்க, தனி வலையமைப்பாக இயங்க தொடங்கிவிட்டனர்.

இந்த வர்த்தகத்தில் ஈடுபட்டவர்கள் இயக்க அடையாளத்துடன் செயற்பட வில்லை. சாதாரண கடத்தலில் ஈடுபடு பவர்களாகவே வெளியில் அறியப்பட் டனர். இப்படியான ஒருவரே, யாழ்ப்பாணம் புன்னாலைகட்டுவனை சேர்ந்த சிறீ என்பவரும். இவர் பஞ்சாபில் தங்கியிருந்து தொழில் செய்தார். 1986 இலேயே அங்கு பிரமாண்ட மாளிகை ஒன்று கட்டி, பஞ் சாப் பெண்ணொருவரை திருமணம் செய்து, அங்கு வர்த்தக ராஜ்ஜியத்தை உருவாக்கிவிட்டார். அவரது வர்த்தக வருமானம் முழுவதும் புலிகளிற்கு வந்தது. ஆனால் சிறீயின் கீழ் செயற்பட்டவர்கள் அனைவரும் இந்தியர்கள்.

1994/95 காலப்பகுதியில் சிறீ மரண மானார். ஆப்கானிஸ்தானில் போதைப் பொருளை பெற்று பாகிஸ்தான் ஊடாக நேபாளத்தை அடைந்து, அங்கிருந்து இந்தியாவிற்குள் நுழைய முற்பட்டபோது, இந்திய எல்லைப் பாதுகாப்பு படையினர் சுட்டதில் மரணமடைந்து விட்டார். பஞ் சாபி அடையாளத்தில், தலைப்பாகை கட்டியபடிதான் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர். உண்மையாகவே எல்லை கடந்து வரும் தீவிரவாதிகள் மீது தாக்கு தல் நடத்தியதாகவே எல்லைப் பாதுகாப்பு படையினரும் நினைத்தனர், இன்றுவரை நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த சம்பவத்தில் நால்வர் கொல்லப்பட்டனர். அவர்களின் படங்களும் இந்திய ஊடகங்களில் அப்பொழுது வெளியாகி யிருந்தது. எல்லை கடந்து வந்த பயங்கரவாதிகளாக கொல்லப்பட்ட வர்களில் ஒருவர், யாழ்ப்பாணம் புன்னாலை கட்டுவனை சேர்ந்த விடுதலைப்புலிகளின் போராளியான சிறீ.

இப்படி அடையாளம் தெரியாமல் இறந்தவர்களின் பெரிய பட்டியல் ஒன்றே புலிகளிடம் இருந்தது. சில சமயங்களில் இப்படி உரிமைகோர முடியாத சம்பவங் களில் மரணமாகுபவர்களை, உரிமை கோரக்கூடிய சம்பவங்களில் இணைத்து வெளியிடும் வழக்கமும் இருந்தது. முக்கிய இலக்குகள் மீதான தற்கொலை தாக்குதல்கள் போன்றவற்றில் ஈடுபட்டவர்களின் விபரங்களை வெளியிடாமல் பேணிக் காப்பார்கள். என்றாவது ஒருநாள் அவர்களின் விபரங்களை வெளியிடலாம் என புலிகள் நினைத்திருந்தனர்.

பின்னாளில் இந்தியாவில் மட்டுமல்லாமல், சர்வதேச அளவில் புலிகள் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டனர். கே.பியினால் தாய்லாந்தில் பழங்கள் தகரத்தில் அடைக்கப்படும் தொழிற்சாலையொன்று இயக்கப்பட்டது. ஆயுத கொள்வனவாளர் பொறுப்பிலிருந்து கே.பி அகற்றப்பட்ட பின்னரும், அந்த தொழிற்சாலையை நிர்வகித்து வந்தார். பழங்களை தகரத்தில் அடைத்து விற்பதன் மூலம் ஓரளவு வருமானத்தை தொழிற்சாலை ஈட்டி நந்தது. தொழிற்சாலை நடத்தப்பட்டதற்கு இன்னொரு நோக்கமும் இருந்தது. போதைப்பொருள் கடத்தலில் தொழிற்சாலைக்கும் பங்கிருந்தது!



அங்க பழங்கள் பொதியிடப்பட்ட பழங்க ளுடன், குறிப்பிட்ட அளவில் போதைப் பொருளும் அனுப்பப்படும். இறுதிவரை வெற்றிகரமாக அந்த வர்த்தகத்தை புலிகள் செய்தனர். போதைப்பொருள் கடத்தல் காரர்கள் உலகளாவிய ரீதியில் வேட்டை யாடப்பட்டபோதும், போதைப்பொருள் வர்த்தகம் தென்னாசியா ஊடாக தொடர்ந்து நடந்ததற்கு புலிகளின் சர்வதேச வலையமைப்பும் ஒரு காரணம். 2002 இன் பின்னர் போதைப்பொருள் வர்த்தகத்தை நிறுத்துமாறு சர்வதேச சமூகம் புலிகளிற்கு இரகசிய நெருக்கடியை கொடுத்தது. இலங்கையில் வெளிப்படையான நிறை வேற்றவேண்டிய நிபந்தனைகள் என பலதை குறிப்பிட்டதை போல, இந்த விவகாரத்தை புலிகளின் தலைமையிடம் காதும்காதும் வைத்ததைபோல சொன்னார்கள்.




**இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன 46**

புலிகள் கரும்புலி படையணியை கலைக்க வேண்டுமென பகிரங்கமாக சொல்லலாம். ஆனால் போதைப்பொருள் கடத்தலை நிறுத்துமாறு சொல்ல முடியாது. ஏனெனில், அதை இயக்குவது புலிகளாக இருந்தாலும், உள்ளூர் ஆட்களை வைத்துதான் அதை செய்தார்கள். புலிகளின் பின்னணியை இதில் உறுதிப்படுத்துவதென்பது சிவனின் அடிமுடியை காண்பதற்கு சமன். அப்படி பக்காவாக இதை புலிகள் செயற்படுத்தினார்கள்.

2002 இல் உருவான சமாதான சூழலில் புலிகள் நிறைய விட்டுக்கொடுப்புக்களுடன் செயற்பட்டனர். சர்வதேசத்தை பகைக்க விரும்பாத புலிகள், அவர்களிற்கு சொன்ன பதில் நாங்கள் இப்படியான வேலைகளில் ஈடுபடுவதில்லை. வெளிநாட்டு தொடர்பாளர்கள் யாராவது அப்படி தனிப்பட்டரீதியில் செய்தால், அதையும் கட்டுப்படுத்தி விடுவோம் என்பதே.

பின்னர் சில வருடங்கள் இந்த வர்த்த கத்தை குறைந்தளவிலேயே செய்தனர். போதைப்பொருள் சமூதாயத்தை சீரழித்து விடும் என்பதை புலிகள் தெரிந்து வைத்திருந்தனர். அதனால்தான் தமது பிரதேசத்தில் போதைப்பாவனையை முற்றாக தடுத்து வைத்திருந்தனர். புலிகளின் அகராதியில் போதைப்பொருள் கடத்தலிற்கு மன்னிப்பு கிடையாது. ஆனால் சர்வதேசஅளவில் புலிகள் தவிர்க்க முடியாமல் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டதற்கு காரணம் நிதித்தேவை. அமைப்பை நடத்த, ஆயுதங்கள் வாங்க பெருந்தொகை பணம் தேவை. வடக்கு கிழக்கில் இயற்கை வளங்களும் அதிகமாக இல்லை. பெருமளவில் பணமீட்ட வாய்ப்பற்ற நிலத்தில் இருந்ததால் புலிகள் போதைப்பொருள் கடத்தலை பணமீட்டும் வழியாக பாவித்தார்கள்.

போதைப்பொருள் தமிழர் பிரதேசத்தில் வந்தால் சீரழிவு ஏற்படும், வேறு நாடுகளிற்கு சென்றால் சீரழிவு ஏற்படாதா என நீங்கள் கேட்டால்ஞ். பதில் யாரிடமும் இல்லைத்தான். (தொடரும்)



# விஜய மகாதேவி

## சாண்டில்யன்

இலங்கை தமிழக பின்னணியில் வரலாற்று ஆதாரங்களை அடிப்படையாக கொண்டு சாண்டில்யனால் இந்த நாவல் எழுதப்பட்டது. சிங்கள தமிழ் பண்டைக்கால உறவை வெகு நுணுக்கமாக நாவலில் சாண்டில்யன் சித்தரித்துள்ளார். இலங்கையின் பூர்வ குடிகள், மத தொன்மை குறித்த சர்ச்சைகளை அண்மைக்காலமாக சிலர் கிளப்பிவரும் நிலையில், இந்த நாவல் வரலாற்றை அறிபவர்களிற்கு உசாத்துணையாக இருக்கும்.

புதுப்பயணி

மகா வீரனான விஜயன் மயக்கம் தரும் அந்த மாலை வேளையில் தனது கரிய புரவியின்மீது அமர்ந்த வண்ணம் புரவி நின்ற இடத்திலிருந்து சில அடிகளே தள்ளியிருந்த ரிஜீகுல்யா நதியின் பூர்ண பிரவாகத்தையும் சற்றுத்தூரத்தே தெரிந்த மகேந்திர மலையின் உச்சிகளையும் பக்கச்சரிவுகளையும் பார்த்து, இந்த மாயா பிரபஞ்சத்தில் நிர்வாண நிலையைவிட ஆடை சுற்றிய மறைந்த நிலையே அழகை அள்ளி வீசுகிறது என்று உள்ளத்தே நிர்ணயம் செய்து, அந்த நிர்ணயத்துக்குப் பச்சைப் பசேலென்ற மரங்கள் அளித்த மரகத ஆடையும், கண்களைப்போல் பளபளத்த இரண்டு உச்சிகளைத் தழுவி லேசாக மறைந்துவிட்ட இரு சிறு மேகத் துண்டுகளுமே உதாரணம் என்று தனக்குள் சொல்லியும் கொண்டான். "நல்லது பொல்லாதது, சலம், அசலம் ஆகிய எல்லாவற்றுக்குமே ஒரு மறைவு வேண்டியிருக்கிறது. அதன் தேவையை முன்னிட்டுத்தான் பிறந்தவுடன் மனிதனின் கண்களை மாயையெனும் திரை மூடிக்கொள்கிறது" என்று வேதாந்தத்தையும் வலிய உதடுகளால் முணுமுணுத்துக்கொண்டான்.

"ஐப்பசி கார்த்திகை அடைமழை" யென்று தமிழகப் பழமொழி சுட்டிக் காட்டியிருந்தும், வர்ருது புகுந்து ஒரு மாதமாகியும் மழை அதிகமாகத் தலைகாட்டாமல் லேசாக ஆங்காங்கு தூறல்களை உதறிவிட்டுச் சென்றிருந்தால், ஏதோ பேருக்கு நனைந்து புதிதாக நீராடிவிட்டு வரும் பருவ மங்கையைப் போல, தனது மரகத ஆடையைச் சிறிதளவே நனைத்துக்கொண்டு, அப்படி நனைந்த காரணத்தினாலேயே எழில்கள் புலப்பட நின்ற மகேந்திர மலையையும், பெருவெள்ளத்திலிருந்த ரிஜீகுல்யா நதியையும் நோக்கி "இந்த வருடத்தில் வர்மில்லையா அல்லது பருவம் தள்ளிப் போகிறதா?" என்று ஒரு வினாவையும் எழுப்பிக் கொண்டான் வாலிபனான விஜயன்.

"மனிதர்களின் பாவத்தால் பருவங்கள் மாறுகின்றன. மனிதனின் பாவ நெஞ்சத்தால் பஞ்சங்களும் ஏற்படுகின்றன. இகற்கு இயற்கை பொறுப்பாளியல்ல" என்று தத்துவம் பேசிக்கெண்ட விஜயன், "கலிங்கமெனும் இந்தப் பண்ய பூமியிலும் இத்தகைய விபாறிதங்கள் ஏற்படுமானால், அதற்குப்பிந்திய தலைமுறைகளே காரணமேயொழிய பழைய தலைமுறைகள் காரணமல்ல" என்று திட்டமாக எண்ணமிட்டான். "ஐந்தாவது வேத மென்று வேத விற்பன்னர்களால் கருதப் பட்டதான மகாபாரதத்திலேயே பிரஸ்தாபிக்கப்பட்டதும், விணு புராணத்தில் ரிஜீகுல்யா நதியின் உற்பத்தி ஸ்தானமாகச் சொல்லப்பட்டதுமான புனிதமான மகேந்திர மலைகூடப் பிற்கால சந்ததிகளுக்குத் தனது வளப்பத்தைப் பங்கிட்டுக் கொடுக்கவில்லையென்றால், அதற்குக்காரணம் மனித கர்மாக்களே" என்றும் சொல்லிக்கொண்ட விஜயன், வாலிப வயதின் காரணமாக வேதாந்த எண்ணங்களுடன் அழகின் ஆராய்ச்சியிலும் இறங்கினான்.

"எட்ட இருக்கும் மலையை நான் அடைந்தால் அதன் அழகை அனுபவிக்கலாம். ஆனால் கற்புடைய பெண்களின் மனம்போல எதற்கும் சலியாமல் நிற்கும் அந்த மலை எனக்கு இடம் தருமா என்பது சந்தேகம். ஆனால் அதன் உள்ளே எத்தனை மரங்கள், கொடிகள், மலர்கள், புதர்கள்! ஒவ்வொன்றிலும் அழகு உண்டு. ஆனால் அண்டவிட்டால்தான் அழகை அனுபவிக்கமுடியும். அந்த அனுபவத்துக்கு மனிதனுடைய கர்ம பலன்கள் காரணமாகின்றன" என்று மனத்துள் சொல்லிக்கொண்டு ரிஜீகுல்யா நதியின் பிரவாகத்தை நோக்கி "இதை எப்படிக்கடப்பது?" என்று பெருமூச்சு விட்டான். அப்படிப் பெருமூச்சு விட்டுத் தனது பக்கத்தில் இன்னொரு பழுப்பு நிறப் புரவியில் ராட்சஸனைப் போல் அமர்ந்திருந்த மூர் இனத்தைச் சேர்ந்த இன்னெரருவனை நோக்கினான்.

நன்றாக வழித்து விடப்பட்ட தலையுடனும், நன்றாக வளர்ந்தாலும் அவ்வப்பொழுது கத்தரித்துவிடப் பட்டதால் கட்டையாக இருந்த பழுப்பு மீசையுடனும், கூரான தாடியாலும், புடியான கரிய முகத்தில் முளைத்துச் சிவந்து விழித்த பயங்கர விழிகளாலும் சாட்சாத் ராட்சஸனாக விளங்கிய அந்த மூர் இனத்தானும் விஜயனின் அழகிய வதனத்தின்மீது தனது பார்வையை நிலைக்கவிட்டு, 'எசமான்! இன்றிரவை இங்கேயே கழித்துவிடும் நோக்கமில்லையென்று நினைக்கிறேன்." என்று கரகரத்த குரலில் கூறினான்.

வாலிபனான விஜயனின் அழகிய வதனத்தில் அதுவரை இருந்த சிந்தனைச் சாயை மறைந்து அது இருந்த இடத்தை மகிழ்ச்சியின் ஒளி ஆக்கிரமித்துக் கொண்டது. சிறிய அரும்பு மீசைக்குக் கீழே பெண்களின் உதடுகளைப் போல் சிவந்து மென்மையாகத் தெரிந்த உதடுகளிலும் இளமுறுவலொன்று படர்ந்தது. அந்த உதடுகள் அந்தவாலிபனின் உடலைப்போல் பார்ப்பதற்குத்தான் மென்மையே தவிர உண்மையில் மிகக் கடினமானவை, வலுவானவை என்பதை அவற்றின் லேசான மடிப்பு ஒன்று வலியுறுத்தியது. இருபத்திரண்டு வயதுக்குமேல் மதிக்க முடியாத அந்த வாலிபனின் முகத்தின் உச்சியை அவன் தலையின் கரியகுழல்கள் சிறிதே மறைத்திருந்ததால் மேகங்கள் தொங்கிய மகேந்திர மலையின் மற்றொரு உச்சியைப்போலவே அவன் அழகிய முகம் காட்சியளித்தது.

அவன் கண்களின் பார்வையில் அதிகக் கூர்மையில்லை. பெண்களின் கண்களைப்போல் அழகாகவும் புபம்போல் மென்மையாகவும் இருந்தென்றாலும், அவ்வப்பொழுது திடீர் திடீரென்று தோன்றிய ஒளிகள் அந்த மென்மை நம்பத்தகுந்ததல்லவென்பதை நிரூபித்தன. அவன் மெல்லிய நீண்ட கைகளும், உறுதியாய்ப் புரவியின் விலாவில் உதைத்திருந்த கால்களும், சிறிய இடையும், எல்லாமே அவனுக்கு ஒரு கம்பீரத்தை அளித்திருந்தன. அவன் இடைக்கச்சையிலிருந்து நீளமாக இடது புறத்தில் தொங்கிய மெல்லிய வாள் உயிரைக் குடிக்கும் சர்ப்பம் போல் புரவியின் அசைவுக்குத் தகுந்தபடி நெளிந்து கொண்டிருந்தது.

அந்த வாளின் பிடி சிங்கத்தைப்போல் நல்ல தங்கத்தால் செய்யப்பட்டிருந்ததன்றி, அந்தச் சிங்கத்தின் கண்களிரண்டிலும் மாணிக்கக்கற்கள் இரண்டு புதைக்கப் பட்டிருந்ததால் சிங்கம் எப்பொழுதும் சினத்திலிருக்கும் நிலையை அறிவுறுத்தியது. அந்த வாலிபன் காலில் இருந்த பாதக்குறடுகள் மொராக்கோ தோலால் செய்யப்பட்டிருந்தாலும், அதிலிருந்த சித்திர வேலைப்பாடு அவை பாரதத்தில் செய்யப்பட்டவை என்பதைச் சந்தேகமற விளக்கியது.

இப்படி உயிர்த் துடிப்பின் இலக்கணமாய்ப் புரவியில் உட்கார்ந்திருந்த அந்த வாலிபன் தனது நண்பனும் மெய்க் காவலனுமாகிய அந்த மூர் இனத்தானின் வினாவினால் சிறிதே முறுவல் கொண்டு, "சமத், இந்த நதியையும் அந்த மலைகளையும் விட்டுவர மனமில்லைதான். இருப்பினும் உள்மனம் காமுகர்களின் இதயத்தைப்போல எதிர்க்கரைக்குத் தாவிவிட்டதால் இனி இங்கிருப்பதில் அர்த்தமில்லை. சரி வா, நதியைக்கடக்கும் வழியைப் பார்ப்போம்"" என்று கூறிக்கொண்டே தனது புரவியை விலாவில் லேசாகக் காலால் உதைத்து அதை நடக்கவிட்டான். அவனை சமத் என்ற மூர் இனத்தானும் பின் தொடர்ந்தான்.

முதல் நாளின் தூறலால் நதிக்கரையில் உளை மிகுந்து வழுக்கும் நிலையில் இருந்தாலும், எந்த நிலையையும் சமாளிக்கும் அந்த அரபிப் புரவிகள் இரண்டும் குளம்புகளை ஊன்றி வைத்துத் திடமாகவே நடந்தன. அப்படி நடந்ததால் அடிக்கடி புடைத்த அவற்றின் கால்களின் நரம்புகள் அவற்றின் வலுவுக்கு மட்டுமன்றி அவற்றின் வளைவுக்கும் எடுத்துக்காட்டாக இருந்தன. இப்படி நடந்த இரு புரவிகளும் நதிக்கரைக்கு அருகாமையில் வந்ததும் விஜயன் எதிரே தெரிந்த பெரும் பிரவாகத்தை நோக்கி, "சமத்! இதை எப்படி தாண்டுவதாக உத்தேசம்?" என்று வினவினான்.

ரிஜீகுல்யா நதியின் வேகமான நீரோட்டத்தையும் பயங்கர ஆழத்தையும், பிரவாகத்தில் தெரிந்த சுழிகளாலும் மிதந்து வந்த நுரைகளாலும் சமத் நிலைமையைப் புரிந்துகொண்டான். அதனால் கூறினான், "தாண்டுவது கட்ந்தான்" என்று.

விஜயனும் நீரோட்டத்தையும் அதில் மிதந்த சென்ற நுரை மகுடங்களையும், அதன் சுழல்களில் அகப்பட்டுச் சுழன்று கொண்டிருந்த சிறு மரக்கிளைகளையும், மகேந்திர மலையிலிருந்து மிதந்து வந்த மலர்களையும்நோக்கினான். "ஆம், கடப்பது கடந்தான், ஆனால் கடமில்லாமல் மனிதன் எந்தப் பலனை அடையமுடியும் சமத்?" என்று மெய்க்காவலனைக் கேட்டான்.

"அப்படியானால் புரவியை நதியில் இறக்கட்டுமா?" என்று வினவினான் மூர்சமத்.

"புரவி இந்த வேகத்தைச் சமாளிப்பது கடம். இங்கு ஏதாவது படகு இருக்கிறதா பார்த்து வா. அதோ சில குடிசைகள் தெரிகின்றன." என்று கூப்பிடுதூரத்திலிருந்த குடிசைக் கூட்டத்தைக் காட்டினான்.

சமத் அடுத்த ஆணைக்குக் காத்திருக்கவில்லை. சட்டென்று தனது புரவியைத் திருப்பி, குடிசைக்கூட்டத்தை நோக்கிச் சென்றவன் சிறிது நேரத்தில் ஒரு கிழவனுடன் திரும்பி வந்தான். "இவன் நம்மை எதிர்க்கரைக்குக் கொண்டுபோக ஒப்புக்கொள்கிறான்," என்று அறிவித்தான்.

விஜயன் கிழவனை நோக்கினான். "உன்னால் இந்தப் பிரவாகத்தைக் கடக்க முடியுமா?" என்று வினவவும் செய்தான்.

"ஏன் முடியாது?" கிழவனின் கேள்வியில் சிறிது சினம் தெரிந்தது.

"உன் வயது?" என்று ஏதோ சொல்ல முயன்ற விஜயனைப் பார்த்து நகைத்த கிழவன், "உங்களுக்குத் தான் சிறு வயதாயிற்றே. நதியைக் கடப்பதுதானே," என்று இகழ்ச்சியுடன் கூறினான். "பிரபு, வயது வேறு துணிவு வேறு," என்று சுட்டிக்காட்டினான். (தொடரும்)




# சில புதிய குர்தாக்கள்

1. Yellow & Pink Round Neck Printed Kurta
2. pale pink 3/4 sleeve printed kurta
3. black full sleeve collar neck kurta
4. white mandarin neck 3/4 sleeve Kurta
5. black u-neck sleeveless kurta



# மட்டன் மிளகாய் சுக்கா வறுவல்

மட்டன் அரை கிலோ, இஞ்சிபூண்டு விழுது 1 மேசைக்கரண்டி, மிளகாய்த்தூள் 2 மேசைக்கரண்டி அல்லது தேவைக்கு, மஞ்சள்தூள் 1 மேசைக்கரண்டி, எண்ணெய் 3/4 கோப்பை, ப.மிளகாய் 4, கொத்தல்லி சிறிதளவு, உப்பு தேவையான அளவு

செய்முறை: மட்டனை நன்றாக கழுவி சுத்தம் செய்து சிறு துண்டுகளாக வெட்டி வைக்கவும்.கொத்தமல்லி, ப.மிளகாயை பொடியாக நறுக்கி கொள்ளவும். கழுவி மட்டனை ஒரு பாத்திரத்தில் போட்டு அதனுடன் மஞ்சள்தூள், உப்பு சேர்த்துப் பிசறி வைக்கவும். அரை மணி நேரம் கழித்து நன்கு கழுவி எடுக்கவும்.

குக்கரில் மட்டனை போட்டு அதனுடன் மஞ்சள் தூள், உப்பு, மிளகாய்த்தூள் இஞ்சி பூண்டு விழுது சேர்த்து நன்றாக கலந்து குக்கரை மூடி 7 விசில் போட்டு இறக்கவும். தண்ணீர் அதிகம் சேர்க்க கூடாது. சட்டியியில் எண்ணெய் விட்டு, சூடானதும் அதில் ப.மிளகாயை போட்டு தாளித்த பின்னர் வேக வைத்த மட்டனை போட்டு நன்கு வறுத்தெடுக்கவும்.

துண்டுகள் ஒன்றுடன் ஒன்று ஒட்டாமல் வரும்வரை வறுக்க வேண்டும். நன்றாக வெந்து உதிரியாக வந்ததும் கடைசியாக கொத்தமல்லி தழை தூவி இறக்கவும். சூப்பரான மட்டன் மிளகாய் சுக்கா வறுவல் ரெடி.

குறிப்பு: இளங்கறியாக இருந்தால் அரை வேக்காடு போதும். காரம் அவரவர் விருப்பத்துக்கேற்ப சேர்த்துக் கொள்ளவும். எண்ணெய் சற்றுத் தாரளமாக இருப்பதுதான் சுக்காவுக்கே சுவை. கரம் மசாலா தேவையென்றால் சேர்த்துக் கொள்ளவும்.


# மாதவிலக்கு பிரச்சனைக்கு தீர்வு தரும் இயற்கை மருத்துவம்

மாதவிலக்கு சமயத்தில் சிலருக்கு கடுமையான வலி இருக்கும். கருப்பையில் கிருமிகளின் தாக்கத்தால் வெள்ளை போக்கு ஏற்படுகிறது. கருப்பையில் ஏற்படும் நீர் கட்டிகள், நார் கட்டிகள் போன்றவற்றால் பெண்கள் மிகவும் சிரமத்துக்கு ஆளாகின்றனர். முறையற்ற மாதவிலக்கு பிரச்னையை போக்கும் மருந்து தயாரிக்கலாம்.

**தேவையான பொருட்கள்:** முள்ளங்கி விதை, கருஞ்சீரகம், நாட்டு சர்க்கரை, கறிவேப்பிலை. முள்ளங்கி விதையை பொடி செய்து ஒரு ஸ்பூன் எடுக்கவும்.இதனுடன் ஒருபிடி கறிவேப்பிலை, அரை ஸ்பூன் கருஞ்சீரகம், நாட்டு சர்க்கரை அல்லது பனை வெல்லம் சேர்த்து ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்க வேண்டும். இதை வடிகட்டி காலையில் வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். மாதவிலக்கிற்கு 10 நாட்களுக்கு முன்பு இருந்து இதை குடித்துவர மாதவிலக்கு பிரச்னை தீரும்.

மாதவிலக்கின்போது ஏற்படும் அதிகப்படியான உதிரப்போக்கை கட்டுப்படுத்தும் மருந்து தயாரிக்கலாம். வில்வ இலை ஒருபிடி எடுத்து பசையாக அரைத்து எடுக்கவும். இதனுடன் பனங்கற்கண்டு சேர்த்து ஒரு டம்ளர் நீர் விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி ஆறிய பின்னர் 2 ஸ்பூன் தயிர் சேர்த்து குடித்தால் அதிக உதிரப்போக்கு சரியாகும். காலை, மாலை என 3 நாட்கள் வரை எடுத்துக் கொள்ளலாம்.

மாதவிலக்கு சீராக இருப்பது அவசியம். அதிக உதிரப்போக்கால் உடல் பலவீனம் ஏற்படும். 3 நாட்கள் வரவேண்டிய மாதவிலக்கு அதிகநாட்கள் தொடரக்கூடாது. இப்பிரச்னைக்கு வில்வ இலை அற்புத மருந்தாகிறது. ரத்தப்போக்கு கட்டுக்குள் வரும். அருகம்புல் சாறு கால் டம்ளர் அளவுக்கு வெறும் வயிற்றில் காலையில் குடித்துவர அதிக உதிரப்போக்கு சரியாகும்.



வாழைப் பூவை பயன்படுத்தி ரத்தப்போக்கை கட்டுப்படுத்தும் மருந்து தயாரிக்கலாம். வாழைப் பூவை பொரியல் செய்வது போன்று சுத்தப்படுத்தி நீர் விடாமல் பசையாக அரைக்கவும். ஒரு ஸ்பூன் வாழைப்பூ பசையுடன் ஒரு ஸ்பூன் புளிப்பில்லாத தயிர் சேர்க்கவும். இதை காலை, மாலை சாப்பிட்டுவர அதிக உதிரப்போக்கு கட்டுப்படும். கருப்பையில் ஏற்படும் புண்களை ஆற்றும். வெள்ளைப்போக்கிற்கு இட்லி பூ மருந்தாகிறது. இதை தேனீராக்கி குடிப்பதால் வெள்ளைப்போக்கு பிரச்சனை சரியாகும்.





வயிற்று பகுதியில் கொழுப்பை குறைக்க வேண்டுமானால். குறிப்பிட்ட உணவு வகைகள் மற்றும் உடற்பயிற்சி உத்திகளை பின்பற்ற வேண்டும். நீங்கள் சீரான முறையில் உடற்பயிற்சி செய்பவராக இருந்தால், உணவுகளில் செய்யப்பட்டுள்ள இந்த மாற்றங்களுடன் உடற்பயிற்சியையும் தொடரலாம். நீங்கள் உடற்பயிற்சி செய்யாதவராக இருந்தால், 20 நிமிடங்களுக்கு நடைப்பயிற்சி போன்ற மிதமான உடற்பயிற்சிகளில் ஈடுபடலாம்.

- குத்த வைத்து மூச்சு விடுவது போன்ற உடற்பயிற்சிகளை செய்ய ஆரம்பித்து வயிற்று கொழுப்பை குறைக்கலாம். குத்த வைத்து உட்காரும் போது, உங்கள் கீழ் பகுதியை முடிந்த வரையில் குறைக்கவும். குறைக்கும் போது மூச்சை இழுக்கவும். சில நிமிடங்கள் காத்திருப்புக்கு பின் மெதுவாக மூச்சை வெளியே விட்டு குறைந்த பகுதியை மேல் கொண்டு வரவும். இந்த உடற்பயிற்சியை 20 முறை தொடர்ந்து செய்யவும்.
- வயிற்றை சுற்றியுள்ள கொழுப்பை நீக்க க்ரஞ்சஸ் வகையிலான உடற்பயிற்சியில் ஈடுபட வேண்டும். உங்கள் தலைக்கு பின்னால் கைகளை கட்டிக்கொண்டு, முட்டியை மடக்கி வைத்து, கால்களை தரையில் திடமாக ஊன்றவும். வயிற்று தசைகளை இறுக்கி, உங்கள் தோள்பட்டையை தரையில் இருந்து தூக்கவும். இதனை 20 முறையாவது செய்யுங்கள்.
- அதிக அளவிலான தண்ணீரை குடித்து உட்கார்ந்து எழுந்திருக்கும் உடற்பயிற்சியையும் செய்திடுங்கள். பின்புறமாக படுத்து, முட்டியை மடக்கி, பாதத்தை தரையில் வைத்திடவும். கைகளை படர்ந்து விரித்து, விரல்களை மேற்புறம் பார்த்தவாறு வைக்கவும். மூச்சை வெளியேற்றி மெதுவாக உட்கார முயற்சிக்கவும். மூச்சை உள்வாங்கி மீண்டும் மெதுவாக படுங்கள்.
- நடைபயிற்சி முதல் உட்கார்ந்து எழுந்திருப்பது வரை அனைத்து உடற்பயிற்சிகளையும் செய்திடுங்கள்.
- தற்போது செய்து வரும் உடற்பயிற்சியுடன் ஏரோபிக்ஸ் உடற்பயிற்சியையும் தொடருங்கள். உடற்பயிற்சியை மாற்றுவதால் உடலில் அதிர்வு ஏற்பட்டு, மெட்டபொலிக் வீதம் அதிகரிக்கும். அதனால் வயிற்றில் இருந்து கொழுப்பு வேகமாக கரையும். ஏரோபிக்ஸ் உடற்பயிற்சியை 30 நிமிடங்களுக்கு செய்யவும்.
- நீச்சல் பயிற்சியையும் சேர்த்துக் கொள்ளுங்கள். நடை பயிற்சியை 40 நிமிடங்களுக்கு அதிகரித்திடுங்கள். அனைத்து க்ரஞ்சஸ் மற்றும் உட்கார்ந்து எழுந்திருக்கும் உடற்பயிற்சிகளை தேர்ந்தெடுக்கலாம். விதவிதமான உடற்பயிற்சியில் ஈடுபட முயற்சி செய்யுங்கள் ஸ்கிப்பிங் பயன்படுத்துங்கள் அல்லது லெக் டக் உடற்பயிற்சியில் ஈடுபடுங்கள்.




# மனமே நலமா?

## உங்கள் சந்தேகங்களை கேளுங்கள்



கு.நக்கீரன்
உளவள ஆலோசகர்



**பெயரில்லை (வயது 26)**
**சண்டிலிப்பாய்**

*கேள்வி:* **நான் ஒரு பெண். யாழ்ப் பாணத்தில் உள்ள அரச நிறுவனத்தில் பணியாற்றுகிறேன். எனது இளநிலை அதிகாரி ஒருவர் (நடுத்தர வயதானவர்) எனக்கு முதலில் சாதாரணமான smsகளை அனுப்பினார். நானும் பதில் அனுப்பினேன். இப்போது சற்று ஆபாசமாக sms பண்ணுகிறார். இப்போது என்னால் பதில் அனுப்ப முடியவில்லை. ஆனால் அவர் தொடர்ந்து sms அனுப்பிக் கொண்டுள்ளார். இதை வெளியில் கதைக்கவும் பயமாக உள்ளது. இப் பிரச்சனையால் மனம் குழம்பிப் போய் உள்ளேன். எனக்கு ஒரு நல்ல பதிலை எதிர்பார்க்கின்றேன்.**

**பதில்:** அன்புச் சகோதரி, இன்று யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல உலகம் முழுவதும் குறிப்பாக இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் வாழும் பெண்களுக்கு உள்ள பொதுவான ஒரு பிரச்சினை தான் இது.

நான் அடிக்கடி அநேகமான பிரச்சினைகளுக்குரிய பதிலை வழங்கும் போது "வாழ்க்கை திறன்" பெறும் ஒரு விடயத்தை சுட்டிக் காட்டுவதை நீர் ஒரு "தீபம்" இதழின் வாசகர் எனின் தெரிந்திருப்பீர். உண்மையில் இப்படியான அநேகமான பிரச்சினைகளுக்கு காரணம் எமது வாழ்க்கைத் திறன் குறைபாடே. இது கீழைத்தேச மக்களுக்குரிய ஒரு அடையாளம். அதாவது கைபேசியை கண்டுபிடித்ததன் நோக்கம் என்ன? மிகவும் அவசரமான அவசியமான பொழுதுகளில் ஒருவருடன் ஒருவர். தகவல்களைப் பரிமாறுவதன் மூலம் வாழ்க்கையின் முயற்சிகளுக்கு உதவுவதே. அதே போல sms என்பது வாயால் கதைக்க முடியாத சந்தர்ப்பங்களில் புரிந்து கொள்ளக் கூடிய அளவுக்கு குறுகிய தகவல் ஒன்றை எழுத்தில் அனுப்புவதே. phone இல் அனுப்புவதை விட sms இல் அனுப்புவதே இலாபகரமானதும் கூட. இன்று கைப்பேசிப் பாவனையாளர்களில் 75% ஆனவர்கள் இந்த இரண்டு நோக்கத்தையும் விட ஏனைய தேவையற்ற ஆபத்தான விடயங்களுக்கே இதனைப் பாவிக்கிறார்கள். ஒரு அரச திணைக்களத்தில் பணிபுரியும் நீங்கள் இருவரும் உங்களுக்கு மிகவும் அவசியமான அவசரமான விடயங்களுக்கா? sms இல் தொடர்பு கொண்டீர்கள். இல்லையே? உமது இளநிலை அதிகாரி கைப்பேசிப் பாவனை மூலம் உம்மை துஸ்பிரியோகம் செய்ய முயன்றுள்ளார். நீரும் அதற்கு உடந்தையாக இருந்துள்ளீர். இன்று அது பாரிய பிரச்சினையாக உமக்கு மன உளைச்சலைக் கொடுக்கும் அளவுக்கு வளர்ந்துவிட்டது. நீர் ஆரம்பத்திலேயே உமது அதிகாரியிடம் இருந்து அவசியமும் அவசரமுமற்ற smsகள் வரும் போது எதுவித பதில் smsமும் அனுப்பாமல் இருந்திருப்பின் இந்தப் பிரச்சினை வந்திருக்காது.

இன்று எமது பிரதேசத்தில் கைபேசியின் பயன்களை எதிர்மறையாகப் பயன்படுத்துபவர்களே அதிகம். அதிலும் குறிப்பாக இளம் பெண்கள், திருமணமான பெண்கள் இதன் பிழையான பாவனையால் வரப்போகும் பாதிப்புக்களை அறியாமல் செயற்படுகிறார்கள். பின்னர் பிரச்சினை உயிரைப் பறிக்கும் அளவுக்கு வந்தபின்னர் சட்டத்தின் பிடியில் சான்றுப் பொருளாக வரும் போது எதுவும் செய்ய முடியாமல் விழிபிதுங்கி நிற்கிறார்கள்.

சரி, நடந்தது நடந்ததாகவே இருக்கட்டும். இனி நீங்கள் அவரிடம் இருந்து வரும் எதுவிதமான தேவையற்ற smsகளுக்கும் பதிலளிக்க வேண்டாம். விரும்பினால் உங்களது போன் இலக்கத்தை மாற்றவும். அதிகாரியை அலுவலகத்தில் சந்திக்கும் போது எதுவித குழப்பமும் இன்றி உத்தியோக ரீதியாக மட்டும் பழகுங்கள். உங்களுக்கு இப்படியான smsகளில் உண்மையாகவே பிடிக்கவில்லை எனில் வெளிப்படையாக தெரிவியுங்கள். அதற்கும் சரிவரவில்லை எனில் அதிகாரியின் மனைவியிடம் கதையுங்கள் ஆள் கட்டுப்பாட்டிற்குள் வருவார். எல்லாம் எமது மனதினை பொறுத்ததே. எமது மனதில் குற்றமில்லை எனில் பயமில்லை. இனிமேலாவது தேவையற்ற வேலைகளைச் செய்யாமல் மேலைத்தேய அறிவாளிகள் என்ன நோக்கத்திற்காக ஒவ்வொன்றையும் கண்டுபிடித்து உதவுகிறார்களோ, அந்த நோக்கத்திற்காக மட்டுமே அவற்றைப் பாவிக்கப் பழகுங்கள். இதன் மூலம் தேவையற்ற மன உளைச்சலைத் தவிர்த்துக் கொள்ளலாம்.


**நிரஞ்சன் (வயது 23)**
**வவுனியா**

*கேள்வி:* **எங்கள் வீட்டில் பெரும் பொருளாதார கஸ்ரம் உள்ளது. அண்ணாவும் நானும் இப்போது வேலைக்குப் போகத் தொடங்கி யுள்ளோம். எமக்கு மூன்று சகோதரிகள் உள்ளனர். அப்பா பெரும் குடிகாரர். எனக்கு அவரைத் துண்டாகப் பிடிப் பதில்லை. அவர் வீட்டில் இருந்தாலே எனக்கு அங்கு இருக்கப் பிடிப்பதில்லை. அவரைக் கொலை செய்யும் அளவுக்கு அவர் மீது கோபமாக உள்ளது. இந்த நிலை நீடிப்பது நல்லதல்ல எனப்படுகின்றது. நான் என்ன செய்வது?**

**பதில்:** அன்புச் சகோதரனே, எமது சமூகத்தில் இன்று 30/40 சதவீதமான குடும்பங்களின் நிலை இதுதான். குறிப்பாக சராசரி கூலித் தொழிலாளி பார்க்கும் குடும்பங்களில் 75% குடும்பங்களின் நிலை இதுதான். என்ன செய்வது "குடி குடியைக் கெடுக்கும்" என்று முன்னோர்கள் சும்மாவா சொன்னார்கள். உண்மையில் உமது கேள்வி மடலில் நீர் குறிப்பிட்ட விடயங்களின் படி உமது பிரச்சினைகளுக்குரிய மையப் புள்ளி எது என்று தெளிவாகப் புலப்படவில்லை. இருந்தாலும் நான் நினைக்கின்றேன், பிள்ளைகளைப் பெற்றுவிட்டு வறுமையில் குடும்பம் சிக்கியுள்ள நிலையில் பொறுப்பில்லாமல் குடிக்கும் ஒரு அப்பா மீது பொறுப்புள்ள மகனுக்கு வரக்கூடிய கோபமாகவே உமது பிரச்சினைகளைப் பார்க்கின்றேன். உமது அப்பா மிகப் பெரிய ஒரு குடிகாரன் எனின் அவரைத் திருத்துவது கடினமான செயலாக இருப்பினும் மது அடிமை நிலைக்கு போகாதவரெனின், அவரைச் சரியாக "முகாமை" செய்வதன் மூலம் ஒழுங்குபடுத்த முடியும். குடியை நிறுத்தச் சொல்ல முடியாது. இரயில் நிறுத்தம் போல மெது மெதுவாகக் குறைத்துக் கொண்டு வந்தபின் நிறுத்த முடியும். அப்படி குடியை குறைப்பதற்குரிய உளவள ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

தொழில் மற்றும் வீட்டு வருமான முயற்சிகளில் அவரையும் பங்காளியாக் குங்கள். பாரிய பொறுப்புக்களை வழங்காது சிறிய சிறிய பொறுப்புக்களை அவரிடம் பகிர்ந்து கொள்ளுங்கள். அவரைத் தந்தை எனும் ஸ்தானத்தில் மற்றவர்கள் முன் உயர்த்தி வையுங்கள். அவமரியாதை செய்யாமல் தன்னைப் பிள்ளைகள் மற்றவர்கள் முன் மரியாதையாகவும் உயர்வாகவும் மதிக்கிறார்கள் என்னும் உணர்வு அவரில் பாரிய மாற்றங்களைக் கொண்டுவரும்.

அது போகட்டும் உமது தந்தையின் குடிப் பிரச்சினை பற்றி கவலை கொண்டு கோபப்படும் நீரோ, உமது அண்ணனோ இந்த அட்டமத்தானா (சனியனைத்) தொட்டுவிடாமல் இருங்கள். வறுமை என்பது எல்லாருக்கும் உரிய சொத்து. கோடியாகப் பணம் இருப்பவனுக்கு மற்றவனுக்கு கொடுக்க வேண்டும் எனும் "மனம்" வறுமையாக இருக்கும். கோடிப் பணத்தை ஆளும் பொறுப்பான "பிள்ளைச் செல்வம்" வறுமையாக இருக்கும். ஏன் கோடீஸ்வரனுக்குக் கூட கோடிக் கணக்கான கடன் இருக்கும், எனக்கும் உமக்கும் ஆயிரங்கள் தான் கடனாக இருக்கும். கடனும் வறுமையும் பரீட்சையில் வெற்றி பெறத் துடிக்கும் மாணவனின் படிப்பு போன்றது. "சோதனையைத் தாண்டினால் தான்



சாதனை". எனவே அப்பாவுடன் வீணான கோபத்தை விடும். உமது அப்பாவை சரியாக வழிப்படுத்த சரியான நண்பர்கள் கிடைக்கவில்லை போலும, அவருக்கும் நீரும் அண்ணாவும் சேர்ந்து தளராத உறுதியுடன் ஒரு குறிப்பிட்ட காலம் வரை போராடுங்கள், வறுமை பயந்தோடிவிடும். அப்பாவை அப்பா ஸ்தானத்தில் வைத்து பராமரியுங்கள். கோபம் புத்தியை மறைக்கும். கோபத்தை குறைத்துவிடும். அப்பாவிடம் உமக்கு பிடிக்காத இயல்புகளை கைவிடுவார் என்று, நம்பி குறைக்க முயற்ச்சி செய்யுங்கள். அவரின் அந்த இயல்புகளால் உமக்கோ உமது வீட்டிற்கோ, ஏன் நாட்டிற்கோ என்ற பிரச்சினை என்று ஆராய்ந்து அதனை குறைக்க வழிவகையைத் தேடும். ஏதோ நல்வழி கிடைக்கும். கவலை வேண்டாம். உங்கள் குடும்பத்தை நல்லதொரு பல்கலைக்கழமாக மாற்றுங்கள்.

# போக்குவரத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா! மாவை சேனாதிராசாவுக்கு வயது65!!

சரவணபவ
ஆனந்தன் செந்தூரன்

நான்கு கேள்விகள்.. நான்கு பேர். இதுதான் கொன்செப்ட். கேள்வியுடன் புறப்பட்டோம். யாழ் நகரில் அழகுகலை செய்யும் கொலின் பாலசுப்ரமணியம், தர்சிகா ஜெயபாலன், யாழ் பல்கலைகழக சட்டத்துறை மாணவனும் சமயசொற்பொழிவாளருமான ஸ்ரீஸ்கந்தராஜா சிவஸ்கந்தஸ்ரீ, செங்குந்த இந்து கல்லூரி அதிபர் எஸ்.ஆர்.பாலச்சந்திரன் ஆகியோரை அணுகி விடயத்தை சொன்னோம்.

கேள்விகள் கேட்கப் போகிறோம் என்றதும் உற்சாகமாக தயாரானார்கள்.


கொலின்


தர்சிகா


சிவஸ்கந்தஸ்ரீ


எஸ்.ஆர்.பாலச்சந்திரன்

**வடமாகாண போக்குவரத்து அமைச்சர் யார்?**
**க.வி.விக்னேஸ்வரன்**

**கொலின் :** போக்குவரத்து அமைச்சரா... ம்ம்.. டக்ளஸ் தேவானந்தா! (சரியாக சொன்ன மகிழ்ச்சி)

**தர்சிகா:** முதல் டெனிஸ்வரன் இருந்தவர். இப்ப... தெரியலையே... யார்? (எம்மையே திருப்பி கேட்கிறார்)

**சிவஸ்கந்தஸ்ரீ:** டெனிஸ்வரன்தான் போக்குவரத்து அமைச்சராக இருந்தது எனக்கு தெரியும். இப்ப அவரை பதவி நீக்கியதென்று பெரிய குழப்பம் போகுது. அவர் விலகவில்லையென்றும் சொல்லுகிறார்கள். கட்சியும் அவரை மாற்றப் போவதாக சொல்லியிருக்கு. எனக்கு தெரிந்தவரை டெனிஸ்வரன்தான்.

**எஸ்.ஆர்.பாலச்சந்திரன்:** முன்னர் டெனிஸ்வரன் இருந்தவர். இப்ப யாரென்று தெரியவில்லை.

**பேஸ்புக்கில் அடையாளத்தை வெளிப்படுத்தாமல் கேள்வி கேட்பதற்கு அண்மையில் உருவாக்கப்பட்ட அப் எது?**
**சரஹா**

**கொலின்:** பேஸ்புக்கா... அதை பார்க்கிறதுமில்லை, பாவிக்கிறதுமில்லை. ஸோ.. நமக்கு தெரியாது. (உலகம் இதை நம்பணும்?)

**தர்சிகா:** பேஸ்புக்கா... அதையெல்லாம் நாங்கள் பார்க்கிறதேயில்லை.

**சிவஸ்கந்தஸ்ரீ:** பேஸ்புக்கில் இப்ப எல்லோரும்தானே கேள்வி கேட்கினம். ஆனால் அதுக்கு அப்ஸ் வந்ததெல்லாம் எனக்கு தெரியாமல் போச்சுதே.

**எஸ்.ஆர்.பாலச்சந்திரன்:** பேஸ்புக் பற்றி தெரியாது தம்பி.

**தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவின் தற்போதைய வயது என்ன?**
**74 வயது**

**கொலின்:** அவருக்கு இப்ப கிட்டடியிலதான் புத்தகம் வெளியிட்டவங்கள். பவளவிழா மலராக இருக்க வேணும். 74 அல்லது 75 வயசாக இருக்க வேணும்.

**தர்சிகா:** அவருக்கு எத்தனை வயதென்றது எங்களுக்கு தெரியுமா? (அதுதானே)

**சிவஸ்கந்தஸ்ரீ :** (சிரிக்கிறார்) அவருக்கு ஒரு 65 வயது இருக்கலாம் என நினைக்கிறன்.

**எஸ்.ஆர்.பாலச்சந்திரன்:** அவருக்கு 65 வயசுக்கு மேல இருக்க வேணும்.

**திரைப்படமாக வெளியான வாடைக்காற்று நாவலின் ஆசிரியர் யார்?**
**செங்கை ஆழியான் என்ற செ.குணராசா**

**கொலின்:** நாங்கள்தான் படமே பார்க்கிறதில்லையே... இதெல்லாம் எப்படி தெரியும்!

**தர்சிகா :** அப்பாடா ஒரு கேள்விக்காவது விடை தெரிஞ்சுதே... இதுக்கு எனக்கு விடை தெரியும்... செங்கை ஆழியான்!

**சிவஸ்கந்தஸ்ரீ:** ம்... (யோசிக்கிறார்) ஏதோ ஒரு பெயர்... குண... குண... ம்... (மேலே வராமல் நிறுத்திவிட்டார். குணராசாவா என்றபோது) ஓமோம் அவர்தான்.

**எஸ்.ஆர்.பாலச்சந்திரன் :** ஓமோம்.. இது நல்லா தெரியும்.. செங்கை ஆழியான் என்ற செ.குணராசா.

---

த.ஜெயசீலன் கவிதைகள்

## அனிதா

உன் அறிவின் ஆழம்,
உன் முயற்சி, உன் தகமை,
உன்னுடைய ஆற்றல், உனது அடைவு மட்டம்,
உச்சம்தான்....!
ஆனாலும் மூட்டை தினம் சுமந்தும்,
'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்ற
ஏட்டுச் சுரைக்காய்
கறிக்கு உதவாத
ஆட்சியில்....
தரப்படுத்தி வாய்ப்பைப் பறித்தெடுக்கும்
கூட்டில்...சிறகொடிந்து குமுறினாய்!
அரசநீதி
பிழைக்கும்...மநுநீதி பிழைக்கா தென நம்பி
இளைய கண்ணகியாய்
ஏழ்மையெனும் ஒற்றை
சிலம்போடு வந்து சீறினாய் நீதிகேட்டு!
அதுவுமுனை ஏய்க்க
'அரியலூர் அனிதா' ...நீ
விதியின் கயிற்றில்
சரண் புகுந்தாய்...மனமொடிந்து!
கோழையா நீ ?
மான மயிர்நீப்பின் உயிர்வாழா
மானானாய் !
அடிமை மனப்பாங்கில் "போடுவதைப்
போடென்று" ஏற்காத
புரட்சிப்பெண் நீயென்றாய்!
ஏழை சொல் அம்பலத்தில் ஏறாது என்பதற்கும்,
ஏழ்மைக் கனவு நனவாகா தென்பதற்கும்,
சான்றா நீ.... ?
'ஸ்டெதஸ்கோப்' மாட்ட வேண்டிய கழுத்தில்



தூக்கு கயிறுதொங்கத் தூண்டியதார்....?
மக்களாட்சி
ஓங்குதென்ற நாட்டின் 'உண்மை', 'உயர்வு'
என்ன....?
பதிலானாய் !
கோடானு கோடிபேரின்
'மனநீதி' விழிக்கவைத்துப்
போனாய் !
என்னுறவை இழந்ததுபோல் புலம்புகிறேன் !

(ப்ளஸ் 2 தேர்வில் 1200க்கு 1176 புள்ளியும் 196.5 சராசரியும் பெற்று மருத்துவ பட்டிப்பை பெற நீட் தேர்வால் பாதிக்கப்பட்டு மனமுடைந்து தற்கொலை செய்த அரியலூர் அனிதா என்ற ஏழ்மை மாணவிக்கான இரங்கல்)

## தீராப் பலிகள்

யாருடைய தலையை எடுத்து வருகிறாளோ
'யாழ் தேவி'?
பாவம் என்செய்வாள் அவள் 'இரும்பி'!
தேடி உனைத்தேடி திரியவில்லை அவள்:
நீயாய்த்
தேடி அவள்வரும் திசைஏறிப்
பொறுமையற்றுப்
போவாய்.....
அவளோ 'புயலாள்'...நெரித்தழிப்பாள்!
யார் பேச்சும் கேட்காளை,
யார் மறித்தும் நிற்காளை ,
'பாவி' எனத்திட்டிப் பயனென்ன என்னுறவே ?
'மோனியா' அவள் ?
சின்ன மூஞ்சூறு போல் 'அளவா'?
பேய் போல் பிளிறி அப் 'பிரமாண்டினி' வரத் ....
தெரியாப்
பேதையாய்....உனது
அவசரப் புத்தியினால்
பாய்ந்து ...'கடவை' பூட்டாப் பிசகினாலே
தான் கடந்தேன்'....என்று
தப்பையுன்மேல் வைத்தபடி....
மோதியவள் காதலிலே
மூச்சோடு முகம் சிதைந்து
சாவது ஏன் நித்தம் ?
சாற்று என் சோதரமே...!





# உலகின் பாதி சொத்தை வைத்திருக்கும் எட்டுப்பேர்!

உலகின் பாதிச் சொத்துகள் 08 பேரிடம்தான் இருக்கிறது என்றால் நம்புவீர்களா? ஆனால், அதுதான் உண்மையாகும்.

சர்வதேச ரீதியாக முன்னணியிலுள்ள பெரும் பணக்காரர்களின் சொத்து மதிப்பு தொடர்பாக ஒக்ஸ்பாம் நிறுவனம் ஆய்வொன்றினை மேற்கொண்டு அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில், உலகின் பொருளாதார வளர்ச்சி என்பது வெறும் எட்டு நபர்களை பொறுத்ததாக உள்ளது என்றும், உலகின் 50 சதவீத சொத்துக்கள் அந்த எட்டு பேரிடமே இருப்பதாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

ஒக்ஸ்பாம் அறிக்கையின்படி, உலகப் பொருளாதாரத்தை ஆளும் அந்த எட்டு உச்ச பணக்காரர்களில் ஒருவர் பில் கேட்ஸ் ஆவார். மைக்ரோசொப்ட் நிறுவனரான இவரின் சொத்து மதிப்பு 75 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். (இலங்கைப் பெறுமதியில் 11 லட்சத்து 46 ஆயிரத்து 225 கோடி ரூபாய்).

மற்றைய பணக்காரர்களின் விபரம் வருமாறு;

1. ஸ்பெயின் தொழில் அதிபரான அமென்ஷியோ ஓர்டேகா என்பவராவார். இவரின் சொத்து மதிப்பு 67 பில்லியன் அமெரிக்க டொலர் ஆகும்.
2. அமெரிக்க பங்குச் சந்தை முதலீட்டாளரான வாரன் பபெட் என்பவராவார். இவரின் சொத்து மதிப்பு 60.8 பில்லியன் அமெரிக்க டொலர்.
3. மெக்சிகோ தொழிலதிபர் கார்லோஸ் ஸ்லிம் ஹெலு என்பவர். இவரின் சொத்து மதிப்பு 50 பில்லியன் அமெரிக்க டொலர்.
4. அமேசான் டொட்கொம் நிறுவனரான ஜெப் பெசோஸ். இவரின் சொத்து மதிப்பு 45.2 பில்லியன் அமெரிக்க டொலர்.
5. பேஸ்புக் நிறுவனர் மார்க் ஸுகர்பெர்க். இவரின் சொத்து மதிப்பு 44.6 பில்லியன் அமெரிக்க டொலர்.
6. ஆரக்கிள் நிறுவனர் லேரி எலிசன். இவருடைய சொத்து மதிப்பு 43.6 பில்லியன் அமெரிக்க டொலராகும்.
7. மைக்கேல் ப்ளூம்பெர்க் எனும் தொழிலதிபர். இவரின் சொத்து 40 பில்லியன் டொலர் மதிப்புடையதாகும்.

உலக அளவில் தனிப்பட்ட நாடுகளை எடுத்துக் கொண்டால், ரஷ்யாவில்தான் அதிகளவில் சமநிலையற்ற பொருளாதார போக்கு நிலவுவதாக ஒக்ஸ்பாம் அமைப்பு தெரிவித்துள்ளது. ரஷ்யாவின் 74.5 சதவீத பொருளாதார வளர்ச்சியினை 01 சதவீதமான ரஷ்ய செல்வந்தர்கள் மட்டும் அனுபவித்து வருகிறார்கள்.

அமெரிக்காவின் ஒட்டுமொத்த செல்வத்தின் 42.1 சதவீதம், 01 சதவீத அமெரிக்க செல்வந்தர்களிடம் உள்ளது. இந்தியாவைப் பொறுத்தவரை, 58 சதவீத செல்வம் 01 சதவீத பணக்காரர்களிடம் இருக்கிறது.

# கடைசியில் ஒரேயொரு பெண்ணை திருமணம் செய்தார்!

தமிழகத்தின் விருதுநகர் மாவட்டம் திருச்சுழி அருகே இரு பெண்களை திருமண செய்ய முயன்ற வாலிபர், இறுதியில் ஒரு பெண்ணை மட்டும் மணந்துள்ளார். வட்ஸ்அப்பால் பரவிய செய்தியால் அவரது ஆசையில் மண்விழுந்து விட்டது.

ராமமூர்த்தி(31) ஆடு மேய்த்து வருகிறார். பெற்றோர் இறந்துவிட்டதால் அக்கா வீட்டில் வளர்ந்து வந்தார். அக்கா மகளான பி.காம். படித்து முடித்த ரேணுகாதேவி(21) என்பவரையும், மற்றொரு அக்கா அமுதவள்ளியின் மகளையும் ஒரே மேடையில் திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டது. இதற்காக திருமண பத்திரிகை அச்சடிக்கப்பட்டு உறவினர்களுக்கும் வழங்கப் பட்டன.

இத்தகவல் சமூக வலைதளங்களில் பரவியதால் பரபரப்பு ஏற்பட்டது. அதையடுத்து, ஊர் பெரியவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி ராமமூர்த்திக்கு ரேணுகாதேவியை மட்டும் திருமணம் செய்து வைக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி ராமமூர்த்தி



ரேணுகாதேவி திருமணம் குடும்பத்தார், ஊர் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் கடந்தவாரம் நடைபெற்றது.


பரபரப்பாக பேசப்பட்ட ராமமூர்த்தி திருமணத்தை பார்க்க அப்பகுதி கிராம மக்கள் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

# பிள்ளையாரை காப்பாற்றிய வெள்ளைக்காரர்கள்!

விநாயகர் சதுர்த்தியன்று விநாயகர் சிலைகளை கடலில் கரைப்பது வட இந்தியர்களின் வழக்கம். இப்படி கடலில் வீசப்பட்ட பிள்ளையார் சிலையை யாரோ கடலில் மூழ்குகிறார்கள் என நினைத்து மீட்புகுழுவினர் காப்பாற்றிய சுவாரஸ்ய சம்பவம் நடந்துள்ளது. இங்கிலாந்தின் சசெக்ஸ் பகுதியில் இந்த சம்பவம் நடந்துள்ளது.

விநாயகர் சதுர்த்தியிலன்று இங்கிலாந்தின் சசெக்ஸ் பகுதியிலுள்ள வட இந்தியர்கள் பிள்ளையார் சிலைகளை கடலில் வீசியிருக்கிறார்கள். ஒரு சிலை கடலில் அடித்து செல்லப்பட்டுள்ளது. கிழக்கு சசெக்ஸ் கடற்பரப்பில் ஒபின்தீன் என்னுமிடத்தில் இதை பார்த்த யாரோ ஒருவர், கடலில் ஒருவர் மூழ்கிக் கொண்டிருப்பதாக நினைத்தார். அவருக்கும் நீச்சல் தெரியாது. பொலிசாரின் அவசர எண்ணை தொடர்பு கொண்டு, கடலில் ஒருவர் மூழ்கிக் கொண்டிருக்கிறார், அவரை மீட்டெடுங்கள் என அலறியிருக்கிறார். உடனடியாக அந்த இடத்திற்கு இரண்டு அனர்த்த மீட்பு தொண்டுக் குழு விரைந்துள்ளது. தொலைவில் யாரோ ஆகிருதியான ஒருவர் மூழ்கிக் கொண்டிருப்பதாக நினைத்த அவர்கள், அருகில் சென்ற பின்னர்தான், மூழ்கிக் கொண்டிருப்பது மனிதனல்ல, கடவுள் என்பதை உணர்ந்தனர்.

கடலில் மனிதர்கள் மூழ்கினால் கடவுள் காப்பாற்றுகிறாரோ இல்லையோ, கடவுளை மனிதர்கள் பத்திரமாக பார்த்துக்கொள்கிறார்கள்!



# வித்தியாச காதல்!

இங்கிலாந்தைச் சேர்ந்த 21 வயது லாரென் அட்டெர்லியும் 22 வயது மிட்செல் லாயிடும் முன்னாள் காதலர்கள். 2014ம் ஆண்டு ஆரம்பித்த இவர்களது காதல், இரண்டே மாதங்களில் முடிவுக்கு வந்துவிட்டது. இந்தப் பிரிவை லாரெனால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை. ஏமாற்றம் பொறாமையாக மாறியது. தன்னைக் காதலிக்கவில்லை என்றாலும் பரவாயில்லை, வேறு எந்தப் பெண்ணையும் காதலிக்கக்கூடாது என்றார். அதற்கு லாயிட் ஒப்புக்கொள்ளவில்லை. பொறாமை பழிவாங்கும் எண்ணமாக மாறியது.

சில நாட்களில் லாயிட் இமெயிலுக்கு, காவல்துறையிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. 'உங்கள் மீது மோசடிப் புகார் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. புகார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்றால் லாரென் சொல்வதுபோல் நடந்துகொள்ளுங்கள். உங்கள் நடவடிக்கைகளை நாங்கள் கண்காணித்துக்கொண்டே இருப்போம். இதை அலட்சியப்படுத்தும் பட்சத்தில் விளைவுகள் மோசமாக இருக்கும்' என்று எழுதப்பட்டிருந்தது. லாரென் குடும்பத்துக்கு நெருங்கிய நண்பர் ஒருவர் காவல்துறையில் உயர் அதிகாரியாக இருப்பதைத் தெரிந்துகொண்ட லாயிட், பயந்துவிட்டார்.

அன்று முதல் லாரென் சொல்வதை எல்லாம் கேட்க ஆரம்பித்தார். தன் அலுவலகத் தோழிகளுடன் கிறிஸ்துமஸ் விருந்தில் கலந்துகொண்ட அன்று, 'நீ சொன்னதை மீறி விட்டாய். எந்தப் பெண்ணுடனும் பேசவோ, பழகவோ கூடாது என்பதுதான் உனக்கு விதிக்கப்பட்ட தண்டனை. இனிஒருமுறை இப்படி நடந்தால் லட்சக்கணக்கில் அபராதம் செலுத்த வேண்டியிருக்கும். இதுபற்றி யாரிடமாவது பேசினால் விளைவுகள் இன்னும் மோசமாகிவிடும்' என்று எச்சரித்து மெயில் வந்திருந்தது. லாயிட் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளானார்.

பெண்களிடம் பேசக்கூடாது, பழகக்கூடாது என்ற நிபந்தனைகளைத் தொடர்ந்து, கேளிக்கை விடுதிகளுக்குச் செல்லக்கூடாது, நண்பர்களைப் பார்க்கக்கூடாது என்றெல்லாம் சொல்லச் சொல்ல, லாயிட் மனம் உடைந்துபோனார். ஃபேஸ்புக் மூலம் நண்பர்களிடம் பேசினாலாவது ஆறுதல் கிடைக்கும் என்று முயற்சி செய்தார். அதற்கும் தடை என்று மெயில் வந்தது. சமீபத்தில் தன் அம்மா, தங்கையுடன் உணவு விடுதிக்குச் சென்றார். அன்றும் இந்தச் செயலைக் கண்டித்து மெயில் வந்தது. 'இந்தக் குற்றத்துக்கு 3 லட்சம் ரூபாய்தான் அபராதம். ஆனால் மீண்டும் மீண்டும் செய்த தவறையே செய்துகொண்டிருப்பதால் 12 லட்சம் ரூபாயை அபராதமாகச் செலுத்த வேண்டும்' என்று இருந்ததைப் பார்த்து லாயிட் பொறுமையிழந்தார்.

இரண்டு ஆண்டுகள் தான் அனுபவித்துக்கொண்டிருக்கும் கொடுமைகளுக்கு முடிவு கட்டிவிட எண்ணினார். நண்பர்களிடம் விஷத்தைச் சொன்னார். அவர்கள் அதிர்ச்சியடைந்தனர். இதுவரை நேரிலோ, தொலைபேசியிலோ பேசாத ஒருவரை எப்படிக் காவல் துறை அதிகாரி என்று நம்பியிருக்கிறாய் என்று கடிந்துகொண்டனர். உடனே காவல் துறைக்குச் சென்று விஷயத்தைக் கூறினர். குற்றம் சுமத்தப்பட்டவரை மெயில் அனுப்பி காவல்துறை எச்சரித்துக்கொண்டிருக்காது, இவை எல்லாம் போலி மெயில்கள் என்று விளக்கினார் காவல் துறை அதிகாரி. லாரென் கைது செய்யப்பட்டார். அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. 9 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் 'பிடிக்கவில்லை' என்றால் அதை ஏற்றுக்கொள்வதுதானே நாகரிகம்!



வாரத்தில் சில நாட்கள் மட்டுமே வேலை நாட்கள்
ஆனால் மாத்தில் 40,000.00ரூபா வரை சம்பாதிக்கலாம்
இளைஞர்கள், யுவதிகள் விண்ணப்பங்களை
அனுப்பலாம், உயர்கல்வி கற்றக்கும் மாணவர்களுக்கும்
பகுதி நேர வேலை வாய்ப்பு

விண்ணப்ப முடிவு திகதி 31/08/2017

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

நிர்வாகப் பணிப்பாளர் (தீபம் வாரமலர்)
நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்ரட்
989/1 பருத்தித்துறை வீதி ,கல்வியங்காடு
நல்லூர். யாழ்ப்பாணம் 0768255560,0214927561

WELLA

ஆண், பெண் இருபாலரும் சிறந்த
முறையில் சிகை அலங்காரத்தை
செய்து கொள்ள...



* Facial
* Strighting
* Bleaching
* Face Massaging
* Threading

WELLA
Hair dressing
LADIES/GENTS
08, New Market, Kalvijankadu, Jaffna
077 658 4453, 021 205 4116

தீபம்
செய்திகள்



இப்போது புதிய வடிவமைப்புடன் விறு விறுப்பான
செய்திகளுடன் வாரத்தில் எழு நாட்களும் (24 X 7)
வலம் வருகின்றது.

தீபம்

நீங்கள் உடனுக்குடன் பார்வையிட
www.deepamtv.asia

NCT
TRANSPORTERS





No.350,Navalar Road, Jaffan
0212223509
0212227904

NCT TRANSPORTERS.
Jaffan-Kilinochchi -Colombo
No-71,wolfendhal street
Colombo -13
0112336186

உங்கள் பொருட்களை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்க்கும்
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்க்கும் மற்றும் கிளிநொச்சிக்கும்
குறைந்த செலவில் எடுத்து செல்ல...


Venus Aqua
RO Systems
வீனஸ் எண்ரப்பிறைசஸ்
Venus Enterprises
☆ All RO Domestice
☆ Softener Plant
☆ Iron Remover Plant
☆ Mineral water Plant
☆ STP,ETP,Plant
☆ Panel board
☆ UV,Ozonator
All Spare Parts Available
250 LPH
All Manufacture & Service
50 LPH
VENUS AQUA
RO SYSTEMS
Venusroslk@gmail.com
Office : 0212217744
0757227378
+91 9094708848
No.110 Manipay Road,Jaffna.


SHIYAMA
SHIYAMA
BOOK SHOP
பாடசாலை மாணவர்களுக்கான
உபகரண பொருட்க்கள்,
மற்றும் அலுவலக பொருட்களை
மலிவு விலையில்
பெற்றுக்கொள்ள
No: 8/A, Vihara Lane,
wellawatte
Colombo - 06
Tel: 011 2081810
Mob: 077 6941112


Jaffna
Rent a car
வாருங்கள் தருகிறோம்
நீங்களே ஓட்டிச் செல்லலாம்
Point Pedro
Road, Nallur,
Kalviyankadu.
021 222 3339,
0777 484820